Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 296

ஞாயிற்றுக்கிழமை
18 செப்ரெம்பர் 2022

புரட்டாதி 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+08

விலை: 60/=

## இந்தியா மௌனம்

ஜெனிவா, செப். 18
இலங்கைக்கு எதிராக பிரிட்டன் தலைமையிலான நாடுகளால் கொண்டுவரப்படவுள்ள பிரேரணை 04

# ஹெரோயினின் பிடியில் யாழில் 20 கிராமங்கள்!

## இதுவரை 10 பேர் சாவு!

## போதைக்கு அடிமையான 320 கைதிகள்!!

**வெளியாகின திடுக்கிடும் தகவல்கள்**

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 18

உயிர்க்கொல்லிப் போதைப் பொருளான ஹெரோயினைப் பயன்படுத்திய 10 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். இதற்கு அடிமையான 320 பேர் வரையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் யாழ். போதனா மருத்துவமனையில் ஹெரோயினுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சையளிக்கும் நிலையம் திறக்கப்பட்டு, இரண்டு மாதங்களுக்குள் 134பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், யாழ். மாவட்டத்தில் 20 கிராமங்களைச் சேர்ந்த பலரும் ஹெரோயின் பாவனைக்கு முற்றாக அடிமையாகியுள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவலும் வெளிவந்துள்ளது. ஹெரோயினுக்கு அடிமையானவர்களில் அதிகமானோர் 18 - 23 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்பதுடன், யாழ். நகரிலுள்ள பிரபல பாடசாலைகளின் மாணவர்களும் இதற்குப் பழக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. 15

## ஹெரோயினுக்கு அடிமையான

### ஆண்கள் மூவரால் 15 வயதுச் சிறுவன் துஷ்பிரயோகம்

யாழ்ப்பாணம், செப். 18
கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில், உயிர்க்கொல்லி போதைப் பொருளான ஹெரோயினுக்கு அடிமையான 25க்கும் 27 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்கள் மூவரால், அந்தப் பகுதியைச் சேர்ந்த 15 வயதுச் சிறுவன் ஒருவன் 15

### 14 வயதுச் சிறுவனால் 7 வயதுச் சிறுமி வன்புணர்வு

யாழ்ப்பாணம், செப். 18
கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியொன்றில், உயிர்க்கொல்லிபோதைப் பொருளான ஹெரோயினுக்கு அடிமையான 14 வயதுச் சிறுவன் அதே பகுதியைச் சேர்ந்த 7 வயதுச் சிறுமியை வன்புணர்ந்துள்ளான். 15

## வடக்கு – கிழக்கு தமிழரின் நிலத்தொடர் துண்டிப்பதை இந்தியா அனுமதிக்காது

### கோணேஸ்வரர் ஆக்கிரமிப்பும் நல்லதுக்கல்ல: ஜனாதிபதி ரணிலுக்கு சம்பந்தன் காட்டமான கடிதம்

யாழ்ப்பாணம், செப். 18
இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் வரலாற்றுரீதியான வாழ்விடப் பகுதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. இங்குள்ள மாவட்டங்களைக் கூறுபோட்டு இன நிலத்தொடர்ச்சியை துண்டிக்கும் நடவடிக்கையை இந்தியா ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டாது. 04

## கோணேஸ்வர ஆக்கிரமிப்பு; தடுப்பதற்காக யாத்திரை

### யாழ்ப்பாணத்தில் இருந்து ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 18
திருகோணமலை, திருக்கோணேஸ்வரம் ஆலய ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் இருந்து அடியவர்களின் 04

## பொதுக்கட்டமைப்பை உருவாக்க 7 பேர் கொண்ட ஏற்பாட்டுக்குழு

யாழ்ப்பாணம், செப். 18
தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கான பொதுக்கட்டமைப்பு குழு உருவாக்கப்படுவதற்கான ஏற்பாட்டுக்கு முன்னாள் போராளி பஷீர் காக்கா தலைமையில் 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை பொதுக்கட்டமைப் 04




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்களின் தியாகங்களில் அரசியல் இலாபம் வேண்டாம்

## 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' அமைப்பு வலியுறுத்து

**யாழ்ப்பாணம், செப். 18**

**தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகமுக்கியமான திருப்பத்தை ஏற்படுத்திய அஹிம்சை போராட்டத்தின் உச்சத்தை தொட்டவர் தியாகி திலீபன். காந்திய தேசத்துக்கே அஹிம்சையை போதித்த தலைமகன். தியாகத்தின் சிகரமான திலீபனின் 35ஆவது ஆண்டு நினைவு தின ஒழுங்குபடுத்தல் நிகழ்வுகளில் இடம்பெற்ற கட்சி அரசியல் ரீதியான முறுகல்நிலை, தமிழ்த் தேசியத்தின் பால் பற்றுறுதி கொண்ட அனைவருக்கும் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது -இவ்வாறு தெரிவித்துள்ளது 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' மக்கள் பேரெழுச்சி இயக்கம்.**

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

தியாகி திலீபன் அறப்போரை நடத்தி ஆகுதியான நல்லூர் மண்ணிலேயே இத்தகைய சம்பவங்கள் நடைபெற்றமை மிக வேதனை அளிப்பதாகவுள்ளது. அளவிட முடியாத தியாகத்தை எவருமே தமது வாக்கு அரசியலுக்குப் பயன்படுத்துவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அத்துடன் நினைவு நிகழ்வின்போது ஒரு மாவீரரின் தந்தையும், தியாகி திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தில் கூட இருந்தவரும், நீண்ட நெடிய போராட்ட வரலாற்றைக் கொண்ட மூத்த போராளியுமான ஒருவர் அவமதிக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஒரு மாவீரரின் வணக்க நிகழ்வில் இன்னொரு மூத்த போராளியை அவமதிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பார்த்தீபன் இன்னமும் பசியுடனேயே இருக்கின்றான். 35 வருடங்கள் கடந்தும் தியாகி திலீபனின் கோரிக்கைகள் நிறைவேறாத நிலையில், எமது உரிமைகளை இழந்து, எமது நிலங்கள் எங்கள் எதிரியால் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்படும் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் உள்ளோம்.

தமிழினமே ஓரணியாக அணிதிரண்டு போராடவேண்டிய காலத்தின் கட்டாயத்தில் உள்ளோம். ஆகவே அனைவரும் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான விரும்பத்தகாத சம்பவங்களைத் தவிர்த்து, அனைவரும் நினைவெழுச்சி நிகழ்வுகளின் புனிதத்தை களங்கப்படுத்தாத வகையில் நடந்து கொள்ளுமாறு உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நினைவெழுச்சி நிகழ்வுகள் எந்தவொரு அரசியல் கட்சியினதும் தனியுரிமை சொத்தல்ல. இந்த நிகழ்வுகள் மக்கள் மயப்படுத்தப்பட்டு மக்களின் முன்னெடுப்பில் நடைபெறுவதாகவே அமைய வேண்டும். தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பான முன்னெடுப்புகள் நடைபெறுவதாக அறிகின்றோம். ஆயினும் நாம் மேலே குறிப்பிட்டதுபோல் நினைவெழுச்சி நிகழ்வுகள், அதற்கான பொதுக்கட்டமைப்பு என்பன கட்சி அரசியலை கடந்து பொது சமூகமாகிய மாவீரர்களின் பெற்றோர், பாதிக்கப்பட்ட தரப்பினர்கள், மதத் தலைவர்கள், புத்திஜீவிகள், மாணவர்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் அடங்கியவர்களின் முன்னெடுப்பிலேயே கட்டமைக்கப்படவேண்டும்.

இவ்வாறான முன்னெடுப்பை மேற்கொள்ளும் பொதுச்சமூக தரப்புக்கே எமது பரிபூரணமான ஆதரவு இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். இதற்கு மேலும் இந்த விடயத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை தீர்த்துக்கொள்ளும் களமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டாமென அனைத்துத்தரப்பினரிடமும் உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம் -என்றுள்ளது.

(ம-26)



## மகாராணியின் இறுதிச்சடங்கு: 350 கோடி ரூபா வாரியிறைப்பு!

லண்டன், செப். 18

எலிசபெத் மாகாராணியின் இறுதிச்சடங்கு நாளை நடைபெறவுள்ள நிலையில், இந்த இறுதிச் சடங்குக்காக மட்டும் இலங்கை மதிப்பில் சுமார் 350 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த 350 கோடி ரூபாவில், பாதுகாப்புப் பணிகளுக்காக மட்டும் சுமார் 150 கோடி ரூபா வரையில் செலவுசெய்யப்படவுள்ளது. உலகத் தலைவர்கள் பலர் இறுதிச்சடங்கில் பங்கேற்பதால் உச்சக்கட்டப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ராணியின் சடலம் ஊர்வலமாக இன்று எடுத்துச் செல்லப்பட்டு, அவருடைய கணவரின் கல்லறைக்கு அருகே அடக்கம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம)

## பதில் நிதியமைச்சர் சியம்பலாப்பிட்டிய

கொழும்பு, செப். 18

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய பதில் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(எ-இ)

### மணிவண்ணன் தரப்புக்கு-

# நினைவேந்தல் கட்டமைப்பை உருவாக்கும் தகுதி உள்ளதா?

## முன்னணியின் பேச்சாளர் சுகாஷ் கேள்வி

யாழ்ப்பாணம், செப். 18

அரசியல் சார்ந்த, அதுவும் தியாக தீபத்தின் கொள்கைகளுக்கு முற்றிலும் நேரெதிரான முரணான கொள்கைகளைக் கொண்டவர்களால் அமைந்துள்ள யாழ். மாநகர சபைக்குத் தியாக தீபத்துக்கான பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் தார்மீக ரீதியான தகுதியோ அருகதையோ கிஞ்சித்தும் உண்டா? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளரான க.சுகாஷ்.

திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுப்பதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு இடையில் இந்தமுறை கடும் பிடுங்குப்பாடுகள் இடம்பெற்றன. மணிவண்ணன் தலைமையிலான அணியினருக்கும், கஜேந்திரகுமார் தலைமையிலான அணியினருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளை அடுத்து, நினைவேந்தலை முன்னெடுப்பதற்கு 'பொதுக்கட்டமைப்பை' உருவாக்க வருமாறு யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் மணிவண்ணன் அழைப்பு விடுத்திருந்தார்.

இதையடுத்து அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே சுகாஷ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

'பொதுக் கட்டமைப்பு' என்பது அரசியல் சாராத பொதுவான் நடுநிலையான தரப்புக்களால் உருவாக்கப்படுவது. தியாக தீபத்தை நினைவேந்தலுக்கான உண்மையான பற்றினால் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதாக இருந்தால், அதற்கான ஏற்பாடுகள் நினைவேந்தல் நாள்கள் ஆரம்பமாக முன்னரே செய்யப்பட்டிருக்குமா? அல்லது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நினைவேந்தல் குழுவினால் நினைவேந்தல் ஒழுங்கமைப்புகள் செய்யப்பட்டு நினைவேந்தல் நடைபெற்றுவரும் நிலையில் இதைக் குழப்பும் வகையில் செயற்படுமா? - என்றுள்ளது.

(ம-26-27)


31ம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்

மண்ணில் 08 . 06 . 1946



விண்ணில் 20 . 08 . 2022

கடந்த 20.08.2022 சனிக்கிழமை அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவர்

அமரர் கனகசபை பத்மநாதன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை 19.09.2022 திங்கட்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன்அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடன்வந்து உதவியோருக்கும், தொலைபேசி மற்றும் நவீன தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் மலர் வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள், பதாகைகளூடாகவும் எங்கள் துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும். இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




நீங்கள் உங்களுக்கே உரிய தனித்தன்மைகளை உடைய ஒரு விசேஷித்த நபர் என்பதை நம்புகின்றோம். அதனாலேயே உங்கள் வாழ்வின் விலை மதிக்க முடியாத தருணங்கள் அனைத்திலும் உங்களுடனிருந்து ஒரு மகிழ்ச்சியான வங்கி அனுபவத்தை உங்களுக்கு வழங்குகின்றோம்.

**HNB. மகிழ்வு தரும் வங்கி அனுபவம்.**

HNB
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

0112 462 462

hnbconnect@hnb.lk facebook.com/hnbplc twitter.com/hnbplc instagram.com/hnbsrilanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச் ரேட்டிங் AA-(lka) ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி. Hatton National Bank PLC - PQ 82

# யாழ். மாவட்ட கரப்பந்தாட்டம் இன்று முதல் ஆரம்பமாகிறது!

யாழ்ப்பாணம், செப். 18

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் தமது அங்கத்துவ கழகங்களுக்கு இடையில் வருடாவருடம் நடத்துகின்ற கரப்பந்தாட்டத்தொடர் இன்று முதல் ஆரம்பமாகின்றது.

2021ஆம் ஆண்டுக்கான தொடர், கொரோனாத் தொற்றுக் காரணமாக இடம்பெறாத நிலையில் இந்தமுறை தொடருக்குப் பலத்த எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

நடப்பு வருடத் தொடர், இன்று பெண்கள் பிரிவு போட்டியுடன் ஆரம்பமாகின்றது. புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்ற இந்தப் போட்டியில் 12 அணிகள் பங்கெடுக்கின்றன.

இந்தமுறை போட்டித்தொடரின் விசேட அம்சமாக ஆண்கள் 'பி' பிரிவில் பிராந்திய ரீதியிலான தகுதிச் சுற்று அடிப்படையில் அணிகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

வலிகாமம், தீவகம், கோப்பாய், யாழ்ப்பாணம், வடமராட்சி மற்றும் தென்மராட்சி என ஆறு பிராந்திய போட்டித் தொடர்களிலிருந்து 10 அணிகளும், அவற்றுடன் நாயன்மார்கட்டு - பாரதி மற்றும் அச்சுவேலி - விக்னேஸ்வரா அணிகள் உள்ளடங்கலாக 12 அணிகள் கிண்ணத்துக்காகப் போட்டியிடுகின்றன.

பிரதான போட்டித்தொடரான 'ஏ' பிரிவு ஆண்களுக்கான போட்டித்தொடரில் மாவட்டத்தில் முன்நிலையில் தரப்படுத்தப்பட்டுள்ள 10 அணிகள் போட்டியிடுகின்றன.

'ரவுண்ட் ராபின்' முறையில் இடம்பெறும் முதலாவது சுற்றில் அணிகள் தலா ஐந்து அணிகள் கொண்ட இரு குழுக்களாக போட்டியிடும், குழு நிலை போட்டிகளின் நிறைவில் ஒவ்வொரு குழுவிலும் முதலிரு இடங்களை தமதாக்குகின்ற அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெறும்.

முதலாவது சுற்றுக்காக 'ஏ' பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர், உடுப்பிட்டி நவஜீவன்ஸ், புத்தூர் வளர்மதி, சண்டிலிப்பாய் இந்து இளைஞர், பன்னாலை கணேசன் ஆகிய அணிகளும் குழு 'பி' பிரிவில் ஆவரங்கால் மத்தி, தொண்டைமானாறு கலையரசி, புத்தூர் கலைமதி, புத்தூர் சென்றல் ஸ்ரார் மற்றும் மட்டுவில் மோகனதாஸ் அணிகளும் போட்டியிடுகின்றன. 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான போட்டிகள் இன்று முதல் அடுத்துவரும் சனிக்கிழமை வரையில் புத்தூர் வளர்மதி, புத்தூர் கலைமதி, ஆவரங்கால் இந்து இளைஞர் மற்றும் ஆவரங்கால் மத்தி ஆகிய விளையாட்டுக் கழக மைதானங்களில் இரவு நேர போட்டிகளாக இடம்பெறவுள்ளன. (ம)

## வடக்கு - கிழக்கு...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

திருக்கோணேஸ்வரம் விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள் ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள் வருமாறு:-

**திருகோணேஸ்வரம்**

திருகோணேஸ்வரத்துக்குள் நுழைவதற்கான பிரெட்ரிக் கோட்டையின் ஒரு பகுதியில் தங்கியிருந்த இராணுவத்தினர் அங்கு புத்தர் சிலையொன்றை நிர்மாணித்தனர்.

திருக்கோணேஸ்வரத்தையும் புத்த பெருமானையும் வழிபட விரும்பிய மக்கள் இப் பிரதான நுழைவாயிலின் வழியாக கோட்டையினுள் சென்று வழிபாடு செய்தனர். கோட்டைக்குள் நுழைந்து புத்த பெருமானையும் கோணேஸ்வரரையும் வழிபடுவதற்கு வேறுவழிகள் ஏதும் இருக்கவில்லை.

அண்மைக்காலங்களில் புத்தபெருமானின் சிலைக்கும் அங்கிருந்து திருக்கோணேஸ்வரத்துக்கும் ஒரு புதிய பாதை திறக்கப்பட வேண்டுமென்று முன்மொழிவொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தேவையற்றது என்பதோடு, ஆள்கள் இவ் வழியில் அத்துமீறுவதற்கும் அக் காணியில் தங்கியிருப்பதற்கும் வழிவகுக்கும்.

அது திருக்கோணேஸ்வரம் கோயில் மற்றும் புத்த பெருமானின் சிலை ஆகியவற்றின் புனிதத்தன்மையும் பக்தி உணர்வும் குறைவடைவதற்கே வழிவகுக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரினால் இரத்தினபுரியிலிருந்து சில வர்த்தகர்கள் கொண்டுவரப்பட்டு, கோணேஸ்வரத்துக்கான பாதையில் அமர்த்தப்பட்டனர். அது இப்பகுதியின் புனிதத்தன்மையும் பக்தி உணர்வும் குறைவடைவதற்குக் காரணமாகியது.

புத்தபெருமான் சிலை உள்ள பகுதியில் திருக்கோணேஸ்வரம் வரையிலான இப் புதிய பாதை திறப்பு நிறுத்தப்பட வேண்டுமென நான் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன். இல்லையேல் இது தீங்கிழைக்கப்படுவதற்கே வழிவகுக்கும்.

**நிலத் துண்டிப்பு**

ஒரு சர்வதேச உடன்படிக்கையான இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின்கீழ், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழர்களினதும் தமிழ்பேசும் மக்களினதும் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பெரும் நிலப்பரப்பு, திருகோணமலை மாவட்டத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக வட மத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுர மாவட்டத்திலிருந்து ஒரு பெரும் நிலப்பரப்பு பதிலீடு செய்யப்படவுள்ளது என எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதன்மையான நோக்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இனத்துவ நிலத் தொடர்ச்சியைத் துண்டிப்பதாகும்.

பொலநறுவை மாவட்டத்திலிருந்து பெரும் நிலப்பரப்பொன்றை கிழக்கு மாகாணத்துக்குள் கொண்டுவரும் அதே வேளை, கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலிருந்து பெரும் நிலப்பரப்பொன்றை பொலநறுவை மாவட்டத்தோடு இணைக்கும் அதே போன்றதொரு முன்மொழிவு திருகோணமலையின் தெற்குப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இது, பாரதூரமான எதிர்வலைகளையும் உலகில் இரண்டாவது மிகச் சிறந்த துறைமுகமாகக் கருதப்படும் திருகோணமலைத் துறைமுக்துக்குப் பாரதூரமான பின்விளைவுகளையும் ஏற்படுத்தக் கூடிய சாத்தியத்தோடு, வடக்கு மற்றும் தெற்கின் கடல்சார் எல்லைகள் ஊறுபடுவதற்கும் வழிவகுக்கும்.

இப் பகுதிகளில் வாழுகின்ற தமிழ்ப் பேசும் மக்களோ அல்லது எமது அயல் நாடோ அல்லது மிக அருகிலுள்ள நாடுகளோ இந்த நடவடிக்கையை அங்கீகரிக்கப்போவதில்லை.

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கிலும் தெற்கிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையில் இனத்துவ நிலத் தொடர்ச்சியை இல்லாது செய்வதே இதன் முழு நோக்கமாகும்.

கிழக்கு மாகாணத்தை ஒரு சிங்கள பெரும்பான்மை மாகாணமாக மாற்றியமைப்பதும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான இனத்துவ நிலத் தொடர்ச்சியைத் துண்டிப்பதும் பேரினவாத சிங்கள அரசுகளின் நீண்டகால குறிக்கோளாக இருந்து வருகின்றது.

இம் முயற்சிகள் அனைத்துக்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டமும் தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையினராகக் கொண்டதாகும் என்பதோடு, எந்தவொரு மாவட்டமும் சிங்களப் பெரும்பான்மை மாவட்டமாக இல்லை என்பதுவுமே யதார்த்தம்.

இது, வடக்கு - கிழக்கு மாகாணங்களை தமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களாகக்கொண்ட தமிழர்கள் தமிழ்பேசும் மக்கள் ஓர் ஐக்கிய மற்றும் பிரிபடாத இலங்கை என்ற வரையறைக்குள் உள்ளக சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடைய ஒரு மக்கள் குழுவினர் ஆவர் என்ற நிலைப்பாட்டுக்கு அமைவானதாகும். இதனையே தமிழர்கள் - தமிழ் பேசும் மக்கள் - ஓர் அரசியல் தீர்வாகக் கோரி நிற்கின்றனர்.

இந் நிலைப்பாடு 1956ஆம் ஆண்டிலிருந்து அனைத்து ஜனநாயகத் தீர்ப்புக்களிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரச்சினையை நீடிக்கச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைவிட, இந்த அடிப்படையில் இப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டுமென நான் பலமாக வலியுறுத்துகின்றேன்' - என்றுள்ளது. (அ-ஒ-22)

## இந்தியா...

தொடர்பில், பிரதான நாடுகளுடனான கலந்துரையாடல் ஜெனிவாவில் நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

அண்டை நாடான இந்தியா, இலங்கை தொடர்பில் எதுவிதக் கருத்தும் தெரிவிக்காமல் மௌனம் காத்துள்ளது.

பிரிட்டன் தலைமையில் இவ்வாறு கொண்டு வரப்பட்ட பிரேரணையை இலங்கை முற்றாக நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

## கோணேஸ்வர...

யாத்திரை நேற்றிரவு ஆரம்பமானது.

கடந்த 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூரிலுள்ள இந்து மாமன்றத்தின் அலுவலகத்தில், நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் ஒன்றுகூடிய சைவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் எடுத்த தீர்மானத்துக்கு அமைய இந்த யாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.

[illegible] வரலாற்றுச் சிறப்புமிக்க, தேவாரப்பாடல்பெற்றதலமானதிருக்கோணேஸ்வர ஆலய நிலம் சிறிலங்கா அரசாங்கத்தால் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அதைத் தடுக்கும் நோக்கிலான முதல் நடவடிக்கையாக இந்த யாத்திரை முன்னெடுக்கப்படுகிறது. (அ-ஒ-5)

## பொதுக்கட்டமைப்பை...

பொன்றை உருவாக்கி அதன் ஊடாக நிகழ்வு ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்கான ஆரம்பக் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாநகரசபை மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், யாழ்ப்பாண மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், மூத்த முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர் எனப் பல தரப்பினரும் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் கலந்துகொண்டவர்களின் கருத்து பகிர்வுகளைத் தொடர்ந்து முதல் கட்டமாக பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்காக மாவீரர்களின் தந்தையும் மூத்த போராளியான பஷீர் காக்கா தலைமையில் ஏழு பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் அரசியல் ஆய்வாளர் ஜோதிலிங்கம், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஜெசிந்தன், யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் மு.கோமகன், முன்னாள் அரசியல் கைதியான அரவிந்தன், முன்னாள் போராளியான செழியன் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.

இந்தக் குழுவானது எதிர்வரும் நாள்களில் மதகுருமார்கள், அரசியல் கட்சி தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கங்கள், பொது அமைப்புக்கள் என அனைத்து தரப்புக்களுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டு பொதுக்கட்டமைப்பின் உருவாக்கம், அதன் நோக்கம், எதிர்காலத்தில் அதன் செயற்பாடுகள் என்பன தொடர்பில் எடுத்துக்கூறி அவர்களையும் ஒன்றிணைத்து முழுமையான பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது. (அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நினைவேந்தல்களைப் பகடையாக்காதீர்!

தியாக தீபம் திலீபனை அஞ்சலிப்பது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினருக்கும், மணிவண்ணன் தலைமையிலான அணியினருக்கும் இடையில் ஏற்பட்ட பிடுங்குப்பாடுகளை அடுத்து, தமிழர் தாயகத்தில் நினைவேந்தல்களை– அஞ்சலிப்புகளை நடத்துவதற்கு ஒரு பொதுக்கட்டமைப்பின் அவசியம் அவசரமாக உணரப்பட்டது. இந்தநிலையில், பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்காக அழைப்பு விடுத்து, அதற்கான ஆரம்பக்கூட்டமொன்றையும் நடத்தி முடித்திருக்கின்றார் யாழ்ப்பாணம் மாநகர முதல்வரான மணிவண்ணன்.

தியாகி திலீபன் நீராகாரம்கூட அருந்தாமல் தன்னைக் கொஞ்சம் கொஞ்சமாக தமிழர் தாயகத்துக்காக ஆகுதி ஆக்கிய இடமும், அவருக்கான முதன்மைத் தூபி அமைந்துள்ள இடமும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆளுகைக்குள் இருக்கின்றன. அதற்காக திலீபனின் நினைவேந்தலை நடத்தும் உரித்து யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமாகிவிடாது. தமிழர் தேசத்தையும் தாண்டி பிரபஞ்சத்தின் எல்லை வரை அதிரச் செய்த ஒப்பற்ற தியாகத்தை நிகழ்த்திக் காட்டியவன் திலீபன். அப்படிப்பட்ட ஒரு தியாகியின் நினைவேந்தலை மாநாகரசபைக்குள் குறுக்குவதென்பது அதீத அபத்தம். அரசியல் செய்யாத அல்லது அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு பொதுமைப்பாடான கூட்டிணைவுதான் திலீபனின் நினைவேந்தல்களை நடத்துவதற்குத் தகுதியானது. அதுதான் தமிழர் தாயகத்தினதும் தியாகத்தின் எல்லைகளை ஆத்மார்த்தமாக நேசிப்பவர்களினதும் எதிர்பார்ப்பு – பேரவா எல்லாமும்.

யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதல்வர் என்ற தகுதியை வைத்தே மணிவண்ணன் நினைவேந்தலுக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்க அழைப்பு விடுத்திருந்தார். திலீபனின் நினைவேந்தல்களில் இந்தமுறை கருத்துக்களால் நேருக்குநேர் மோதிக்கொண்ட ஒரு தரப்பினரின் பிரதானியே அவர்தான். எனின், அவருடைய இந்த அழைப்பை எந்த அடிப்படையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஏற்றுக்கொள்வார்கள்? அவர்கள் இந்த 'நினைவேந்தல் கட்டமைப்பு' தொடர்பான பேச்சை புறக்கணிக்கவே செய்வார்கள். இவ்வாறு கட்சி அரசியல்களால் ஏற்படும் புறக்கணிப்புக்களின் பின்னர் ஏற்படுத்தப்படும் 'நினைவேந்தல் கட்டமைப்பு' எவ்வாறு 'பொதுக்கட்டமைப்பு' என்று கொள்ளப்படும்? என்பதுதான் இங்கு எழும் கேள்வி. இத்தனைக்கும், தமிழர் தாயகத்தில் கடந்த காலங்களில் படையினரின் கெடுபிடிகளுக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்ட நினைவேந்தல்களை, சிவாஜிலிங்கத்தினதும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரதும் கனதியான பங்களிப்பைத் தவிர்த்துவிட்டுப் பேசிவிட முடியாது. இதைத் தமிழர் தாயகம் நன்கு அறியும்.

பொதுக்கட்டமைப்பு என்ற சாயம் பூசப்பட்டு தங்களின் வாக்கு வங்கிக்காக அரசியல் கட்டமைப்புகளாக முன்னெடுக்கப்படும் நினைவேந்தல்களின் பின்னாலுள்ள பேராபத்து இதுதான். இந்தப் பேராபத்தில் தப்பித் தவறியும் வீழ்ந்துவிடக்கூடாது. ஏனெனில் அவை நினைவேந்தல்களுக்குள் அரசியல் நஞ்சை ஊறப்பண்ணி எல்லாவற்றையுமே கெடுத்துவிடும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் எவ்வாறு பொதுக் கட்டமைப்பு ஒன்றின்கீழ் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதோ அவ்வாறே தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலும் அரசியல் கலப்பற்ற பொதுக் கட்டமைப்பின்கீழ் முன்னெடுக்கப்பட வேண்டும். அவ்வாறான நினைவேந்தல்களுக்குத்தான் ஆத்மார்த்தமும் இருக்கும் – ஆயுளும் அதிகம்.

பார்த்தீபனைப் பகடையாக்கிவிடாதீர்கள். தியாகம் தாங்காது.

நாளொரு நல்வார்த்தை

"ஒரு சிறந்த தாய் நூறு ஆசிரியர்களுக்குச் சமமாவாள்" -ஜார்ஜ்ஹெர்பேர்ட்




# தமிழர்களுக்கு நீதிகிட்ட ஐ.நா.வில் வாக்கெடுப்பு!

## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் எடுத்துரைப்பு

**யாழ்ப்பாணம், செப். 18**

**ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 51 ஆவது கூட்டத்தொடரில், இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெறவும் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு நீதிகோரியும் சர்வதேச கண்காணிப்புடன் கூடிய பொதுவாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வலியுறுத்தியுள்ளது.**

கூட்டத்தொடரின் ஐந்தாம் நாளான நேற்று முன்தினம் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாத உத்தரவாதங்கள் தொடர்பிலான ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் அறிக்கை தொடர்பான கருத்தாடல் இடம்பெற்றது.

இதன்போதே நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அனைத்துலக விவகாரங்களுக்கான அமைச்சர் மகிந்தன் சிவசுப்ரமணியம் காணொலி வாயிலாக கலந்துகொண்டு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழர்கள் மீது இலங்கைத் தீவில் பெரும் அட்டூழியங்கள் நிகழ்ந்துள்ளன. இதுகுறித்த ஐ.நா.வின் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீண்டும் நிகழாத உத்தரவாதங்கள் தொடர்பிலான சிறப்பு அறிக்கையாளரது அறிக்கை மிகவும் முக்கியமானது. ஐ.நா.வின் உள்ளாய்வு அறிக்கையின்படி, இலங்கையில் போரின் இறுதி ஆறு மாதங்களில் சுமார் 70 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர் அல்லது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

தற்போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சிறிலங்காவின் சூழலை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துமாறு பரிந்துரைத்து அழைப்பு விடுத்திருந்தார். சிறிலங்காவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றுக்கு பரிந்துரைக்கப்படாவிட்டால், தமிழர் பகுதிகளில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் எந்தத் தயக்கமுமின்றி தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்படும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பேற்க வேண்டிய தேவை இல்லை என்ற நிலை உருவாகும்.

எனவே, நடைபெற்று வரும் ஐ.நா.கூட்டத் தொடரில் தமிழர்களின் நீதிக்கும் அரசியல் இறைமை நிலைநாட்டப்படவேண்டும். நீண்டகாலமாக நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை வலியுறுத்தியும் தமிழ் மக்களுக்கு எதிரான, கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு நீதிகோரியும் சர்வதேசத்தின் கண்காணிப்புடன் கூடிய பொது வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் - என்றார். (ச-இ)

## குடும்பமொன்றின் நாளாந்த உணவுச்செலவு 4,000 ரூபா!

கொழும்பு, செப். 18

ஐந்து பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு உணவு தேவைக்காக நாளாந்தம் 4 ஆயிரம் ரூபா செலவாகின்றது என்று மருத்துவம் மற்றும் சிவில் உரிமைகள் தொழிற்சங்க ஒன்றியத்தின் தலைவர் சமல் சஞ்ஜீவ தெரிவித்துள்ளார்.

இதனால் 5 வயதுக்குக் குறைந்த 27 ஆயிரம் சிறுவர்கள் கடும் போஷாக்கு குறைபாட்டுடன் காணப்படுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-14.இ)

நாளை 19.09.2022 திங்கட்கிழமை பூரட்டாதி - 02

சுபநேரம் : 12.03 - 01.33
ராகுகாலம்: 07.33 - 09.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ மு.வே.யோ.வாஞ்சிநாதன்

# திலீபனுடன் நான்காம் நாள்...



## 18.09.1987

கடந்த மூன்று நாள்களாக மேடையில் திலீபனுடன் சேர்ந்து ஒருசொட்டு நீர்கூட அருந்தாது இருந்தேன். மானசீகமாக திலீபனின் நட்புக்கு உயரிய மதிப்பளிப்பவன் நான். அதனால்தான் என்னால் எதுவும் அருந்தமுடியவில்லை. திலீபன் ஒன்றும் அருந்தவில்லையே, உண்ணவில்லையே என்ற வேதனைதான் என் வாய்க்கு பூட்டுப் போட்டதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

திலீபனின் உண்ணாவிரதச் செய்தி இலங்கையில் மட்டுமின்றி உலகம் முழுவதும் பரவத் தொடங்கியது. லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளில் இருந்தும் அரபு நாடுகளிலிருந்தும் தொலைபேசி அழைப்புகள் வந்து கொண்டிருந்தன. ஏன்? இந்தியாவின் தமிழகத்திலும் இந்தச் செய்தி, உணர்வு அலைகளைக் கொந்தளிக்கச் செய்தன.

▣ ▣ ▣ ▣ ▣

இன்று திலீபன் உண்ணாவிரதம் ஆரம்பித்து நான்காவது நாள், அவரது உடல் மிகவும் அசதியாகக் காணப்பட்டது. பயற்றங்காயைப்போல் வாடி வதங்கி கட்டிலின் மேல் அவர் சுருண்டுகிடந்த தோற்றம் பார்ப்பவர் நெஞ்சங்களைப் பதைபதைக்க வைத்தது.

அப்படியிருந்தும் அவர் இன்று மக்கள் முன் உரையாற்றினார். அவரின் உரை பின்வருமாறு:

"அன்பார்ந்த தமிழீழ மக்களே! விளக்கு அணையுமுன்பு பிரகாசமாக எரியுமாம். அதுபோல இன்று நானும் உற்சாகத்துடன் இருக்கிறேன் என்பது தெரிகிறது. இன்று தாராளமாகப் பேச முடிகிறது. போராடத் தயாராகுங்கள்! எனக்கு விடை தாருங்கள்! ஒருவரும் என்னை இந்தப் போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்க வேண்டாம். நானும் எனது தலைவரும் சேர்ந்து எடுத்த முடிவுதான் இது. மறைந்த போராளிகள் 650 பேருடன் சேர்ந்து 651ஆவது ஆளாகி மேலிருந்து பார்ப்பேன். எங்கள் உயிர் உங்களுடன் ஒட்டிவிடும். என்னைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். எனது அவயங்கள் செயலிழப்பதனால், இனிமேல் மனிதனாக வாழ முடியாது என்பது எனக்குத் தெரியும். எமது வீரர்கள் கொள்கைக்காக உயிரைக் கொடுப்பவர்கள். கொள்கைக்காக என்னைத் தொடர்ந்து வருவார்கள். அவர்களையும் தடுக்காதீர்கள். நாங்கள் ஐந்து ஆறுபேர் சாவதால் எந்தவித தீங்கும் வந்துவிடாது. மக்கள் புரட்சி வெடிக்கட்டும். நான் மூன்று தடவைகள் பேசியுள்ளேன். மூன்று தடவைகளும் ஒரே கருத்தைத்தான் பேசியுள்ளேன்" என்றார்.



வெகுநேரத்தின் பின் கண் விழிந்த திலீபன், எழும்புவதற்குச் சக்தியின்றி படுக்கையிலேயே கிடக்கிறார். மைதானம் சனக்கூட்டத்தினால் நிரம்பிக் கொண்டிருக்கிறது. சில தாய்மார் திலீபன் படுத்திருக்கும் பரிதாப நிலை கண்டு பொறுக்க முடியாமல் விம்மி விம்மி அழுகின்றனர்.

வழக்கத்தைவிட நாடித்துடிப்பு 110ஆக அதிகரித்திருந்ததில் இருந்து அவர் உடல் நிலை பாதிப்படையத் தொடங்கிவிட்டது என்பதை நான் அறிந்து கொண்டேன். சூரியனின் கதிர்கள் பூமியெங்கும் வியாபித்திருந்தன. அவரருகே சென்று அவரின் நாடித்துடிப்பு மெதுவாகப் பரிசோதித்துக்கொண்டே சுவாசத்தையும் எண்ணுகிறேன். நாடித்துடிப்பு 120. சுவாசத்துடிப்பு 24. சாதாரண நிலையிலிருந்து மிகவும் அசாதாரணமாகக் கூடிக்கொண்டிருக்கிறது நாடித்துடிப்பு...! (நாடித்துடிப்பு சாதாரணம் 72-80 சுவாசம் 16-22) நான்கு நாள்களாக நீராகாரம் உட்கொள்ளாத காரணத்தினால் உடலில் திரவ நிலை குறையத் தொடங்கிவிட்டதால், இருதயத்துக்கும் நுரையீரல்களுக்கும் செல்லும் இரத்தத்தின் அளவும், கனமும் குறையத் தொடங்கிவிட்டது.

வெகுநேரத்தின் பின் கண் விழித்த திலீபன், எழும்புவதற்குச் சக்தியின்றி படுக்கையிலேயே கிடக்கிறார். மைதானம் சனக்கூட்டத்தினால் நிரம்பிக் கொண்டிருக்கிறது. சில தாய்மார் திலீபன் படுத்திருக்கும் பரிதாப நிலை கண்டு பொறுக்கமுடியாமல் விம்மி விம்மி அழுகின்றனர். கிறிஸ்தவப் பாதிரியாரும், பல வருடங்கள் சிறீலங்காச் சிறையில் அடைபட்டுத் தாங்க முடியாத சித்திரவதைகளை அனுபவித்துவரும் 1983 ஜுலையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் 52 தமிழ்க் கைதிகள், சிங்கள இனவாதப்பூதங்களால் கொல்லப்பட்ட சமயம் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியவருமாகிய அருட்தந்தை சிங்கராயர் திலீபனைப் பார்ப்பதற்காக மேடைக்கு வந்தார். ஒரு துறவியாக இருந்தாலும் திலீபனின் கோலத்தைக் கண்டதும் அவர் அழுதே விட்டார். திலீபனின் கரங்களைப் பற்றி அவர் அன்போடு வருடினார். உடல் சோர்வுற்று இருந்தபோதிலும் திலீபன் அவருடன் மனம் திறந்து வெகுநேரம்வரை பேசிக்கொண்டிருந்தார். திலீபனின் பிடிவாதத்தையும் திடமானத்தையும் நன்கு அறிந்தவர் அந்தத் துறவி. அப்படியிருந்தும் திலீபன் படுத்திருக்கும் கோலத்தைக் கண்டு பொறுக்க முடியாமல் விசும்பினார். கொஞ்சமாவது தண்ணீர் அருந்திவிட்டு உண்ணாவிரதத்தைத் தொடருமாறு அவர் வற்புறுத்தினார். 'பாதர்' சிங்கராயர் மீது திலீபனுக்கு எப்போதும் மிகுந்த மதிப்பும் பாசமும் உண்டு. அப்படியிருந்தும் தனக்கே உரிய புன்முறுவலைக் காட்டி அதையே பதிலாக்கிவிட்டு அவரின் வேண்டுகோளுக்கு மௌனமாகினார் திலீபன்.

பயற்றங்காயைப்போல் வாடி வதங்கி கட்டிலின்மேல் அவர் சுருண்டுகிடந்த தோற்றம் பார்ப்பவர் நெஞ்சங்களைப் பதைபதைக்க வைத்தது.

▣ ▣ ▣ ▣

பாதர் சிங்கராயர் சென்ற பின் ஈரோஸ் இயக்கத் தலைவர் பாலகுமாரும், இயக்க யாழ். மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளரும் 'பரா'வும் மேடைக்கு வந்தனர். எந்த இயக்கத்தவர்களானாலும் அவர்களுடன் சகஜமாகப் பேசுவதில் திலீபனுக்கு நிகர் திலீபன்தான். அவர்களும் திலீபனைத் தண்ணீராவது அருந்தும்படி வற்புறுத்தினர். ஆனால், அவர்களுக்குக் கிடைத்த பதிலும் மௌனம்தான்.

செல்வி குகசாந்தினி, திருமதி நல்லையா ஆகிய இரு பெண்கள் திலீபனுக்கு ஆதரவாக சாகும் வரையிலான உண்ணாநோன்பினை ஆரம்பித்தனர். அத்துடன் வல்வெட்டித்துறையில் 5 தமிழர்கள் ஏற்கனவே உண்ணாவிரதம் ஆரம்பித்துவிட்டனர் என பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. அன்று மாலை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு ஆலோசகர், கலாநிதி அன்ரன் பாலசிங்கம் திலீபனை வந்து சந்தித்தார். இந்திய அரசிடமிருந்தோ இந்தியத் தூதுவரிடமிருந்தோ இதுவரை எந்தப் பதிலுமே கிடைக்கவில்லை என்று அவர் திலீபனிடம் கூறினார்.

சில நாள்களுக்கு முன் இந்திய அமைதி காக்கும் படையின் பாரபட்சமான நடவடிக்கைகளையும், சிங்கள இராணுவத்துக்கு ஆதரவான நடவடிக்கைகளையும் கண்டித்து ஒரு நாள் அடையாள மறியல் போராட்டம் சகல இராணுவ முகாம்களிலும் பொதுமக்களால் நடத்தப்பட்டபோது யாழ். கோட்டையின் முன்பாக அன்றைய மறியல் போராட்டத்தை முடித்துவைத்து திலீபன் பேசிய பேச்சு என் நினைவுக்கு வருகிறது.

"இந்த யாழ்ப்பாணக் கோட்டையிலே சில நூற்றாண்டுகளுக்கு முன் தமிழனின் கொடி பறந்தது. அந்தக் கொடியைப் போர்த்துக்கேயர் பறித்தெடுத்தனர். போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தரும், ஒல்லாந்தரிடமிருந்து, ஆங்கிலேயரும் கைப்பற்றிக்கொண்டனர். ஆங்கிலேயரிடமிருந்து சிங்களவர் கடைசியில் கைப்பற்றினர். இந்தக் கோட்டையிலே தமிழ்க்கொடி. அதாவது, புலிக்கொடி பறக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லை. அந்தத் தமிழ்க்கொடியைப் பறக்க விடுவதற்காக, ஒவ்வொருவரும் எமது உயிரை அர்ப்பணித்துக் கொண்டு வருகிறோம். அதில் என்பங்கு எப்போது? என்பதுதான் எமது கேள்வியாக இருக்கவேண்டுமே தவிர, பதவிகள் எமக்குப் பெரியதல்ல. பதவிகளைத் தேடிச் செல்பவர்கள் புலிகள் அல்ல! அதற்கு வேறு ஆட்கள் இங்கே இருக்கிறார்கள்!" அந்தத் தீர்க்கதரிசனப் பேச்சுக்கு உயிர்வடிவம் கொடுப்பதற்காகத்தான் திலீபன் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்?. திலீபன் ஒரு சிறப்பான சதுரங்க வீரன். தனது பள்ளிப் பருவத்தில் பல பரிசுகளை இதற்காக அவர் வென்றுள்ளார். ஒருமுறை யாழ் மாவட்டத்திலேயே முதலாவதாக வந்துள்ளார். ஆகவே அரசியலில் எந்தக் காயை எப்படி, எந்த நேரத்தில், நகர்த்த வேண்டும் என்பது அவருக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்க வேண்டும். அகிம்சைப் போராட்டத்துக்கு மதிப்பளிக்கும் இந்திய நாட்டின் சமாதானப் படையினரின் கண்களைத் திறப்பதற்கு இந்தச் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டதை ஆரம்பித்து முற்றிலும் பொருத்தமானதே. இந்தியா உளப்பூர்வமாக அண்ணல் காந்தியைப் பின்பற்றும் நாடாக இருந்தால், நிச்சயம் பதில் சொல்லியே ஆகவேண்டும். இல்லையேல் உலகத்தின் பார்வையில் இருந்து அது தப்பவே முடியாது. அன்றிரவு திலீபனுக்கு தெரியாமல் அவரது ரத்த அழுத்தத்தைப் பதிவு செய்துவிட்டேன். அது 100/65 நாடித்துடிப்பு 114 சுவாசம் 25

இந்தியா என்ன செய்யப்போகிறது? எனக்கு ஒன்றும் புரியவில்லை. "வெள்ளையனே வெளியேறு" என்று ஆங்கிலேயரை வெளியேற்றுவதற்காக போராட்டம் நடத்திய காந்தி இன்று இருந்திருந்தால் என்ன செய்திருப்பார்? ஆனால், திலீபனோ இந்தியப் படையை வெளியேறு என்றுகூடக் கேட்கவில்லையே! இவர்கள் திலீபனின் சாதாரண கோரிக்கைகளுக்கு ஏன் மௌனம் சாதிக்கிறார்கள்? எனக்கு எதுவும் புரியவில்லை .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வோர் வருகையில் வீழ்ச்சி உணவகங்களை மூடும் நிலை!

## உணவக உரிமையாளர்கள் கவலை

**கொழும்பு, செப். 18**

**உணவுப் பொதியொன்றின் குறைந்தபட்ச விலை 450 ரூபாவைத் தாண்டியுள்ளதால் உணவகங்களுக்கு வருகை தருவோரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் உணவகங்களை மூடும் நிலைமை ஏற்பட்டுள்ளது என உணவக உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது கோதுமை மாவின் விலை பன்மடங்கில் அதிகரித்துள்ளது. இதனால் கோதுமை மாவில் தயாரிக்கப்படும் உணவுப்பொருள்களைத் தயாரிக்க முடியாதுள்ளது. மேலும் கோழி இறைச்சியின் விலை ஆயிரத்து 600 ரூபாவுக்கும் மேல் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் அவற்றையும் கொள்வனவு செய்வதில் பொருளாதார சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் உணவுப் பொதியின் விலையை 450 ரூபாவைத் தாண்டி விற்பனை செய்வதால் உணவகங்களுக்கு வருவோரின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. எதிர்வரும் காலங்களில் உணவகங்களை மூடவேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே, இதுதொடர்பில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி தீர்வை முன்வைக்க வேண்டும் - என்றனர். (ச-இ)



## கிளி. மருத்துவமனையில் விழிப்புணர்வு கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 18

சர்வதேச நோயாளர் பாதுகாப்பு தினத்தையொட்டி தாதிய உத்தியோகத்தர்களது ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் விழிப்புணர்வுக் கண்காட்சி நேற்று இடம்பெற்றது.

இதன்போது மருத்துவ உதவியைப் பெறுகின்ற நோயாளர்களுக்கு எவ்வாறான பாதுகாப்பு மருத்துவ உதவி வழங்குதல், மருந்து வழங்கலில், அறுவைசிகிச்சையின்போது எவ்வாறு நோயாளர்களின் பாதுகாப்பில் செயற்படுதல் உள்ளிட்டவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தன், மருத்துவர்கள், தாதியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-113)

## வாசிப்பு மாத செயற்றிட்டம்

சாவகச்சேரி செப். 18

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை, கடந்த வருடங்களைப் போன்று இந்த வருடத்துக்கான தேசிய வாசிப்பு மாத செயற்றிட்டங்களை ஒக்ரோபர் மாதத்தில் நடத்துமாறு அனைத்துப் பொதுநூலகங்களுக்கும் அறிவித்துள்ளது.

'அறிவார்ந்த சமூகத்துக்கான வாசிப்பு' என்ற தலைப்பில்பெண்கள் சிறுமிகளுக்கு வாசிப்பு ஊக்குவிப்பு திட்டம், வீட்டு நூலகங்களை ஆரம்பிக்க ஊக்குவித்தல், வீட்டுத் தோட்டங்களை அமைப்பதற்குத் தேவையான தகவல்களை மாணவர்கள்,வாசகர்களிடையே வழங்கல், வாசிப்பு என்னும் தலைப்பில் கட்டுரை, சித்திரம் போன்ற போட்டிகளை நடத்துதல், சிறந்த நூலக வாசகர்களைத் தெரிவு செய்தல், சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்க கதை கூறல் நிகழ்வுகளை நடத்துதல் போன்றவற்றை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ய-9)

# அரச நிறுவனங்களில் பட்டதாரிகள் இணைப்பு

கொழும்பு, செப். 18

அரச துறைக்கான ஆட்சேர்ப்புகளை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்த நிலையில், அரச சேவையில் ஏற்படும் வெற்றிடங்கள் பல்வேறு அரச நிறுவனங்களில் உள்ள அதிகப்படியான பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படும் எனப் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச நிறுவனங்களில் ஆள் பற்றாக்குறையோ, சேவையை வழங்குவதில் குறைபாடுகளோ ஏற்படாது.

அரசாங்கம் 2020ஆம் ஆண்டில் 60 ஆயிரம் பட்டதாரிகளை பொதுச் சேவைக்காக ஆட்சேர்ப்பு செய்தது. எனினும், அவர்களில் பலர் பட்டதாரிகளுக்குப் பொருந்தாத வேலைகளைச் செய்வதாகக் கூறப்படுகிறது. இந்தப் பட்டதாரிகளை கொண்டு அரச துறையில் உள்ள வெற்றிடங்களை அரசாங்கம் நிரப்ப முடியும்- என்றார். (ம-14,இ)



புதுக்குடியிருப்பு ஒளிரும் வாழ்வு அமைப்பின் கோரிக்கைக்கமைய பூமணி அம்மா அறக்கட்டளையால் சிறப்புத் தேவையுடையோர் குடும்பங்களுக்கு வாழ்வாதார உலர் உணவுப் பொருள்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கையளிக்கப்பட்டன. (ச-20)

## விவசாயிகளுக்கு விதைநெல்

சாவகச்சேரி செப். 18

விவசாயிகளுக்கு தற்போது காலபோக நெற்செய்கைக்கான விதைநெல் வழங்கப்பட்டு வருகின்றது.

விதைநெல் தேவைப்படுவோர் கைதடி கமநல சேவைகள் நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு பெரும்போக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ய-9)

## சோமஸ்கந்த கல்லூரியின் திறன்வகுப்பறைகள் திறப்பு

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்.புத்தூர் சோமஸ்கந்த கல்லூரியில் அமைக்கப்பட்ட ஒன்பது திறன் வகுப்பறைகள் திறப்பு நிகழ்வு பாடசாலை அதிபர் சி.திரிகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பழைய மாணவர்கள் மற்றும் இரட்ணம் நிதியம் லண்டன் அமைப்பினரின் நிறுவுநர் ச.நித்தியானந்தன் ஆகியோரின் பங்களிப்பில் இந்த திறன் வகுப்பறைகள் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரா.வரதீஸ்வரன் கலந்துகொண்டார். (ச)



## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** உங்கள் செயல்கள் வெற்றியாகும். புதிய நட்பால் ஆதாயம் அடைவீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் விலகும். தடைப்பட்ட செயல்கள் நிறைவேறும். லாபம் அதிகரிக்கும்.

**இடபம்:** மனதில் புதிய திட்டங்கள் உருவாகும். நண்பரின் ஆதரவை நாடுவீர்கள். மற்றவரை அனுசரித்துச் செல்வதால் நன்மையுண்டு. உங்கள் செயல்களில் கவனம் தேவை.

**மிதுனம்** : எதிர்பார்த்தவற்றில் ஏமாற்றத்தைசந்திக்கலாம். அலைச்சல் அதிகரிக்கும். பெருமைக்காக ஆடம்பர செலவு செய்வீர்கள். நட்பு வட்டம் விரிவடையும்.

**கடகம்:** எதிர்பார்த்த பணம் வந்து சேரும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வரவு அதிகரிக்கும். வியாபாரத்தில் நெருக்கடி விலகும்.

**சிம்மம்:** முயற்சி நிறைவேறும். தொழிலில் இருந்த தடை விலகும். லாபமான நாள். பணி புரியும் இடத்தில் மதிப்பு உயரும். உங்கள் தேவைகள் நிறைவேறும்.

**கன்னி:** முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். பழைய அனுபவம் கை கொடுக்கும். எதிர்பார்த்த இடத்தில் உதவி கிடைக்கும். சிலருக்கு வேலை குறித்த தகவல் வரும்.

**துலாம்:** கவனமுடன் செயற்பட வேண்டிய நாள். பிறருடன் அனுசரித்துச் செல்வதால் நன்மை பெறலாம். பணிபுரியும் இடத்தில் பிரச்சினைகளை சந்திக்கலாம். விவாதங்களைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** நண்பர்களின் உதவியுடன் முயற்சியை மேற்கொள்வீர்கள். எண்ணம் நிறைவேறும். முயற்சி வெற்றி பெறும். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்ட முரண்பாடு விலகும். தடைகளை சரி செய்வீர்கள்.

**தனுசு:** எதிர்பார்ப்பு இன்று நிறைவேறும். தொழிலில் வருவாய் அதிகரிக்கும். மற்றவர்களால் முடியாததையும் செய்து முடிப்பீர்கள். திறமை வெளிப்படும். வியாபாரத்தில் முயற்சி வெற்றி பெறும்.

**மகரம்:** திறமை வெளிப்படும். குடும்பத்தினரின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். செயல்கள் வெற்றியாகி நிதிநிலை உயரும்.

**கும்பம்:** திட்டமிட்ட செயல்களை முடிப்பீர்கள். தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை. ஆரோக்கியத்தில் பின்னடைவு உண்டாகும். மறைமுக எதிரியால் சங்கடம் ஏற்படும்.

**மீனம்:** தைரியமுடன் செயற்படுவீர்கள். நினைத்ததை நடத்தி ஆதாயம் காண்பீர்கள். வியாபாரத்தை விரிவு செய்யும் முயற்சி நிறைவேறும். திறமை வெளிப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றம் செய்யப்பட்டோரை 2023 ஜனவரியில் விடுவியுங்கள்

## உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவிப்பு

**யாழ்ப்பாணம், செப். 18**

**இந்த ஆண்டு முற்பகுதியில் இடமாற்றம் செய்யப்பட்டு புதிய அலுவலகத்தில் இதுவரை கடமைகளைப் பொறுப்பேற்காத மாகாண உள்ளூராட்சித் திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களை, எதிர்வரும் 202 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி விடுவிக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவித்துள்ளார்.**

உள்ளூராட்சி நிறுவனங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை அலுவலர்கள் ஆகியோருக்கு கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டது.

இடமாற்றம் வழங்கப்பட்ட மீளாய்வுத் தீர்மானங்களுக்கு அமைவாகவும், பிரத்தியேக மீள்பரிசீலனை அடிப்படையில் 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை இடமாற்றல் கட்டளையை பிற்போடப்பட்டவர்களினதும் இதுவரை இடமாற்றல் கட்டளைக்கு அமைவாக புதியசேவை நிலையத்தில் கடமைகளைப் பொறுப்பேற்காதவர்களினதும் இடமாற்றலை உறுதிப்படுத்தும் வகையில் இதுவரை புதிய நிலையத்துக்கு செல்லாத அலுவலர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார். (ம-14,9)

## சாவகச்சேரி மருத்துவமனை அத்தியட்சகராக குமரவேல்

சாவகச்சேரி, செப். 18

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகராக மருத்துவர் குமரவேல் நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

சாவகச்சேரி மருத்துவமனையில் மருத்துவ அத்தியட்சகராகக் கடமையாற்றிய மருத்துவர் டயாளினி மகேந்திரன், பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனைக்கு இடமாற்றப்பட்டதையடுத்து புதிய மருத்துவ அத்தியட்சகராக மருத்துவர் குமரவேல் நியமிக்கப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றார். (ம-14,9)



## காணிப் பயன்பாடுகள் தொடர்பில் மாவட்ட செயலகத்தில் ஆராய்வு

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்.மாவட்ட காணிப் பயன்பாட்டுத்திட்டமிடல் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் நேற்று யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் அரச காணிகளை அபிவிருத்திச் செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு வழங்குதல், காணிகளைக் கையளித்தல், காணிகளைப் பாராதீனப்படுத்தல், நீண்டகாலக் குத்தகைக்கு வழங்குதல், காணிக் கச்சேரி மூலம் காணி வழங்குதல் மற்றும் வலி.வடக்கில் விடுவிக்கப்படாத இடங்களை அடையாளப்படுத்தல் உள்ளிட்டவை தொடர்பில் ஆராயப்பட்டன.

இதன்போது யாழ்.மாவட்ட மேலதிகச் செயலர் ம.பிரதீபன், காணி மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் அலுவலக உதவிப் பணிப்பாளர், மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், மற்றும் திணைக்களங்களின் துறைசார் அலுவலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-27)

## பல இடங்களில் சீரான காலநிலை

கொழும்பு, செப். 18

நாட்டில் பல பிரதேசங்களில் சீரான காலநிலை நிலவும் சாத்தியம் காணப்படுகிறது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

காற்றானது, புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வேகத்திலும், தென்மேற்கு திசையிலிருந்து மணித்தியாலத்துக்கு 20-35 கிலோ மீற்றர் வேகத்திலும் அதிகரித்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புத்தளத்திலிருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகளும் அம்பாந்தோட்டையில் இருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளும் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் - என்றுள்ளது. (ய-இ)

## சாவகச்சேரி ஆதார மருத்துவமனை

# விபத்துச் சிகிச்சைக் கட்டடம் ஒக்ரோபர் 9 ஆம் திகதி திறப்பு

சாவகச்சேரி, செப். 18

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்ட குருதிக் காப்பகம், விபத்து சத்திர சிகிச்சைப் பிரிவு ஆகியவை எதிர்வரும் ஒக்ரோபர் 9 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளன.

மூன்று மாடிகளைக் கொண்ட இந்த விபத்து அறுவைச் சிகிச்சைக் கட்டடத்துக்கு கடந்த 2016 ஆம் ஆண்டு அடிக்கல் நட்டு 2018 ஆம் ஆண்டு கட்டட வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு சுகாதாரத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது. இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளை அடுத்து நீண்டகால இழுபறிக்குப் பின்னர் தற்போது மக்கள் பாவனைக்காகக் கட்டடம் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஏ-9 வீதி மற்றும் ஏ-32 வீதிகளில் இடம்பெறும் விபத்துக்களில் காயமடைபவர்களுக்கு உடனடியாகச் சிகிச்சை வழங்கும் வகையில் இந்தச் சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-9)

## டெங்கு பரவாமல் இருக்க

# குடியிருப்புக்கள், காணிகளை தூய்மையாகப் பேணுங்கள்

## சாவ. சுகாதாரப் பிரிவு அறிவுறுத்து

சாவகச்சேரி, செப். 18

மழைகாலம் ஆரம்பமாகவுள்ளதால் தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு பரவாமல் இருப்பதற்கு, பிரதேசத்திலுள்ள குடியிருப்புக்கள், காணிகள் போன்றவற்றைத் துப்புரவாகப்பேண வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதாரப் பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்த வருடத்தில், கடந்த சனிக்கிழமை வரை 126 பேர் டெங்கால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர் என்று சாவகச்சேரி சுகாதார திணைக்களப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் மத்திய மாகாண சுகாதாரத் திணைக்களங்கள், தென்மராட்சிப் பிரதேச செயலகம், சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசசபை போன்றவை சுகாதார மருத்துவ அதிகாரி பணியக அலுவலர்களுடன், தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கு களப் பரிசோதனைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டன. அதன் பயனாக கடந்த வருடம் 26 பேர் மட்டுமே டெங்கால் பீடிக்கப்பட்டனர்.

கடந்த வருடத்தை விட இந்த வருடம் தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்கால் பீடிக்கப்பட்டவர்கள் அதிகமாகவுள்ளனர். மழைகாலம் ஆரம்பமாகவுள்ளதால் டெங்குத் தொற்று மேலும் தீவிரமடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், பிரதேசத்திலுள்ள மக்கள் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளை துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர். (ம-14,9)



## டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, செப். 18

நாட்டில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 55 ஆயிரத்து 12 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 18 ஆயிரத்து 265 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ய)

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 18

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பரிசளிப்பு தினம் எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதமவிருந்தினராக கண்டி தேசிய மருத்துவமனையின் இருதய அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் குமரதாசன் ஞானகாந்தன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## பொருளாதாரம் 8.4 வீதம் வீழ்ச்சி

கொழும்பு, செப். 18

இந்தவருடத்தின் இரண்டாவது காலாண்டில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வேகம் 8.4 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது என்று தொகைமதிப்பு, புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் தொகைமதிப்பு, புள்ளிவிவரவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள தரவில் மேலும் உள்ளதாவது:-

இந்தவருட இரண்டாவது காலாண்டில் விவசாயத்துறை 8.4 வீதத்தாலும் கைத்தொழில் துறை 10 வீதத்தாலும் சேவைப் பிரிவு 2.2 வீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளது. மின்சக்தி, எரிசக்தி, உரம், கிருமிநாசினி தட்டுப்பாடு, எரிபொருள் விநியோகம் தொடர்பிலான பிரச்சினை, சிமெந்து, மூலப்பொருள்களுக்கான தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு என்பனவே பொருளாதார வீழ்ச்சிக்கு பிரதான காரணமாகும்.

மேலும் தானிய வகைகள் 32.3 வீதத்தாலும், தேயிலை உற்பத்தி 19.7 வீதத்தாலும், நெல் உற்பத்தி 15.6 வீதத்தாலும், கடற்றொழில் 15.3 வீதத்தாலும், பொருள்சார் உற்பத்தி 13.6 வீதத்தாலும், மரக்கறி உற்பத்தி 13.2 வீதத்தாலும் வீழ்ச்சியடைந்துள்ளது -என்றுள்ளது.

(ம-14-இ)

# சு. காங்கிரஸ் உறுப்பினர்கள் பெரமுனவில் இணையவில்லை

### நாலக கொடஹேவா எம்.பி. கூறுகிறார்



**கொழும்பு, செப். 18**

**சிறிலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படும் சுதந்திரக் காங்கிரஸின் 13 உறுப்பினர்களில் பெரும்பாலானோர் பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் ஒன்றிணையப்போவதாக பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளமை முற்றிலும் பொய்யானது -இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்;

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கொள்கைக்கும், யாப்புக்கும் முரணாகச் செயற்பட்டதால் நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்படுகின்றோம்.

பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரின் தன்னிச்சையான செயற்பாடுகளும், வெறுக்கத்தக்க பேச்சுக்கும் சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை குறுகியகாலத்தில் பலவீனப்படுத்தியது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் வெகுவிரைவில் எம்முடன் ஒன்றிணைவார்கள். நாட்டு மக்கள் மத்தியில் பொதுஜன பெரமுனவுக்கு இன்றும் நன்மதிப்பு உள்ளதென ஒரு தரப்பினர் குறிப்பிடுவது வேடிக்கையாகவுள்ளது.

தமது அரசியல் தேவைகளுக்காக மக்களின் உண்மை அபிலாஷைகளை விளங்கிக்கொள்ள மறுக்கின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் தந்திரம் பொதுஜன பெரமுனவுக்கு நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும்.

ஆகவே மிகுதியாகவுள்ள உறுப்பினர்களைப் பாதுகாத்துக்கொள்ள சாகர காரியவசம் அவதானம் செலுத்தவேண்டும். ஜனாதிபதிக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் இணக்கப்பாடு கிடையாது -என்றார். (ம-14-இ)

## கஞ்சாவைப் போதைக்காக பயன்படுத்தக் கோரவில்லை

### இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

கஞ்சா என்பது ஒரு மருந்து. அதைப் போதைக்காகப் பயன்படுத்துமாறு நான் கோரியதில்லை. மருத்துவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தவேண்டும் என்பதே எனது நிலைப்பாடு என்று இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்;

கஞ்சா செய்கைமூலம் 52 நாடுகள் பில்லியன் கணக்கான டொலர் வருமானமாக ஈட்டுகின்றன. கஞ்சா என்பது எமது வரலாற்றுடன் பிணைந்ததுஒன்று. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகவே நாம் கஞ்சாவைப் பயிரிடவேண்டும் -என்றார்.

(ம-14-இ)

## ரணிலை பதவி நீக்கினால் குருதி ஆறு பெருக்கெடுக்கும்

### சோதிடர் கணிப்பு

யாழ்ப்பாணம், செப். 18

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கிரகப்பலன் மிகவலுவாக இருப்பதால் 2025ஆம் ஆண்டு வரை அவரை பதவியிலிருந்து நீக்கமுடியாது. அவ்வாறு அப்புறப்படுத்த முயற்சித்தால் நாட்டில் குருதி ஆறு ஓடும் -இவ்வாறு இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் பிரபல சோதிடர் பி.ஜீ.பீ.கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2025ஆம் ஆண்டு வரை தற்போதைய அரசாங்கத்தைக் கவிழ்க்கமுடியாது. 2025ஆம் ஆண்டுக்குப் பின்பே மிகப்பெரிய ஆட்சி மாற்றம் ஏற்படும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கிரகப் பலன்கள் பலமாகவுள்ளன. 2025ஆம் ஆண்டுக்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து அப்புறப்படுத்த முயற்சித்தால், பெரிய குருதி ஆறு ஓடும். அதேவேளை 2025ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார். எவராலும் அதனைத் தடுக்க முடியாது -என்றார். (ச-இ)



## பெரும்பான்மையினரின் ஆதரவு என்றுமுள்ளது

### ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

நாட்டின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய பெரும்பான்மையினரின் ஆதரவு எனக்கு இருக்கிறது. -இவ்வாறு சர்வதேச ஊடகமொன்று வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கைது செய்வதன்மூலம் இலங்கையின் பிரச்சினையைத் தீர்க்கமுடியுமா? என எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச சொத்துகளுக்குத் தீ வைப்பதில் மற்றும் சேதப்படுத்தல் ஆகியவற்றின்மூலம் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது. இவற்றை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

சட்டத்தை மீறியோர் மாத்திரமே தற்போது கைது செய்யப்படுகின்றனர். நாட்டின் சட்டத்தின்படியே பொலிஸார் செயற்படுகின்றனர். அனைத்து விடயங்களும் சட்டபூர்வமாகவே இடம்பெறுகின்றன. நாட்டின் பிரச்சினைகளை நிவர்த்திக்க என்றும் என்னிடம் பெரும்பான்மையினரின் பலம் உள்ளது -என்றார். (ச-இ)

## பெரமுனவின் தவிசாளர் ரஞ்சித் பண்டார?

கொழும்பு, செப். 18

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவிக்கு அந்தக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டாரவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கோப் குழுவின் தலைவர் பதவிக்கும் ரஞ்சித் பண்டாரவை பொதுஜன பெரமுன பரிந்துரைத்துள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பதில் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தலைமையில் கட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. கட்சி நடவடிக்கை குறித்து அதிக அவதானம் செலுத்துவதால் நாமல் ராஜபக்ச எதிர்வரும் நாள்களில் நியமிக்கப்ப[illegible] யான அமைச்சரவை[illegible] அமைச்சுக்களையும் கோரவில்லை என்று கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்திருந்தார். சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் 6ஆவது மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டின் போது கட்சியின் முக்கியமான பதவிகள் தொடர்பான [illegible] உத்தியோகபூர்வமாக [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100ஆவது வருடப் பூர்த்தியில்

# சிறிலங்கா - இந்தியா உறவு வலுப்பெறும்!

## இந்தியத் தூதுவர் தெரிவிப்பு



**கொழும்பு, செப். 18**

**சிறிலங்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகள் ஆரம்பமாகி 75 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. இருநாடுகளும் சுதந்திரமடைந்து 100 ஆவது வருடம் பூர்த்தியடையும் வேளையில் இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு மிகவும் வலுவானதாகக் காணப்படும் இவ்வாறு சிறிலங்காவுக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.**

இந்தியா சுதந்திரமடைந்து 75 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளமையை நினைவுகூரும் விதமாக சிறிலங்கா இந்திய அமைப்பால் கடந்த வியாழக்கிழமை கொழும்பிலுள்ள தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இராப்போசன விருந்துபசார நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இந்தியத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறிலங்கா இந்திய அமைப்பானது 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை வலுப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தமுறை இந்தியா 75 ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாடுவதைப்போன்று அடுத்த வருடம் இலங்கை சுதந்திரமடைந்து 75 வருடங்கள் பூர்த்தியடைகின்றன.

இதை மற்றொரு விதமாகக் கூறுவதெனில், இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகள் வலுவடைந்து 75 வருடங்களாகின்றன. 1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்தபோது ஒருமைப்பாட்டையும் சுயாட்சியையும் நிலைநிறுத்துவதை முன்னிறுத்தி இயங்கவேண்டியிருந்த போதிலும், இப்போது இந்தியா நீண்ட தூரத்தைக் கடந்து வந்துவிட்டது.

அடுத்தகட்டமாக 2047 ஆம் ஆண்டாகும்போது இலங்கையும் இந்தியாவும் எவ்வாறிருக்கும், எவ்வாறிருக்கவேண்டும் என்பது தொடர்பாகச் சிந்திக்கவேண்டும். இருநாடுகளும் சுதந்திரமடைந்து 100 ஆவது வருடம் பூர்த்தியடைகின்ற வேளையில் இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் - என்றார். (எ-இ)

# கட்சி கூட்டங்களை தவிர்க்கும் பீரிஸ்!



கொழும்பு, செப். 18

சிறிலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் நாடாளுமன்றத்துக்கு வெளியே ஒரு சக்தியால் கட்டுப்படுத்தப்படுகின்றனர் என்று முன்னாள் அமைச்சரும், பொதுஜன பெரமுனவின் தவிசாளருமான ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுஜன பெரமுன கட்சியை சிறு குழுவொன்று கைப்பற்றியுள்ள நிலையில், கட்சிக் கூட்டங்களில் தாம் கலந்துகொள்வதில்லை என்றும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (எ-இ)



# வன்னியசிங்கத்தின் 53 ஆவது நினைவுதினம் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், செப். 18

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கு.வன்னியசிங்கத்தின் 53 ஆவது நினைவுதினம், நீர்வேலியில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது அவரது திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ம-14,26)

# நலன்புரி நிவாரணங்களுக்காக பொதுமக்கள் விபரம் சேகரிப்பு

சாவகச்சேரி, செப். 18

தென்மராட்சி பிரதேசத்தில் நலன்புரி நிவாரணங்களை பெறுவதற்குத் தகுதியான நபர்களைக் கண்டறிய விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

பிரதேசத்தில் நலன்புரி நிவாரணங்கள் பெறுவதற்கு தகுதியானவர்கள் தமது கிராம மட்ட அலுவலர்களுடன் தொடர்புகொண்டு உரிய படிவத்தைப் பெற்று எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு பிரதேச செயலகத்தால் கோரப்பட்டுள்ளது.

அரசின் மூலம் செயற்படுத்தப்படும் சமுர்த்தி, முதியோர், மாற்றுத் திறனாளிகள், சிறுநீரக நோய் மற்றும் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறத் தகுதியுடையவர்கள் தமது கிராம மட்ட அலுவலர்களான கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர், முதியோர் உரிமைகள் ஊக்குவிப்பு உத்தியோகத்தர் ஆகியோரிடம் படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து அவர்களால் நிரந்தர வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழுடன் பிரதேச செயலகத்தில் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

# திருமண நிகழ்வில் மோதல் 6 பேர் மருத்துவமனையில்

கொழும்பு, செப். 18

பாணந்துறை சுற்றுலா விடுதியொன்றில் திருமண நிகழ்வின்போது இடம்பெற்ற மோதலில் காயமடைந்த நிலையில் 6 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என ஹிரண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருமணத்துக்கு வருகை தந்த கண்டி மற்றும் கடுகண்ணாவ பிரதேசங்களைச் சேர்ந்த குழுவொன்றே மோதலில் ஈடுபட்டுள்ளது.

மோதல் சம்பவத்தில் ஈடுபட்ட சந்தேக நபர்களைக் கைதுசெய்து பாணந்துறை நீதிமன்றில் முற்படுத்த ஹிரண பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ம)

பமுனுகம கடற்கரையில்

# கரையொதுங்கிய 4 அடி நீள ஆமை

கம்பஹா மாவட்டத்தின் பமுனுகம சாரக்கு பிரதேச கடற்கரையோரத்தில் இறந்த நிலையில் 4 அடி நீளமும் 30 கிலோகிராம் நிறையும் கொண்ட ஆமை ஒன்று நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது.

இந்த கடற்கரையோரத்தில் கடந்த ஒருவார காலத்தில் இறந்த நிலையில் மூன்று ஆமைகளும் திமிங்கிலம், டொல்பின் ஆகியனவும் கரையொதுங்கின என்று கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-14,இ)

# 2,015 தொழிற்சங்கங்களே திணைக்களத்தில் பதிவு

கொழும்பு, செப். 18

தொழில் திணைக்களத்தில் இதுவரையான காலப்பகுதியில் 2 ஆயிரத்து 15 தொழிற்சங்கங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளன என்று தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதிவு செய்யப்படாத தொழிற்சங்கங்கள் நடைமுறைச் செயற்பாடுகளில் ஈடுபட எந்தவொரு அடிப்படை அதிகாரமும் இல்லை என தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்ரகீர்த்தி தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்ததாவது:- கடந்த மாத ஆரம்பத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 5ஆகக் காணப்பட்டது. கடந்த மாதம் புதிதாக 10 தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தொழிற்சங்கம் தொழில் திணைக்களத்திலேயே பதிவு செய்யப்பட வேண்டும். பதிவுசெய்யப்படும் தொழிற்சங்கத்தில், தாம் வேலை செய்யும் நிறுவனத்தின் சேவையாளர்களில் 40 சதவீதமானவர்கள் இருப்பார்களாயின். அதன் அடிப்படையிலேயே அந்தத் தொழிற்சங்கத்தின் யாப்பு உருவாக்கப்படும். தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யாமல் செயற்படுவது சட்டத்துக்கு முரணானது. அவ்வாறு செயற்பட இடமில்லை. பிரதேச செயலகங்கள் உள்ளிட்ட வேறு அலுவலகங்களில் வேறொரு அமைப்பாக பதிவுசெய்து கொள்ளலாம் - என்றார். (எ-இ)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சொர்க்கம் திருமண சேவை

1. 1987 ஆம் ஆண்டு கனடாவில் வசிக்கும் முஸ்லீம் மதத்தைச்சேர்ந்த ஆணிற்கு உள் நாட்டில் மணமகள் தேவை.
2. 1984 ஆம் ஆண்டில் பிறந்த மக நட்சத்திரத்தில் G.S. ஆக பணிபுரியும் ஆணிற்கு உள்நாட்டில் மணமகள் தேவை.
3. 1987 ல் பிறந்த கனடாவில் வசிக்கும் பூச நட்சத்திர Softuware Engineer சூரியன் செவ்வாய் ஆணிற்கு உள்நாட்டில் படித்த மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
**0011 416 666 1855, 077 887 6969**

## பணிநிலை வேண்டுகை

இலங்கையின் முன்னணி தொலைபேசி நிறுவனமான Bell Solutions (Pvt) Ltd க்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு கிளைகளுக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

**1) காசாளர் (Cashier)**
**2) விற்பனைப் பிரதிநிதி (Sales person)**

தங்களது சுயவிபரக் கோவையை careers@bellsolutions.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். (CS 46567) (3/6)

மேலதிக தகவலுக்கு
**077 488 9984, 077 229 2668**

## வியாபார நிலைய கட்டடம் வாடகைக்கு

**இல 144, 1ம் குறுக்குத்தெருவிலுள்ள 3 மாடிக்கட்டடத்தில் 1ம், 2ம் மாடிகள் வாடகைக்கு உண்டு.**



- ஒவ்வொரு மாடியும் 2000 சதுரஅடி.
- வாகனம் நிறுத்த தாராளமான இடவசதி உள்ளது.
- 1ம் மாடி (Ground floor) 250,000/= மாத வாடகை.
- 2ம் மாடி 200,000/= ஒரு வருட முற்பணம்.

தொடர்பு:-
**0760667179**

## UK / CANADA குடி பெயர்வதற்கான வாய்ப்பு!!!

குடும்பத்துடன் UK / Canadaவில் குடிபெயர்வதற்கான விசா

நீங்கள் 30 வயதிற்கு மேற்பட்ட திருமணமானவராயின், உங்களுக்கு உங்களது குடும்பத்தினருடன் ஐக்கிய இராச்சியத்திற்கு மற்றும் கனடாவிற்கு சட்டபூர்வமாக சென்று குடிபெயர்வதற்கான ஓர் வாய்ப்பு!!!

நீங்கள் J B P VISA SOLUTION ஐ தெரிவு செய்வது ஏன்?

- 100% சரியான தகவல்களை வழங்குதல் மற்றும் சரியான வழிகாட்டுதல்
- எந்தவொரு தரகரும் இன்றி, 15 வருடங்கள் ஐரோப்பாவில் தங்கியுள்ள இலங்கை Consultant உடன் நேரடியாக தொடர்பு கொள்ள கூடிய வாய்ப்பு
- குறைந்த பட்ச சேவை கட்டணத்தில் ஆரம்பித்து மிகுதி பணத்தை தங்களது தேவை பூர்த்தியானதன் பின் செலுத்தக்கூடிய வாய்ப்பு
- ஐரோப்பிய ஒன்றியத்தின் எந்தவொரு நாட்டிலும், அல்லது இங்கிலாந்து மற்றும் கனடாவில் ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற்று கொடுப்பது தொடர்பில் Solicitorsகளின் ஒத்துழைப்பு.

தொடர்புகளுக்கு: 0772 281 085
E-Mail அனுப்புதல் : info@thevisasolution.com
J B P VISA SOLUTIONS (PVT) LTD
(Registered as a limited liability company in Sri Lanka PV 00203433)

## விற்பனைக்கு

Alto K10, 2015 Model, Metalk Gray 3.9 Million விற்பனைக்கு உண்டு
**0779118101**

## Room வாடகைக்கு

திருநெல்வேலியில் Room வாடகைக்கு உண்டு. (பெண்கள் மட்டும்)
**077 112 0314**

## உடன் விற்பனைக்கு

நல்லின கன்னி மறி ஆடு விற்பனைக்குண்டு. 6 அடி கண்ணாடி சோக்கேஸ், மிக்சர் Box 4 அடி விற்பனைக்குண்டு.
**076 112 4145**

## விதை நெல் விற்பனைக்குண்டு

406 நெல். 1 Kg 200
இடம் : ஆனைக்கோட்டை
**076 262 2236**

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தேங்காய் எண்ணை ஆலை ஒன்றிற்கு வேலைக்கு ஆள்கள் தேவை. (ஆண் / பெண்) (CS46590)(3/6)
**077 171 2336, 075 981 7124**

## பணிப்பெண் தேவை

தெல்லிப்பளையில் உள்ள வீடொன்றில் தங்கி நின்று வீட்டுவேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.
**077 400 5023**

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் புடைவையகத்திற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. பழக விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்
**0770841861**

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ, 27 வயது, பட்டப்படிப்பு இறுதி ஆண்டு படிக்கும் பெண்ணுக்கு பொருத்தமான, உள்ளூர் உயர் அரச உத்தியோக மணமகன் தேவை. அத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் தேடுவோரும் எம்முடன் தொடர்புகொள்ளலாம். (இந்து, கிறிஸ்தவ)
Viber/Whtasapp **076 308 1532**

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1991 ல் பிறந்த விசாகம் 2ம் பாதம் துலாம் இராசி கி.பாவம் 11 M.B.B.S டாக்டர் மணமகளுக்கு அதை ஒத்த பட்டதாரி மணமகன் தேவை.
**0715805613, 0765614313**

## வீடு வாடகைக்கு

வவுனியா தோணிக்கல் பகுதியில் 02 அறையுடன் சமையலறை, இணைந்த குளியலறையுடன் மேல் வீடு வாடகைக்கு உண்டு.
**077 732 2720** (CS 1030) (3/6)

## வீடு வாடகைக்கு

கொழும்பு மோதர ரஜமல்வத்தையில் மூன்று அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
**077 988 9276**

## பணிப்பெண் தேவை

வவுனியா நகரில் தாய் இல்லாத யுவதியை பராமரித்து சொந்த கடை நடத்தி செல்வதற்கு உதவிபுரிய பணிப்பெண் ஒருவர் உடன் தேவை.
**070 484 5366**

## வாடகைக்கு

இல. 303/1, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள 3 அறைகளில் 2 குளிரூட்டப்பட்ட அறைகளுடன் வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கலான வீடு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுக்கப்படும்.
**071 8396 833**

## வேலையாள் தேவை

பருத்தித்துறையில் உள்ள வீடு ஒன்றில் வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : **077 618 8065**

# எரிசக்தி, மின்சக்தி அதிகாரிகளுடன் எரிசக்தி அமைச்சர் கலந்துரையாடல்



கொழும்பு, செப். 18
இலங்கை மின்சாரசபை, இலங்கை மின்சார தனியார் நிறுவனம், வரையறுக்கப்பட்ட நிலக்கரிக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட எல்.பி.என் ஹோல்டிங்க்ஸ் நிறுவனம், இலங்கை சூரியசக்தி அதிகாரசபை உள்ளிட்ட துறைசார்ந்த நிறுவன உயர் அதிகாரிகளுடன் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கலந்துரையாடியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடல் எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

எதிர்வரும் நாள்களில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

(ம-14-இ)

## விற்பனைக்கு

**HUMBER**
சைக்கிள்
நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு.
077 942 6412
076 655 7332
இடம் : கோப்பாய்
விலை: 40, 000/=

## விற்பனையாளர் தேவை

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு விற்பனையாளர் தேவையாக உள்ளது. வட மாகாணத்தில் எப் பகுதிக்கும் சென்று வர கூடியவராகவும் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

- குறிப்பு - ஆண்
- வயதெல்லை - 25 - 50

**0773553959**

## காணி தேவை

சாவகச்சேரிக்கும், இயக்கச்சிக்கும் இடையில் 1 ஏக்கர் அல்லது 2 ஏக்கர் காணி தேவை. விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.
**077 365 3989** (CS 933) (3/6)

## யாழ் வணிகர் கழகம் வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ். வணிகர்கழக 2022 ஆம் வருடத்திற்கான பொதுக்கூட்டம் கம்பனிப்பதிவுச் செயலாளரின் அனுமதியுடன் 08.10.2022 அன்று அங்கத்தவர்களுக்கான பொதுக்கூட்டம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே வணிகர் கழகத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களை தவறாது கூட்டத்தில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

திகதி : 08.10.2022 சனிக்கிழமை
நேரம் : காலை 10.00 மணி
இடம் : யாழ். வணிகர்கழகப் பணிமனை
165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

செயலாளர்,
யாழ். வணிகர் கழகம்.
(cr.38102) (2/6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்-பலாலி பிரதான வீதியில் ஊரெழு அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் இருந்து பொக்கனை வீதியில் சுமார் 400 மீற்றர் தூரத்தில் 30 பரப்பு காணி விற்பனைக்குள்ளது. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். முன்பக்கமதிலுடன் சுற்றுவேலி பாதுகாப்புடன் உள்ளதும் 60 காய்க்கும் தென்னை உட்பட பல பயன்தரும் மரங்களுடன் தற்பொழுது தோட்ட செய்கையில் உள்ளது. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு: **0740941507, 0743309895**

## விற்பனைக்கு

யாழ்.விக்ரோறியா வீதியில் 14 பரப்புக் காணியும் 12 பரப்புக் காணியும் யாழ்.வேம்படி பாடசாலைக்கு அண்மையில் 16 பரப்புக்காணியும் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் (சிக்னல் சந்திக்கு) அண்மையில் 2 பரப்புக் காணியும் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் (வைத்தியசாலைக்கு முன்பாக) 6½ பரப்புக் காணியும் யாழ்.ஆஸ்பத்திரி வீதிக்கு அண்மையில் கந்தப்பசேகரம் வீதியில் 10 பரப்பு காணியும் யாழ்.அரசடி வீதியில் (நல்லூர் கோவிலுக்கு அண்மை) 2 பரப்புக் காணியும் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 20 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட கடையும். யாழ். K.K.S வீதியில் தட்டாத்தெரு சந்திக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 3 பரப்புக் காணியும். யாழ் கஸ்தூரியார் வீதியில் 12 அடி அகலம் 100 அடி நீளம் கொண்ட கடையும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **0777232535**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 11 . 1934



இறப்பு 16 . 09 . 2022

## திரு.செல்லத்துரை இராசலிங்கம்

**(ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்)**

இருபாலை டச்சுறோட்டை பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கு மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.செல்லத்துரை இராசலிங்கம் கடந்த (16.09.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-முத்தம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அமுதம் தம்பதியரின் மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், சறோஜாதேவி, இரகுநாதன் (ஜேர்மனி), சத்தியதேவி (லண்டன்), குகநாதன் (நோர்வே), சகிலாதேவி (ஆசிரியை - யா/இராமநாதன் கல்லூரி,சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தர்மலிங்கம், றமணி (ஜேர்மனி), பாஸ்கரன்(லண்டன்), கவிதா (நோர்வே), முருகவேள் (ஆசிரியர் - யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் மிதுனன், சாஜினி, சர்வினி, அபிநிஷா, ஆதிபன், ஆருசன், அக்ஷதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் கவின், கயல் ஆகியோரின் பூட்டனும் காலஞ்சென்ற வேதநாயகியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், செல்வராசா, இராஜேஸ்வரி, தம்பித்துரை ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.09.2022) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சறோஜாதேவி (மகள்) 0771957978**
**சசிகலாதேவி (மகள்) 0776104167**
**முருகவேள் (மருமகன் ) 0779451413**

தகவல் :
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



## திருமதி இராமலிங்கம் தங்கம்மா

நயினாதீவு 5 ஆம் வட்டாரம், காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது நீர்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராமலிங்கம் தங்கம்மா நேற்று (17.09.2022) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், கோகுலராஜா, காலஞ்சென்ற சௌந்தரராஜா மற்றும் சரோஜாதேவி, இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவளம், புஸ்பவதி, பேரின்பதாஸ் மற்றும் மதிசூடி ஆகியோரின் மாமியாரும், பபிதா - துஸ்யந்தன், ஜெயந்தன், ஹரிகரன், மதுஷன், பிரகாஷ், கௌசிகா, சாருகா - நிருபன், நிலக்ஷன், தர்சிகா, சஸ்விகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சிவானி, துஷானி, ரிஷி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.09.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் நீர்வேலியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லி பரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

(cs20819) (2.6)

தகவல்:
**குடும்பத்தினர்**



தியாக தீபம் திலீபனின்

## 3ஆம் நாள் நினைவேந்தல் யாழ். பல்கலைக்கழகத்தில்

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் மூன்றாவது நாளாக யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரதான நினைவுத் தூபியில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தியாக தீபம் திலீபனுக்கு ஈகச் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.
(ம-14-125)

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 02 . 1944



மறைவு 15 . 09 . 2022

## திருமதி சுகுணவதி சிவபாலேஸ்வரராஜா

**(ஓய்வுநிலை ஆசிரியை – மங்கையற்கரசி வித்தியாலயம், நல்லூர்)**

கரைச்சிக்குடியிருப்பு முல்லைத்தீவை பூர்விகமாகவும் யாழ். கந்தர் மடத்திலும் பிற்காலத்தில் வெள்ளவத்தையில் இறுதிவரை வசித்தவருமாகிய திருமதி சுகுணவதி சிவபாலேஸ்வரராஜா அவர்கள் கடந்த (15.09.2022) வியாழக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கரைச்சிக்குடியிருப்பு முல்லைத்தீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான குருநாதபிள்ளை - தங்கரத்தினம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பதுமநிதி (கந்தர் மடம்) தம்பதியரின் மருமகளும், அமரர் Dr. சிவபாலேஸ்வரராஜா RMO அவர்களின் அன்புமிக்க பாரியாரும், சஞ்சீவன் (Network Manager, AMW, Colombo) மற்றும் தயாளன் (New Zealand) ஆகியோரின் பாசமிகு அன்னையும், தனுஷா மற்றும் சட்ஷாயினி ஆகியோரின் மாமியாரும், கிரிஷாந் (Royal College) மற்றும் அதிபன் (NZ) ஆகியோரின் பேர்த்தியும், நேசமணி கேதாரநாதன், மகேஸ்வரன், Dr.விமலேஸ்வரன் RMO, காலஞ்சென்ற சிவகுருநாதன், சிவநாதன், குலநாதன், சக்திதேவி சிவகுமார், சுபத்திராதேவி மகேந்திரன், ஜெயநாதன், லலிதாதேவி ஆகியோரின் உடன்பிறப்பும், சிவஸ்கந்தராஜாவின் (கந்தர்மடம்) மைத்துனியும், காலஞ்சென்ற சுந்தராம்பிகையின் சகலியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.09.2022) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 8.30 மணியளவில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு முற்பகல் 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 2.00 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**தகவல்: S.சஞ்சீவன் (மகன்)**
**No.39-4/2, Vaverset Place, Wellawatte.**
**Tel: 0112360869, 077 3958456**

(CS 16401) (3/6)

# மரண அறிவித்தல்



## சின்னத்தம்பி கந்தையா

ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர் சாவகச்சேரி
பலநோக்கு கூட்டுறவு சங்கம்

**தோற்றம்** 01.11.1944 — **மறைவு** 17.09.2022

சரசாலை வடக்கை பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா நேற்று (17.09.2022) சனிக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி சிவகாமி ஆகியோரின் அன்பு மகனும், மகாவல்லியின் அன்புக் கணவரும், துஷ்யந்தனின் (லண்டன்) அன்புத் தந்தையும் சிவமயூரினி (மயூரி) (லண்டன்) அவர்களின் மாமனாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், பசுபதி (தங்கராசா), அருணாசலம், பரமசாமி (டென்மார்க்), காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று (18.09.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதனை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மகன் : 0094779002306**
**பரமசாமி சகோதரர் (டென்மார்க்) : 004593861050**

தகவல்:
**குடும்பத்தினர்**
மீசாலை வடக்கு

(CR 38106) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மக்கள் மீது கடுமையான வரிச்சுமை திணிப்பு!

## மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு



**யாழ்ப்பாணம், செப். 18**

**ஜனநாயகத்தின் கொள்கையில்லாததில் நாட்டில் வரிச்சுமை என்பது நூற்றுக்கு 90 வீதம் மக்கள் மீது சுமத்தப்படுகின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற கோப் குழுவின் தலைவருமாகிய ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.**

யாழ். மாவட்ட மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குறிப்பாக, நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை என்பது உறுதித்தன்மை இல்லாத நிலையில் காணப்படுகின்றது. அதற்கான வலுவான திட்டங்கள் எவையும் இருக்கவில்லை. காரணம் கேட்டால் அதற்கான டொலர் இல்லை என்கின்றனர். இவ்வாறான நிலை தொடருமானால் இன்னும் பல கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

வடமாகாணத்தில் பல்வேறு விதமான மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். இவற்றில் காணாமல் போனவர்களின் உறவுகளுக்கான நீதி, தொழில் துறை அற்றவர்கள், விதவைகள், சிறுவர்களுக்கான போசாக்கு இன்மை, கொரோனா தொற்று நிலையிலும் கூட மாணவர்களின் கற்றல் நிலைமைகளில் வினைத்திறன் அற்ற நிலைமைகள், விவசாயிகளுக்கான உரமானியம் உள்ளிட்ட பிரச்சினைகள் பூதாகரமானவையாக உள்ளன.

மக்கள் விடுதலை முன்னணி என்பது அனைத்து மக்களுக்கான கொள்கையை வலியுறுத்துகின்ற கட்சியாகக் காணப்படுகின்றது. கட்சியின் ஊடாக ஒரு புதிதொரு ஜனநாயகத்தினை உருவாக்கமுடியும் - என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இ.சந்திரசேகரம், பிரதேச அமைப்பாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (ம-27)



மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவுக்காக ஒரு பகுதி பொருள்கள் கனடாவைச் சேர்ந்த மெற்றோ லான்ட் மீடியா ஊழியர்களின் நிதிப் பங்களிப்பில் பாடசாலை அதிபரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன. (ம-14)



## குழந்தையின் மருத்துவச் செலவுக்கு இராணுவத்தினரால் நிதி கையளிப்பு

வவுனியா, செப். 18

பொலிஸ் அதிகாரி ஒருவருடைய குழந்தையின் மருத்துவச் செலவுக்கு இராணுவத்தினரால் ஒரு தொகை நிதி நேற்றுக் கையளிக்கப்பட்டது.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் அனுராத பண்டாரநாயக என்ற பொலிஸ் உத்தியோகத்தரின் ஒன்றரை வயது மதிக்கத்தக்க குழந்தையின் மருத்துவச்செலவுக்கு ஒரு கோடியே 25 லட்சம் ரூபா வரை பணம் தேவைப்பட்டது. இந்த நிலையில் இராணுவத்தால் இலங்கை ரீதியாக அனைத்து இராணுவத்தினரிடமும் திரட்டப்பட்ட ஒரு தொகைப் பணத்தை, வவுனியா பொலிஸ் நிலையத்தில், வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முன்னிலையில் இராணுவ அதிகாரியொருவர் நேற்றுமுன்தினம் கையளித்தார். (ம-14,18)




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட எல்லே சுற்றுப் போட்டியில் அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய பெண்கள் அணி சம்பியனாகியது. (ம-14,9)

## பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம் செப்.18

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின், பெண் உறுப்பினர்களுக்கான செயற்றிட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு தொடர்பான இறுதிப் பயிற்சி எதிர்வரும் 22 ஆம் திகதி மற்றும் 23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம் மற்றும் ஐக்கிய நாடுகள், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிறுவனம் ஆகியன இணைந்து பயிற்சி வகுப்பை நடத்தவுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை பிரதேசசபை, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை ஆகியவற்றின் பெண் உறுப்பினர்களுக்கும், 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் மாநகரசபை, சாவகச்சேரி நகர சபை, சாவகச்சேரி பிரதேசசபை, வேலணை பிரதேசசபை, வலிகாமம் மேற்கு பிரதேசசபை, வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபை, வலிகாமம் வடக்கு பிரதேசசபை, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, நல்லூர் பிரதேசசபை, காரைநகர் பிரதேச சபை, ஊர்காவற்றுறை பிரதேசசபை, நெடுந்தீவு பிரதேசசபை ஆகியவற்றின் பெண் உறுப்பினர்களுக்கும் யாழ்ப்பாணம் பொது நூலக மண்டபத்தில் இந்த செயற்றிட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு தொடர்பான இறுதிப் பயிற்சி இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

## வடக்கு குத்துச்சண்டை போட்டியில் முல்லைத்தீவு அணிகள் முதலிடம்!



முல்லைத்தீவு, செப். 18

2022 ஆம் ஆண்டுக்கான வடமாகாண குத்துச்சண்டை போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆண்கள், பெண்கள் அணிகள் இரண்டும் வடமாகாணத்தில் முதலிடத்தைப் பிடித்துள்ளன.

மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் அண்மையில் இந்தப் போட்டிகள் நடைபெற்றன.

முல்லைத்தீவு மாவட்ட ஆண்கள் அணியினர் 7 தங்கப் பதக்கங்களையும், 5 வெள்ளி பதங்கங்களையும், 3 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று மாகாணத்தில் முதலிடம் பிடித்தனர். வவுனியா மாவட்ட அணி இரண்டாவது இடத்தையும், யாழ்ப்பாணம் மாவட்ட அணி மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட அணியினர் 3 தங்கப்பதக்கங்களையும், 4 வெள்ளிப்பதக்கங்களையும், 2 வெண்கலப்பதக்கங்களையும் பெற்று முதலிடம் பிடித்தனர். வவுனியா மாவட்ட அணி இரண்டாவது இடத்தையும், யாழ்ப்பாண மாவட்ட அணி மூன்றாவது இடத்தையும் பிடித்தன. (ம-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தாள் மகாராணியே..!

## மகாராணி எலிசபெத்தின் இலங்கை வருகைக் குறிப்புகள்

மகாராணியாக எலிசபெத் மூடிசூட முன்னர் (இளவரசியாக இருந்தபோது) 1952இல் உலக சுற்றுப்பயணத்தை தனது கணவருடன் சேர்ந்து ஆரம்பித்திருந்தார். இந்தப் பயணத்தில் ஜோர்ஜ் மன்னரும் (எலிசபெத்தின் தந்தை) இணைந்த அரச குடும்பத்து சுற்றுப்பயணமாகத்தான் முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், ஜோர்ஜ் மன்னரின் உடல்நிலை அப்போது பயணத்துக்கு அவ்வளவு சாதகமானதாக இருக்கவில்லை. இளவரசர் எலிசபெத்தையும் அவர் கணவர் பிலிப்பையும் , ஜோர்ஜ் மன்னர் 1952 ஜனவரி 31ஆம் திகதி விமானத்தில் வழியனுப்பி வைத்தார். (இவ்வாறு அவர் வழியனுப்பும் தெளிவான காணொலி காட்சிகளை இப்போது இணையத் தளங்களில் காணக்கிடைக்கிறது.)

1952 ஜுலை 9 ஆம் திகதிதான் எலிசபெத் இங்கிலாந்து திரும்புவதாக அந்தப் பயணம் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அவ்வாறு ஆறு மாத பயணத் திட்டம் ஒரு வாரத்தைக்கூட கடக்கவில்லை.

அந்தப் பயணத்தில் எலிசபெத் இலங்கையை அடைவதற்கு நிர்ணயித்திருந்த திகதிதான் 1952 பெப்ரவரி 7. ஆனால், பெப்ரவரி 6ஆம் திகதியன்று மன்னர் ஜோர்ஜ் மரணித்துவிட்டார். இதனால் பெப்ரவரி 7ஆம் திகதி எலிசபெத் கென்யாவிலிருந்து லண்டனுக்கு விமானத்தில் சென்றடைந்தார். அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட உலக சுற்றுப்பயணத்தைத் தான் எலிசெபத் மகாராணியாக முடிசூடியபின் முதல் வேலையாக மீண்டும் 1954 இல் ஆரம்பித்தார். அதன்படி அவர் இலங்கைக்கு 1954 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வந்திறங்கி, இங்கே பத்து நாட்கள் (ஏப்ரல் 21 வரை) தங்கியிருந்தார்.

சந்திரிகா பண்டாரநாயக்க ஜனாதிபதியாக இருந்த போது வெளியுறவு அமைச்சராகப் பதவி வகித்த தமிழரான லக் ஷ்மன் கதிர்காமரை தமிழ் மக்கள் அவ்வளவு லேசில் மறந்திருக்கமாட்டார்கள். அந்த லக்ஷ்மன் கதிர்காமரின் மூத்த சகோதரரின் பெயர் ராஜன் கதிர்காமர். இவர் இலங்கையின் இரண்டாவது சுதேசிய கடற்படைத் தளபதி. 1954 ஆம் ஆண்டு மகாராணியின் இலங்கை விஜயத்தின் போது ராணியின் பாதுகாப்புப் பணிகளை இவரே கவனித்துக் கொண்டவர். மகாராணி பயணம் செய்த 'கோதிக்' என்கிற கப்பல் இலங்கைத் துறைமுகத்தை நெருங்கியவேளை, அதற்கு பரிவாரமாக வந்த 'விஜய' என்கிற போர்க் கப்பலின் கப்டனாக ராஜன் கதிர்காமரே வழிநடத்தினார்.

மகாராணி நாடு திரும்பும் இறுதி நாள், ராஜன் கதிர்காமருக்கு Member of the Royal Victorian Order (MVO) என்ற உயர் கௌரவப் பட்டத்தை வழங்கினார்.

(1962 ஆம் ஆண்டு சிறிமா அரசை கவிழ்ப்பதற்காக நடந்த இராணுவச் சதியில் இருந்து ஆட்சியையும், பிரதமரையும் பாதுகாத்ததில் ராஜன் கதிர்காமருக்கு முக்கியமான பங்குண்டு)

இத்துடன் மேலும் முக்கியமாக இரண்டு பதவிப் பிரமாணங்களை மகாராணி அந்த விஜயத்தின்போது செய்து வைத்தார். பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவலயை பிரித்தானிய உச்ச நீதிமன்றமான பிறிவிக் கவுன்ஸிலின் உறுப்பினராக பிரகடனப்படுத்தினார். அத்தோடு சேர் ஒலிவர் குணதிலக்கவை புதிய ஆளுநராக நியமித்தார்.

தகவல் மூலம்:-
நடராசா சரவணன்



## நாட்டு மக்களுடைய ஆதரவு ராஜபக்சக்களுக்கு உண்டாம்

### குணதிலக்க ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, செப். 18

நாட்டு மக்களின் பெரும்பாலானவர்கள் ராஜபக்ச குடும்பத்தினருடன் உள்ளனர் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவராக கடமைகளைப் பொறுபேற்றுக்கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டு மக்களில் சிறிய தரப்பினர் ராஜபக்ச குடும்பத்தை நிராகரித்தாலும் நாட்டில் உள்ள பெரும்பாலானவர்கள் ராஜபக்ச குடும்பத்துக்கு ஆதரவாகவே உள்ளனர். அந்தக் குடும்பத்தினருடன் அவர்களுக்கு எந்த விரோதமும் இல்லை- என்றார். (எ-இ)

## உரும்பிராயில் வீடு உடைத்து திருட்டு

*மூன்றரை இலட்சம் ரூபா காசோலை, தொலைபேசி களவு*

யாழ்ப்பாணம், செப். 18

உரும்பிராய்மேற்குப் பகுதியிலுள்ள வீடொன்று நேற்றுமாலை உடைக்கப்பட்டு திருட்டுச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இதுதொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் உறவினர் வீட்டுக்குச் சென்று மாலை 5.30 மணியளவில் வீடு திரும்பியுள்ளனர். இதன்போது வீட்டின் பின்கதவு உடைக்கப்பட்டுள்ளது. அதன் வழியாக வீட்டினுள் நுழைந்த திருடர்கள், அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை, தொலைபேசி, 15 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர். (ஒ,125)

ஆங்கில வகுப்புக்கள்
தரம் 1 - தரம் 11 வரையான மாணவர்களுக்கு ஆங்கில வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
மேலும் தரம் 1 - தரம் 5 வரையான மாணவர்களுக்கு English Medium வகுப்புக்களும் நடைபெறுகின்றது.
பொன்னையா வீதி, ஆனைக்கோட்டை
0743519640

வீடு வாடகைக்கு
மார்டின் ஒழுங்கை யாழ்ப்பாணத்தில் 2 நவீன குளியலறைகளுடன் 3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
0776569936

இலவச ஆங்கில கணினி வகுப்புக்கள்
பிரிவு 41
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
- Diploma in English
- Diploma in ICT
- Diploma in Singalam
- Diploma in Political Science
- Diploma in Psychology & Counselling
- IELTS, LIFE SKILLS (A1, B1), டொச் மொழி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
- O/L, A/L வகுப்புக்களுக்கான English, ICT Paper Class வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- LLB Entrance வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம் : 24,25 /09/2022 10.00 AM
காலம் : 03 மாதங்கள் • சான்றிதழ் பிரிவுகள்
குறிப்பு: க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றி பெறுபேறு பெற்ற மாணவர்கள் இணைந்துகொள்ள முடியும்
IPS To Your Future திருநெல்வேலி
மேலதிக விபரங்களுக்கு
021 424 0229
076 685 2529

## கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

2022ஆம் ஆண்டில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில், 24 ஆயிரத்துக்கும் அதிகமான கைதிகள் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். அவர்களில் சுமார் 7 ஆயிரத்து 500 பேர் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் 13 ஆயிரம் கைதிகளையே தடுத்து வைக்க முடியும் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-இ)

வீடு வாடகைக்கு
வவுனியா 2ஆம் குறுக்குத்தெரு Vanni Inn Hotel அருகில் உள்ள மாடி A/C வீடு வாடகைக்கு (வைத்தியர்கள், தனியார், அரச உயர் அதிகாரிகள் வசிப்பதற்கு மிகவும் சிறந்த தனிவீடு)
தொடர்புகளுக்கு: 0772772726

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதிப் பற்றாக்குறையால் திணைக்களங்கள் திணறல்

நிதிப் பற்றாக்குறை காரணமாக அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபன சபைகளின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலைமை காரணமாக அந்த நிறுவனங்களின் அத்தியாவசிய சேவைகளை பராமரிப்பதும் பிரச்சினையாக மாறியுள்ளதாக பல முக்கியமான அமைச்சுக்களின் செயலர்கள் தெரிவித்துள்ளனர்.

சில திணைக்களங்களில் அன்றாட நடவடிக்கைகளுக்குத் தேவையான எழுதுபொருள்கள், காகிதாதிகள் என்பவற்றைப் பெறுதல், அத்தியாவசியப் பணியாளர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவுகளை வழங்குதல் போன்றன பிரச்சினையாக மாறியுள்ளது.

அமைச்சுக்களில் புதிய திட்டங்களை ஆரம்பிப்பது மாத்திரமன்றி ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை பராமரிப்பதிலும் கூட கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை- சுகாதாரம், கல்வி, நெடுஞ்சாலைகள், வீடமைப்பு போன்ற அமைச்சுக்களில் ஒப்பந்தகாரர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகை இருபதாயிரம் கோடிக்கு மேல் உள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை - இரண்டு அரச வங்கிகளில் இருந்தும் நிதி விடுவிக்கப்படாததால், நெல் சந்தைப்படுத்தல் சபையும் நெல் கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளது. (அ-ஒ-இ)

# புலிகளின் ஆயுதப் புதையல்; படைகளின் வேட்டை தோல்வி

யாழ்ப்பாணம், செப். 18

இருபாலை, டச்சு வீதியிலுள்ள வீடொன்றின் வளாகத்துக்குள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுதங்கள் மற்றும் தங்க நகைகள் புதைக்கப்பட்டுள்ளன என்று எழுந்த சந்தேகத்தில் அங்கு அகழ்வுப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் கோப்பாய் பொலிஸாரின் ஏற்பாட்டில் இந்த அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்பட்டது.

இருபாலை, டச்சு வீதியிலுள்ள வீடொன்றின் வளாகத்துக்குள் தங்க நகைகள் புதைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்து 6 பேர் அகழ்வுப் பணிக்கு தயாராகிய நிலையில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் தகவலின் அடிப்படையில் அண்மையில் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் இராணுவத்திலுள்ளவர்களும் அடங்கியிருந்தனர்.

இந்த நிலையிலேயே கோப்பாய் பொலிஸாரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் அனுமதியுடன் நேற்று அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் எந்தவொரு பொருளும் மீட்கப்படாததால் அங்கு தற்காலிகமாக அகழ்வுப் பணி நிறுத்தப்பட்டுள்ளது. (அ-ஒ-14-26)

# ஆளுநர் உத்தரவாதம்; போராட்டம் நிறுத்தம்!

யாழ்ப்பாணம், செப். 18

கொழும்பு, மகஸின் சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுவரும் கைதிகள், வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் வாக்குறுதிக்கமைய போராட்டத்தை நேற்றுக் கைவிட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்கள் தெரிவித்தனர்.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கொழும்பு, மகஸின் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகளை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடி விரைவில் விடுதலைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தெரிவித்ததைத் தொடர்ந்தே கைதிகளின் உணவு தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டதாக உறவினர்கள் தெரிவித்ததுடன் தங்களுடைய போராட்டத்தையும் கைவிடுவதாகத் தெரிவித்தனர். (அ-ஒ-20-27)

# நிலக்கரி உடன் கொள்வனவு; மின்தடை தவிர்க்கப்படும்?

கொழும்பு, செப். 18

நுரைச்சோலை அனல்மின் நிலையத்துக்குத் தேவையான நிலக்கரி இருப்பு அடுத்த மாதம் 20 ஆம் திகதி முடிவடையவுள்ளது என்பதால், முறையான கேள்விக் கோரல் நடைமுறைக்குப் புறம்பாக உடனடிக் கொள்முதல் மூலம் நிலக்கரியை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு ஆரம்பித்துள்ளது.

நிலக்கரி கொள்வனவு செய்வதற்கு மாதாந்தம் தேவைப்படும் 95 மில்லியன் அமெரிக்க டொலர் தொகையை வழங்க முடியாது என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அதற்கமைவாக மின் உற்பத்தி நிலையத்துக்குத் தேவையான நிலக்கரியை கட்டம் கட்டமாக கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உடனடிக் கொள்முதலின் கீழ் நிலக்கரியை இறக்குமதி செய்யத் தயாராகவுள்ள நான்கு நிறுவனங்கள் தொடர்பான கோப்புகள் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-இ)

## ஹெரோயினின்...

கொரோனா, பொருளாதார நெருக்கடி எனப் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் யாழ். குடாநாட்டில் உயிர் கொல்லிப் போதைப் பொருளான ஹெரோயின் பயன்பாடு பல்கிப் பெருகியுள்ளது.

கொழும்பிலிருந்து தொடர்ச்சியாக உயிர்க் கொல்லி ஹெரோயின் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்படுகின்றது. இங்குள்ள பல நூற்றுக்கணக்கான முகவர்கள் ஊடாக அவை குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படுகின்றன.

உயிர்க்கொல்லி ஹெரோயினை ஊசி மூலமே அதிகளவானோர் பயன்படுத்துகின்றனர். ஒரு நாளைக்கு 30 மில்லி கிராம் தொடக்கம் 300 மில்லி கிராம் வரையில் நுகர்கின்றனர்.

18 - 23 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்களே உயிர்க்கொல்லி போதைப் பொருளான ஹெரோயினை அதிகளவில் நுகர்கின்றனர். இதனைத் தவிர பாடசாலை மாணவர்களும் நுகர்கின்றனர். ஹெரோயின் நுகரும் பெரும்பாலான இளைஞர்களின் பெற்றோர் இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து தாமே தமது பிள்ளைகளை பொலிஸில் ஒப்படைக்கின்ற சம்பவங்களும் இடம்பெறுகின்றன. சில பெற்றோர் மருத்துவமனைகளிலும் தமது பிள்ளைகளை ஒப்படைத்துள்ளனர்.

'எவ்வளவு காலம் சென்றாலும் பரவாயில்லை. இவனை நீங்கள் வைச்சிருங்கோ. வெளியில விட்டால் பெரிய பிரச்சினை' என்று தெரிவித்து தாய் ஒருவர் அண்மையில் தனது மகனை மருத்துவமனையில் ஒப்படைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஹெரோயின் பாவனைக்கு அடிமையான சுமார் 320 பேர் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். உயிர்க்கொல்லி ஹெரோயினுக்கு அடிமையானமையால் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு கைதானவர்களும் இதற்குள் உள்ளடங்குகின்றனர்.

உயிர்க் கொல்லி போதையான ஹெரோயின் பாவனைக்கு அடிமையானவர்கள் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துச் செல்வதால், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் விசேட சிகிச்சைப் பிரிவு இரு மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு இதுவரை 134 பேர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் சுமார் 20 கிராமங்கள் ஹெரோயின் போதைக்கு அடிமையானவர்களின் கூடாரமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தக் கிராமங்களிலுள்ள இளைஞர்களில் அநேகர் இதனைப் பயன்படுத்துகின்றமையும் பல்வேறு தரப்புக்கள் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்தில் அதிகரித்துச் செல்லும் இந்தப் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு முறையான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், சிவில் சமூகத்தினர் முன்வரவேண்டுமென்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-ஒ-5)

## 7 வயதுச்...

அந்தப் பகுதியிலுள்ள முன்பள்ளி ஒன்றில் வைத்தே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 14 வயதுச் சிறுவன் கைது செய்யப்பட்டு நன்னடத்தை பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான். (அ-ஒ-5)

## 15 வயதுச்...

பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளான்.

அந்தப் பகுதியிலுள்ள முன்பள்ளி ஒன்றில் வைத்தே இந்தச் சம்பவம் கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.

மாலைவேளையில் சிறுவனை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்று மூவரும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுவனின் தாயார் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - முறைப்பாட்டை மீளப்பெறுமாறு சிறுவனின் தாயாருக்கு, அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் அழுத்தம் - மிரட்டல் - விடுப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ஒ-5)

# ரஷ்யப் படைகளிடம் சிக்கிய 7 இலங்கை மாணவர்கள் மீட்பு

## உக்ரைன் ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, செப். 18

கார்கீவ் பகுதியில் ரஷ்யப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மாணவர்கள் 7 பேர் மீட்கப்பட்டுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் ரஷ்யப் படையினரால் கார்கீவ் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

கார்கீவ் பிராந்தியத்தின் சில பகுதிகளை உக்ரைனியப் படைகள் மீளக்கைப்பற்றிய போதே, 7 இலங்கையர்கள் மீட்கப்பட்டதாகவும், அவர்களுக்கு உரிய மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் உக்ரைன் ஜனாதிபதி கூறினார். (அ-ஒ-இ)


**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் இருபாலையில் 12 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1KM தூரத்தில்
- 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்.
- BH Lane விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்
- 18 அடி பாதையுடன் நல்லசூழல் நன்னீர் ஊற்று நிலம்
- யாழ்.நகரிலிருந்து 4Km தூரம்
- 1 பரப்பின் விலை (600000/=) ரூபா ஆறு லட்சம்
- பார்வையிடும் நேரம் காலை 9.00 தொடக்கம் 6.00 மணி வரை

**0772880152**
**0771488348**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்கள்/வான்கள் வாடகைக்கு

கார்கள்/வான்கள் வாடகைக்கு விடப்படும்.
RSP Rent a Car (யாழ்ப்பாணம்)

**0778989691**

## வர்த்தக பிரிவிற்கான ஆசிரியர் தேவை

கணக்கீடு, வணிகக்கல்வி, பொருளியல் போன்ற பாடங்களை மாணவர் ஒருவருக்கு தனியாக கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை.

**0763962454**

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் மணல் தறை லேனில் சகல வசதிகளுடன் கூடிய புதிய வீடு வாடகைக்கு உண்டு.

**077 634 1525** (CR 38104) (3/6)

## இலகுவில் சிங்களம் பேச

சிங்களம் மொழி பேசுவதற்கான வகுப்புக்கள் வெற்றிகரமாக நடைபெறுகின்றன. அனைவரும் இணையுங்கள். (CS 20805) (3/6)

**077 065 2181, 070 403 5735**

## வேலையாட்கள் தேவை

யாழ். அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கிவரும் பிரபல தொழிற்சாலைக்கு கீழ் வரும் வெற்றிடங்களுக்கு தகுதியானவரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கடைச்சல் தொழிலாளி (lathe Man)

முன்அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும். மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**074 337 4333**

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1994ல் பிறந்த அரச தொழில் புரியும் அவிட்ட நட்சத்திரம் 7 ல் செவ்வாயுள்ள (கி.பா-51) மணமகளுக்கு வெளிநாட்டு மணமகன் தேவை.

**0706258610**

## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள ஓடும். LG குளிர்சாதனப்பெட்டி விற்பனைக்குண்டு.

**076 479 1473** (CS 46535) (2/6)

## மணமகள் தேவை

வெளிநாட்டில் Senior Accountant ஆக கடமையாற்றும் MBA முடித்த 1993 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உத்திரட்டாதி நட்சத்திரம் உள்ள மணமகனுக்கு அழகிய நற்குணமுள்ள பட்டதாரி, டாக்டர், விரிவுரையாளர், எக்கவுண்டன் போன்ற துறைகளில் உள்ள மணமகள் தேவை.

**T.P No: 077 841 9061** (CS 46507B) (3/6)

## NBMS 0776630793

## AL இணைந்த கணிதம்

**AL 2024** 2ஆம் தவணைப் பாடங்கள்
**AL 2023** 4ஆம் தவணைப் பாடங்கள்

ஆரம்பம் : October 2022 பதிவுகளுக்கு / விபரங்களுக்கு : 077 66 30 793
கிளிநொச்சி நீதிமன்றம் அருகாமை கருணாநிலையம் எதிரே
சகாயக் கட்டணம் 700.00 ரூபா /மாதம்

## For Sale

Brand new european brought MAKITTA CORDLESS DRILL with 136 bits.German made sparsely used MIELE brand VACUUM CLEANER. Sparsely used Microwave Oven. 8 Piece solid "SOORIYAMARA" wood Settee Set & 7' x 3 1/2' Formica Top Dining Table for sale (CS 20801) (3/6)

**Contact: 0766 073094**

## மணமகள் தேவை

18.09.1987 இல் பிறந்த நட்சத்திரம் பூசம் கிரக பாவம் 28 உயரம் 5'7'' உடைய இந்து கௌரவ குடும்பம் குலத்தில் பிறந்த தீய பழக்கங்கள் எவையுமற்ற, நியூசிலாந்தில் பொறியியலாளராக (Civil Engineer) தொழில் புரியும் மகனுக்கு படித்த அழகான மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். சீதனம் பெரிதாக எதிர்பார்க்கவில்லை. (CS 46589) (3/6)

**021 222 8805, 077 614 6123**

## Room வாடகைக்கு

சகல நவீன வசதிகளைக் கொண்ட அறைகள் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக மாணவிகளுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் வழங்கப்படும்.

**077 308 3007**

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

பொதிகள் கடிதங்கள் அனுப்பிட

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு ●UK 1700/- ●SWISS 2700/-
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகை

திருமுருகன் கொம் நெற்
321 K.K.S Road, Jaffna (முட்டாஸ் கடை சந்திக்கு அருகாமை) **077 755 4528**

## வீடு வாடகைக்கு தேவை

இருவர் கொண்ட குடும்பத்திற்கு யாழ். நகர சுற்றாடல் பகுதியில் அல்லது கொக்குவில் தொடக்கம் தெல்லிப்பளைப் பகுதியில் தனி வீடு அல்லது இணை வீடு வாடகைக்குத் தேவை.

**077 695 8586** (CS 46593) (3/6)

## ENGLISH CLASSES

SPOKEN ENGLISH WITH GRAMMAR
யாழ் நகரில் தனி வகுப்பு
G.C.E O/L, A/L, பட்டதாரிகள் தொழில் புரிபவர் ஆர்வமுள்ளவர்களுக்கு
G.C.E O/L Literature

K.Ganesh B.A **077 766 8725**

## மணமகள் தேவை

யாழ். இந்து "ஐரோப்பிய பிரஜை 54 வயதுடைய அச்சுவினி நட்சத்திர மணமகனுக்கு ஏற்ற மணமகளை எர்பார்க்கின்றனர்.

**077 757 1934** (CS 20800) (2/6)

## For Sale

Tafe tractor for sale.
RG 7xxx. Reg year. 2020.
November. Not used in mud

**074 310 1079** (CS 20817) (2/6)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அண்மையாக 61 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**077 676 4380** (CS 20812) (3/6)

## Student Visa and Work Visa

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

- Student Visa: UK, CANADA, FINLAND, SWEDEN, FRANCE AND AUSTRALIA
- Visitor / Tourist Visa: All Countries.
- Work Visa: UK and Canada.(Nurse, Chef, Farm workers etc..)

சகல விதமான online application செய்து தரப்படும்
(Appointments, online application etc......)



Call: 0770385584
Visa Consultant
134 Adiyapatham Road, Thirunelvely, Jaffna.
Email: naltcjaffna@gmail.com

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகர் நல்லூர் பிரதேசத்திற்குட்பட்ட இடங்களில் வீடு வாடகைக்கு தேவை.

**077 161 8659** (CS 20767) (3/6)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் அரச உத்தியோகம் பார்க்கும் குடும்பம் ஒன்றிற்கு சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

**074 331 8462** (CS 46530) (3/6)

# வேலை வாய்ப்பு

### உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை



- வரவேற்பாளர்கள் ஆண் / பெண்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)
- கணினி பக்க வடிவமைப்பாளர்கள் (ஆண் / பெண்)

**திறமைக்கேற்ப ஊதியம் வழங்கப்படும்**

சுயவிபரக்கோவையுடன் நாளை (19.09.2022) திங்கட்கிழமை முற்பகல் : 10.00 - மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை நேரில் வரவும். (CR 38100) (3/6)

உதயன் பிரதான காரியாலயம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலையாள்கள் தேவை

கோண்டாவிலில் அமைந்துள்ள மிக்சர் தொழிற்சாலைக்கு பெண் வேலையாள்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு

**077 789 1355** (CS 20815) (3/6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 04 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- கைதடி சந்தியிலிருந்து 750 M தூரத்தில்
- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- 20 அடிப் பாதையுடன்

**076 7558 606**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 36 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- விவசாயம் செய்வதற்கும். வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை 1½ லட்சம் (150,000) மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: **077 6585 999**
**076 4365 814**
**077 8748 135**

## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- **கணக்காளர்:**
  A/L வர்த்தக துறையில் படித்த கணினி அறிவுடைய ஆண்/பெண். முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- **கணினி தரவு பதிவாளர்** (Data Entry Operator):
  (ஆண் / பெண்)
- **விற்பனை உதவியாளர்** : (ஆண் / பெண்)
- **சிட்டை எழுதுனர்:**
  வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

சுயவிபரக் கோவையுடன் திங்கள் முதல் சனிக்கிழமை வரை மு.ப. 10.00 மணிமுதல் பி.ப. 4.00 மணிவரை நேரில்வரவும்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
**077 224 5511**

## வரவேற்பாளர் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் Hotel Lovusiyah (Pvt) Ltd விடுதிக்கு ஆண் / பெண் (பகல்) சிங்களம், ஆங்கிலம், .கணினி அறிவுடைய வரவேற்பாளர்கள் தேவை. (CR 38103) (3/6)

**021 222 1326, 021 222 1327**

# VACANCIES

## NORTH LINK ENGINEERING

- **Accounting Assistant - Jaffna -02**
  Age limit 21 to 25 (female)
- **Management Assistant –Jaffna -02**
  Age limit 21 to 25 (female)
- **Management Assistant –Kilinochchi -02**
  Age limit 21 to 25 (female)
- **IT-Technicians – Jaffna -02**
  (Driving license should be have)
  Age limit 21 to 30 (male)
- **IT-Technicians – Kilinochchi -02**
  (Driving license should be have)
  Age limit 21 to 30 (male)
- **Marketing Staffs – Jaffna -02**
  (Driving license should be have)
  Age limit 21 to 30 (male)
- **Marketing Staffs – Kilinochchi -02**
  (Driving license should be have)
  Age limit 21 to 30 (male)
- **IT Technicians - Mullaitivu - 2**
  (Driving license should be have)
  (Male) Age 21- 25

Please foward your Applications with in 7 days sent to the followning email address (CS 46586) (3/6)

**northlinksales@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.
- ஔவையார்

Registered as a Newspaper

சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 புரட்டாதி 1 ஞாயிற்றுக்கிழமை (18.09.2022) சிகரம் : 116

# கோத்தா நாட்டுக்குள் இருந்தாலே அவர் மீது வழக்கு தொடரமுடியும்!

**காலிமுகத்திடல் போராட்ட முன்னணிச் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜிவ்காந்**





**இலங்கையில் பெரும் மாற்றத்தை உண்டுபண்ணிய 'அரகலய ' என்றழைக்கப்படும் காலிமுகத்திடல் போராட்டத்தின் முன்னணிச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான ராஜ்குமார் ரஜிவ்காந், போராட்டக்காரர்களின் இப்போதைய நிலை, போராட்டம் தொடர்பான தகவல்கள், எதிர்காலத்தில் போராட்டக்காரர்களின் நடவடிக்கை என்ன என்பன தொடர்பில் 'உதயன் - சஞ்சீவி'க்கு வழங்கிய நேர்காணல் இது.**

○ நேர்காணல்: த.பிரஸ்நோவ்

**கே:** *உலகையே திரும்பிப் பார்க்க வைத்த 'அரகலய' என்ற காலி முகத்திடல் போராட்டம் இலங்கையின் நிறைவேற்றதிகார ஜனாதிபதியையே பதவியை விட்டு ஓடச்செய்யுமளவுக்கு மிக எழுச்சி கொண்டிருந்தது. மக்களின் பேராதரவும் அந்தப் போராட்டத்துக்கு கிடைத்திருந்தது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இந்த நிலையில் தலைகீழ் மாற்றம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. காலிமுகத்திடலை போராட்டக்காரர்கள் காலிசெய்து போகுமளவுக்கு. போராட்டக்காரர்களை கைதுகள் மூலம் அரசாங்கம் மிரட்டுகின்றது. நீங்களும் அவ்வாறு கைது செய்யப்பட்டிருந்தீர்கள். மக்களும் இந்தப் போராட்டத்தின் மீது நம்பிக்கையற்றவர்களாக மாறத்தொடங்கிவிட்டனர். இந்த நிலையில் மக்களுக்காக உங்கள் போராட்டம் தொடருமா? அல்லது முடிவுக்கு வந்துவிட்டதா?*

**ப:** நிச்சயம் போராட்டம் தொடரும். போராட்டம் முடிவுறவில்லை. காலிமுகத்திடத்திலிருந்து அது நகர்ந்துசென்றிருக்கின்றது. அவ்வளவுதான். அமைவிடங்கள் மாறியிருக்கலாம் . ஆனால் போராட்டம் பல்வேறு வடிவங்களில் ,அமைப்பு ரீதியாக தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது.

**கே:** *போராட்டங்களில் சில கோரிக்கைகள் இருந்தன. மக்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்தல், கட்டமைப்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தல், கட்டமைப்பு ரீதியான மாற்றத்துடன் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு தண்டனை வழங்கல் என்பன அவற்றுள் முக்கியமானவை. அந்தக் கோரிக்கைகள் வெற்றி பெற்றுள்ளனவா?*

**ப:** காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை பொறுத்தவரை ஆறு அம்சக் கோரிக்கைகளும், இலங்கையின் கட்டமைப்பு மாற்றத்துக்கான முதற்கட்ட செயற்பாடே அதற்காக எதிர்கட்சியில் உள்ள அனைத்துத் தலைவர்களுடன் பேசினோம். அதற்கான பூரண ஒத்துழைப்புக்கள் தருவதாக அவர்களும் உறுதி மொழி தந்திருந்தனர். அதாவது கட்டமைப்பு மாற்றத்துடன் ஊழல்வாதிகள் நீதிமன்றத்துக்கு முன் நிறுத்தப்படல் என்பதற்கு சம்மதித்திருந்தனர். அந்தவகையில் நாம் எமது இலக்கை அடைந்து கொண்டிருக்கிறோம்.

**கே:** *ரணில் விக்கிரமசிங்க ஆட்சிபீடம் ஏறுவதற்கு முன்னர் உங்களுக்கு ஆதரவாக செயற்பட்ட சட்டத்தரணிகள் சங்கம், பொதுஅமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு தூதுவராலயங்கள் தற்போது உங்கள் பக்கம் இல்லையென்ற கருத்து நிலவுகின்றதே?*

**ப:** தற்போதும் கைதுகளுக்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம், ஜனாதிபதி சட்டத்தரணிகள் முன்வந்து எமக்காக வாதாடுகின்றனர். ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் அவர்களின் நிலைப்பாட்டில் சிறு மாற்றம் ஏற்பட்டது உண்மைதான். அதனை இல்லை என்று மறுக்கமுடியாது. சிலவேளைகளில் சிலருடைய நிலைப்பாடென்பது, குறுகிய கால அரசியல் நிலைப்பாடாகவும் இருக்கலாம் அல்லது போராட்டங்கள் தொடரும் போதும் சாதாரணசூழ்நிலை(அடக்குமுறையற்ற) நிலவும் என்று கணித்திருக்கலாம். அப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பார்வைகள் உண்டு. ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு பிற்பாடு பொருளாதாரப் பிரச்சினைகள் தீரும் என்று பலர் நம்பினார்கள். அவருக்கு கால அவகாசத்தைக் கொடுத்து பார்க்கலாம் என்று சிலர் வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் போராட்டம் என்ற அடிப்படையில் பார்த்தால் , சில விடயங்களில் விட்டுக்கொடுக்காமல் விடாப்பிடியாக இருந்தால்தான் நாட்டில் சிறப்பான பொறிமுறை மாற்றத்தினை ஏற்படுத்தலாம் . அந்த அடிப்படையில், நாங்கள் அதை விட்டுக்கொடுக்கவில்லை. இதனால் சில தரப்புகளின் ஆதரவு மனநிலை ஓரளவுக்கு குறைந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். ஆனாலும் அவர்கள் தமது ஆதரவினை முற்றுமுழுதாக

## போராட்டம் முடியவில்லை; வடிவம் தான் மாறியுள்ளது

விலக்கிக் கொள்ளவுமில்லை. தற்போதும் இடம்பெறும் கைதுகளுக்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம் குரல்கொடுக்கின் றது. எங்களைக் கைது செய்தால், அவர்கள்தான் வருகின்றார்கள். அவர்கள் நாடாளுமன்றத்தையும், அரசையும் நோக்கி கேள்விகளை கேட்டுக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.

**கே:** *சர்வதேச நாணய நிதியம், வெளிநாட்டு கடன் மற்றும் முதலீட்டின் மூலமே பொருளாதாரத்தைச் சரிவில் இருந்து நாட்டை முன்னேற்றமுடியும். ஆனால் அதற்கு இவ்வாறான போராட்டங்கள் தடையாக இருக்குமென்று சொல்லப்படுகின்றதே?*

**ப:** கடன் வாங்குவது பொருளாதார முன்னேற்றம் என்று இந்த நாட்டை ஆட்சி செய்பவர்கள் மக்களை ஏமாற்றி வைத்திருக்கின்றார்கள். சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது பொருளாதார முன்னேற்றத்துக்கான ஒரு படிமுறை அல்ல. பொருளாதாரம் இதற்கு மேல் சரியமுடியாது என்னுமளவுக்கு போயுள்ளதால் , சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லவேண்டிய நிலை எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. உண்மையில் எங்களுடைய நாட்டை பொறுத்தவரை ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக்கு முன்னர், மூடிய பொருளாதார நிலை இருக்கும் போது, சுய உற்பத்திகள் அதிகளவு அதிகரித்துக் கொண்ட ஒரு காலம் இருந்தது. ஆனால் நாட்டின் உற்பத்தித் துறையைப் பற்றி எவ்வித கவலையும் கொள்ளாமல், அந்தப் பொருளாதார முறைமையை ஜே.ஆர் அன்று திறந்து விட்டதன் விளைவின் நீட்சியால், உற்பத்திப் பொருள்களையும், விவசாய பொருள்களையும் இறக்குமதி செய்யும் நுகர்வுக்கலாசாரத்தில் இலங்கை தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எங்களுடைய உற்பத்திப் பொருள்கள் எதிர்பார்த்த அளவில் ஏற்றுமதி செய்யப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. இங்கிருந்து வெளிநாடு சென்றவர்களின் அந்நியச்செலாவணி வருமானம் மிகவும் குறைவுதான். எனவே ஏற்றுமதி வருமானத்துக்கும் இறக்குமதிச் செலவுக்குமிடையிலான வித்தியாசம் மறையாக இருக்கும் அந்நியச் செலாவணிதான் நாட்டின் பெரும் பிரச்சனை. இந்தப் பிரச்சினைக்கு கடன்வாங்குவது தீர்வல்ல. இது தொடர்பில் பொருளாதார நிபுணர்களுடன் கலந்து ஆலோசிப்பதுடன், உள்நாட்டு உற்பத்தி துறையைப் பெருக்குதல், உள்நாட்டு உற்பத்தியில் ஈடுபடுபவர்களை ஊக்குவித்தல், உள்நாட்டில் அந்நியச்செலாவணியை ஈட்டித்தரும் நிறுவனங்களை உருவாக்குதல், ஏற்றுமதி பொருட்களை மேலும் அடையாளப்படுத்துவதுடன் அவற்றுக்கு முதலீடு செய்தல், உற்பத்தித் துறைகளில் ஈடுபடுவோரை நிபுணத்துவம் பெறவைக்கும் பயிற்சிகளை வழங்கல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இலங்கை ஆலோ

06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

18 செப்ரெம்பர் 2022



# ஜெனிவா கூட்டத்தொடரின் பின்னணியில் நடக்கும் போராட்டங்கள்

○ நிலாந்தன்

இம்மாதம் 10ஆம் திகதியிலிருந்து சுமந்திரனின் தலைமையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக ஒரு தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஜெனிவா கூட்டத்தொடரின் பின்னணியில் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்துக்கு "காங்கேசன்துறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரை" என்று பெயரிடப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக யார் போராடினாலும் அதை ஆதரிக்கவேண்டும். எனினும், இந்தப்போராட்டம் தொடர்பாக இப்போதுள்ள அரசியற்சூழலின் பின்னணியில் சில கேள்விகள் எழுகின்றமை தவிர்க்க முடியாதது.




கேள்வி ஒன்று, போராட்டத்தின் தலைப்புப் பற்றியது. 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை'யிலுமான ஆர்ப்பாட்டப் பேரணிக்குப் பின் அதே பாணியில் பெயரிடப்பட்ட மூன்றாவது போராட்டம் இது. 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' பேரணிக்கு நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து வெவ்வேறு தரப்புகள் உரிமை கோருகின்றன. அதில் சுமந்திரன், சாணக்கியன் போன்றோரும் ஒரு தரப்பு. அந்தப்பெயர் தங்களுக்குரியது என்பதனை காட்டும் விதத்தில் மீண்டும் மீண்டும் சுமந்திரன் தான் ஒழுங்கு செய்யும் போராட்டங்களுக்கு இது போன்ற பெயர்களை வைத்து வருகிறாரா? தமிழக மீனவர்களுக்கு எதிராக அவர் தொடங்கிய போராட்டத்துக்கு முல்லைத்தீவு தொடக்கம் பருத்தித்துறை வரை என்று பெயரிட்டிருந்தார். அதன்பின் இப்பொழுது காங்கேசன்துறை தொடக்கம் அம்பாந்தோட்டைவரை என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் போராட்டத்தலைப்பின் ஆங்கிலச் சுருக்கத்தை வெள்ளை எழுத்தில் கறுப்புப் பட்டியில் பதித்து அந்தப்பட்டியைத் தங்கள் தலைகளில் அணிந்து போராடுவதும் ஒரே பாணியிலானதே. இதுபோன்ற செயல்களின்மூலம் 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' போராட்டத்தின் உரித்து தமக்கே அதிகம் என்று சுமந்திரனும் அவரைச் சேர்ந்தவர்களும் சொல்ல முற்படுகிறார்களா?

கேள்வி இரண்டு, ஏற்கனவே பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து சேகரிக்கும் ஒரு போராட்டத்தை சுமந்திரன் தலைமை தாங்கி முன்னெடுத்தார். யாழ். நகரப் பகுதியில் தொடங்கிய அந்தப் போராட்டம் தென்னிலங்கை, மாத்தறைவரை சென்றது. தென்னிலங்கையில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களும் அதற்கு ஒத்துழைத்தார்கள். அதில் சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்களுக்கு என்ன நடந்தது? அவை யாரிடம் கையளிக்கப்பட்டன?அந்தப் போராட்டத்தைப் போலவே இப்பொழுது தொடங்கப்பட்டிருக்கும் போராட்டமும் 'கமுக்கமாக' முடிந்துவிடுமா?

கேள்வி மூன்று, இந்தப் போராட்டம் தொடங்கிய அன்று கிட்டத்தட்ட 60 க்கும் குறையாத ஆட்களே அதில் பங்குபற்றினார்கள். அதாவது மக்கள் மயப்படாத ஒரு போராட்டம். நாடாளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக ரவூப் ஹக்கீம் தொழிற்சங்கவாதியான ஸ்ராலின் போன்றோர் பங்குபற்றிய ஒரு போராட்டத்தின் முதல்நாள் அன்று மிகக்குறைந்த ஆட்களே கலந்து கொண்டமை என்பது எதைக் காட்டுகிறது? அதை ஒரு மக்கள் மயப்பட்ட பெருந்திரள் போராட்டமாக முன்னெடுக்கவேண்டும் என்ற திட்டம் எதுவும் ஏற்பாட்டாளர்களிடம் இருக்கவில்லையா?

இந்தக் கேள்வியை மேலும் விரித்துச் செல்லலாம். சில மாதங்களுக்கு முன்புவரை கொழும்பு காலிமுகத்திடலில் படைப்புத்திறனோடு எப்படிப் போராடலாம் என்பதற்கு சிங் கள மக்கள் பல முன்னுதாரணங்களை காட்டியிருக்கிறார்கள். படைப்புத்திறன் மிக்க அறவழிப் போராட்டம் அது. அந்தப் போராட்டத்தில் அடிப்படையான பலவீனங்கள் உள்ளன. தமிழ்மக்களுக்கு அந்தப் போராட்டம் தொடர்பில் கேள்விகள் உள்ளன. ஆனாலும், அந்தப் போராட்டத்தில் படைப்புத்திறன் இருந்தது. புதுமை இருந்தது. அதில் பல பிரபல படைப்பாளிகள் பங்குபற்றினார்கள். புத்திஜீவிகள், சமூகப் பெரியார்கள், மதப் பெரியார்கள் பங்குபற்றினார்கள். எனவே, அது சமூகத்தின் எல்லாத் தரப்பினரையும் ஒருங்கிணைக்கும் சக்திமிக்கதாகக் காணப்பட்டது. கொழும்பில் ராஜதந்திரிகளின் வதிவிடங்கள் அமைந்திருக்கும் ஒரு பகுதியில் உலகத்தின் கவனத்தையும் , ஊடகங்களின் கவனத்தையும் ஈர்க்கும் விதத்தில் அந்தப் போராட்டம் படைப்புத்திறனை வெளிப்படுத்தியது.

அந்தப்போராட்டத்தால் அருட்டப்பட்டு, மட்டக்களப்பில் காந்தி பூங்காவைச் சூழ்ந்த பகுதிகளில் ஒரு போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. மட்டக்களப்பைச் சேர்ந்த பெண்ணியச் செயற்பாட்டாளர்களும், ஏனைய சமூகச் செயற்பாட்டாளர்களும் இணைந்து 'நீதிக் கிராமம்' என்று ஒன்றை உருவாக்கினார்கள். எனினும் 'அரகலய' வெளிப்படுத்திய படைப்புத்திறனை தமிழ்க் கிராமம் வெளிப்படுத்தவில்லை. அதில் ஒப்பீட்டளவில் படைப்புத்திறன் குறைவாக இருந்தது. அது சமூகத்துக்குள் நொதிக்கத் தவறியது. அதுவும் மக்கள் மயப்படவில்லை.

தமிழ்ப்பரப்பில் ஏற்கனவே அவ்வாறு மக்கள்மயப்படாத போராட்டங்கள் உண்டு. காணாமல் போகச் செய்யப்பட்டோருக்காக உறவினர்கள் நடத்தும் போராட்டம், அரசியல் கைதிகளுக்கான போராட்டம், காணிகளை மீட்பதற்கான போராட்டம் போன்ற பல போராட்டங்கள் ஒப்பீட்டளவில் மக்கள் மயப்படாதவைதான். அரிதாக பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை அல்லது "எழுக தமிழ்" போன்ற சில போராட்டங்கள் மக்கள் மயப்படுகின்றன. மற்றும்படி தமிழ்ப்பரப்பில் கடந்த 13ஆண்டுகளில் பெரும்பாலான போராட்டங்கள் மக்கள் மயப்படாதவைதான். போராட்டத்தின் நெருப்பை அணையவிடாமல் பாதுகாத்தோம் என்று கூறித் திருப்திப்படுவதைத்தவிர அதற்குமப்பால் அவை எந்த மக்களுக்கான போராட்டங்களோ அந்த மக்கள் மத்தியில் நொதிப்பை, திரட்சியை ஏற்படுத்தவில்லை என்பதே உண்மைநிலை.

இப்படிப்பட்டதோர் அரசியல் பின்னணியில்தான் காங்கேசன்துறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரையிலுமான போராட்டமும், அதிகம் மக்கள் மயப்படவில்லை. ஆனால், கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான கைது நடவடிக்கைகளை எதிர்த்து, கட்சிகளும் தொழிற்சங்கங்களும் மாணவர் அமைப்புக்களும் இணைந்து ஒழுங்குபடுத்திய ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளானவர்கள் கலந்துகொண்டார்கள். இதில் சுமந்திரன் அணியைக் காணவில்லை. ஆயின், 'காங்கேசன்துறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரையிலுமான' போராட்டத்தை ஒழுங்குபடுத்தியவர்கள் அதுதொடர்பாக பொருத்தமான மக்கள் தரிசனங்களைக் கொண்டிருக்கவில்லை என்றே தெரிகிறது?

இந்தப்போராட்டம் அரகலயவிடமிருந்து புத்தாக்கத்திறனைக் கற்றுக் கொள்ளவில்லை. ஆனால், இந்தப்போராட்டத்துக்கு எதிராக உருவாக்கப்பட்ட ஒரு "மீம்ஸ்" வாய்விட்டு சிரிக்கும் அளவுக்கு படைப்புத்திறன் மிக்கதாக இருந்தது. அதில் ஒரு பட்டா ரக வாகனத்தில் சுமந்திரன் சாரதியின் ஆசனத்தில் இருக்கிறார். மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சயந்தன் பின்பெட்டியில் இருந்தபடி எதையோ ஒலிபெருக்கியில் அறிவிக்கின்றார். அது பழைய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான தெரு வியாபாரிகளின் அறிவிப்பு. இதுதான் அந்த 'மீம்ஸ்'. போராட்டத்தில் இல்லாத படைப்புத்திறன் போராட்டத்துக்கு எதிரான ஒரு மீம்ஸில் இருந்தமை என்பது சுவாரசியமான ஒரு முரண்.

நாலாவது கேள்வி, சுமந்திரன் ஒரு நாட்டறிந்த வழக்கறிஞர். அரகலயவோடு தொடர்ச்சியாக தனது நெருக்கத்தை காண்பித்து வருபவர். அரகலய சட்ட மறுப்பாக தோன்றிய ஒரு போராட்டம். அந்தப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் வன்முறைகள் வெடித்தன. அந்த வன்முறைகளுக்கும் தங்களுக்கும் தொடர்பு இல்லை என்று ஏற்பாட்டாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் அரசாங்கமோ அந்தப்போராட்டத்தை சட்டத்தின் தராசில் வைத்து நிறுக்கப் பார்க்கின்றது. அதனால்தான் போராட்டத்தின் முன்னணிச் செயற்பாட்டாளர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தவிடயத்தில் போராட்டத்தின் தொடக்கத்தில் இருந்து ஆசிர்வாதத்தை வழங்கிய சட்டத்தரணிகள் அமைப்பானது ரணில் விக்கிரமசிங்க போராட்டத்தை நசுக்கத் தொடங்கியபொழுது எதிர்பார்த்த அளவுக்கு எதிர்ப்பைக் காட்டவில்லை. அதைவிட முக்கியமான ஒரு விடயம், சட்டமறுப்பாகத் தோன்றிய ஒரு போராட்டத்தை சட்டத்தின் தராசில் வைத்து நிறுக்கும் அரசாங்கத்துக்கு அது தொடர்பில் எதிர்ப்பு எதையும் சட்டத்தரணிகள் சங்கம் பெரியளவில் காட்டவில்லை. சட்ட மறுப்பாக எழுச்சி பெற்ற ஒரு போராட்டத்தை சட்டக்கண் கொண்டு பார்த்தால், ஜனாதிபதியின் கதிரையில் அமர்ந்தது குற்றம். ஜனாதிபதியின் கழிப்பறைக்குள் நுழைந்தது குற்றம் ; நீச்சல் தடாகத்தில் குளித்தது குற்றம் ; அவருடைய சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்தது குற்றம் ; 'செல்பி' எடுத்தது குற்றம் ; என்று கூறி , இருந்தால் குற்றம் ; நின்றால் குற்றம்; உறங்கினால் குற்றம் என்று எல்லாரையும் தூக்கி உள்ளே போடலாம். அதுதான் இப்பொழுது நடக்கின்றது. இந்த விடயத்தில் , அது சட்ட மறுப்பாக தோன்றிய ஒரு போராட்டம். அதனை சட்டத்தின் தராசில் வைத்து நிறுப்பது சரியா என்ற அடிப்படை கோட்பாட்டுப் பிரச்சினையை சட்டத்தரணிகள் ஏன் எழுப்பவில்லை?

காந்தியின் அறவழிப் போராட்டத்தை சட்டத்தின் தராசில் வைத்து நிறுத்தால் காந்தி வாழ்நாள் முழுவதும் சிறையில்தான் இருந்திருக்க வேண்டும். அப்படித்தான் மார்ட்டின் லூதரையோ அல்லது போலந்தில் கொம்யூனிசத்துக்கு எதிராகப் போராடிய லெட் வலேசாவையோ அல்லது சில மாதங்களுக்கு முன்பு வேளாண் மசோதாவை எதிர்த்துப் போராடிய டெல்லி விவசாயிகளையோ எல்லாச் சட்டங்களின் கீழும் சிறையில் தள்ளமுடியும். எனவே, சட்ட மறுப்பை சட்டத் தராசில் வைத்து நிறுக்கலாமா? என்ற அடிப்படையான கோட்பாட்டு விவகாரத்தை முன்வைத்து அரசாங்கத்தோடு வாதாட ஏன் மூத்த வழக்கறிஞர்கள் கூட்டாக முன்வரவில்லை? அண்மையில் ஒரு பெண் ஊடகவியலாளருக்கு வழங்கிய செவ்வியில் ஜனாதிபதி கூறுகிறார். "எல்லாம் சட்டப்படிதான் நடக்கிறது" என்று.

ஐந்தாவது கேள்வி, இந்தப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்துவதற்கு முதலில் தமிழரசுக் கட்சி தனது உறுப்பினர்கள் தொண்டர்கள் மத்தியில் இது தொடர்பான தேவையான விழிப்பூட்டலை செய்திருக்கின்றதா? இது தொடர்பாக கட்சியின் உயர்மட்டத்தில் கூடி முடிவெடுக்கப்படவில்லை என்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் கூறுகிறார். அது உண்மையா? அதனால்தான் அவர் இந்தப் போராட்டத்தின் தொடக்க நிகழ்வில் பங்குபற்றவில்லை என்றும் கூறியிருக்கிறார். அதாவது கட்சிக்குள் தனது முதன்மையைப் பலப்படுத்த முற்படும் ஒரு அணி இந்தப்போராட்டத்தைக் கையிலெடுத்திருக்கிறதா?

எனவே, தொகுத்துப் பார்த்தால் ஒன்று தெரிகிறது. ஜெனிவா கூட்டத்தொடர் காலம் என்பது தமிழ்அரசியலில் ஒப்பீட்டளவில் அதிகரித்த ஜனநாயகப் போராட்டங்களுக்கான வாய்ப்புகளைக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டம் ஆகும். ஐ.நா.வின் கவனக்குவிப்புக்குள் இலங்கைத்தீவு வரும் ஒரு காலகட்டம் என்பதனால் அந்தக்காலப் பகுதியில் தமிழ்மக்கள் ஒப்பீட்டளவில் அதிகரித்த போராட்டங்களை முன்னெடுக்கக் கூடியதாக இருக்கும். கடந்த 13 ஆண்டு கால தாயக மற்றும் புலம்பெயர் யதார்த்தம் அதுதான்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது இப்பொழுது இலங்கைத்தீவின் மூன்று இனத்தவர்களுக்கும் எதிராகத் திரும்பியிருக்கிறது. அதாவது இலங்கைத்தீவின் மூன்று இனத்தவர்கள் மத்தியிலும் உள்ள அரசியல் செயற்பாட்டாளர்களை ஒரு புள்ளியில் சந்திக்க வைக்கும் விவகாரமாக அது காணப்படுகிறது. இவ்வாறு மூன்று இனத்தவர்களையும் ஒன்றாக்கக்கூடிய ஒரு போராட்டத்தை, மக்கள் மயப்படுத்தவில்லை என்று சொன்னால் உலக சமூகத்துக்கு எப்படிப்பட்ட ஒரு செய்தி போய்ச் சேரும் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கை விவகாரமும் காய்நகர்த்தும் இந்தியாவும்



○ அ.நிக்ஸன்

சர்வதேச நாணய நிதியம் தீர்மானித்த 2.9 பில்லியன் டொலர் நிதியை வழங்கவும், மேலதிகமான கடன்களைக் கொடுப்பதற்கும், இலங்கைக்கு ஏற்கனவே கடன் வழங்கிய நாடுகள் தமது கடன்களை மறுசீரமைப்புச் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. அதற்காகவே சர்வதேச நாணய நிதியம் அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளுடன் கலந்துரையாடுகின்றது. ஆனாலும், இலங்கைக்குக் கடன் வழங்குவதில் இழுபறிகள் உண்டு என்பதைச் சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் அவ்வப்போது வெளியிடும் கருத்துக்கள் எடுத்துக் காட்டுகின்றன. அதாவது இந்து சமுத்திரத்தை மையமாகக் கொண்ட இந்தோ- பசுபிக் பிராந்தியப் புவிசார் அரசியல் போட்டிகளே இதற்குப் பிரதான காரணம். இலங்கையின் கடன்களில் மூன்றில் இரண்டு பங்கு சீனா வழங்கிய கடன்களாகும்.

ஆனால் பொருளாதார நெருக்கடியின்போது சீனா கடன் வழங்கவில்லை. இந்தியா மாத்திரமே நான்கு பில்லியன் டொலரை இலங்கைக்குக் கொடுத்தது.

இதன் பின்னணியிலேயே சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கும் ஒப்பந்தம் ஒன்றை இலங்கையோடு செய்தது. சீனா - இந்தியா ஆகிய நாடுகளுடன் பேரம்பேசி மேலும் கடன்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றிருந்தன. ஆனால், அதற்கு இந்தியா அதிகாரபூர்வமாக மறுத்துள்ளது. அதுவும் இலங்கை விவகாரம் தொடர்பாக ஜெனிவாவில் - மனித உரிமைகள் பேரவையில் - விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையிலேயே இந்தியா இந்த மறுப்பை வெளியிட்டிருக்கின்றது. இந்தப்பின்புலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜப்பானுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். ஜப்பானிடம் இருந்து அதிகளவு கடன் பெறுதல் மற்றும் இலங்கைக்கான பிரதான இருதரப்பு கடன் வழங்குநர்களான சீன - இந்தியா ஆகிய நாடுகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்க அழைக்குமாறு ஜப்பான் அரசை வற்புறுத்துதல் என்பனவே ரணிலின் இந்தப் பயணத்தின் நோக்கம். கடன் மறுசீரமைப்புப் பேச்சுக்கள் ரணிலின் ஜப்பான் பயண நிகழ்ச்சி நிரலில் முதன்மையாக இருப்பதற்கு, இந்திய நிலைப்பாடு தான் பிரதான காரணம் என்பது தெரிகின்றது.

வழங்கப்பட்ட நான்கு பில்லியன் டொலரை விட, மேலதிகமாக இலங்கைக்கு புதிய நிதியுதவியை வழங்க இந்தியா திட்டமிடவில்லையென புதுடில்லி வட்டாரங்களை மேற்கோள்காட்டி றொய்ட்டர்ஸ் நிறுவனம் வியாழக்கிழமை செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால் இந்தியாவின் இந்த நிலைப்பாடு இலங்கைக்கு ஏலவே தெரிந்திருக்கின்றது.

இலங்கைக்குக் கடன் வழங்குவது குறித்த இந்திய நிலைப்பாடு அமெரிக்காவுக்கும் தெரிந்தது ஒன்று. ஏனெனில் இந்தோ - பசுபிக் விவகாரம், குறிப்பாக கடன் ஆதிக்கத்தினால் இலங்கையை சீனா வேறொரு தளத்துக்குக் கொண்டு செல்லலாம் என்ற அச்சமான சூழல் காரணமாகவே, முடிந்தவரை இலங்கைக்கான விட்டுக் கொடுப்புகளையும், அவசியமான தருணத்தில் இறுக்கமான நிலைப்பாட்டையும் அமெரிக்க - இந்திய அரசுகள் கையாளுகின்றன. தொடர்ந்து கடன் வழங்க முடியாதென்ற இந்தியாவின் இறுக்கமான அறிவிப்புக்கூட, இலங்கையைத் தங்கள் பக்கம் இறங்கி வரவைப்பதற்கான உத்தி தான். ஆனால் இலங்கையும் முடிந்தவரை இந்தியாவின் இறுக்கமான பிடிகளில் இருந்து விலகி அமெரிக்கா - சீனா மற்றும் ஜப்பான் என்ற முத்தரப்பு உதவிகளில் தங்கியிருக்கும் காய் நகர்த்தல்களை மிகப் பணிவாக முன்னெடுக்கின்றது.

இருந்தாலும் இலங்கை விவகாரத்தில் குறிப்பாக ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியா கையாளும் அணுகுமுறையோடுதான் அமெரிக்கா ஒத்துச் செல்கிறது. ஜப்பானும் அதற்கு விதிவிலக்கல்ல. 2002 சமாதானப் பேச்சு காலத்திலும் இந்த ஒழுங்குதான் இருந்தது. 2012 ஆம் ஆண்டில் இருந்து, ஜெனிவாத் தீர்மானங்களைக் கூட இந்தியாவின் ஆலோசனையோடுதான் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் முன்னெடுக்கின்றன. ஆனால் தற்போது ரஷ்ய - உக்ரைன் போரினால் ஐரோப்பிய நாடுகளின் கொல்லைப்புறத்தில் நெருக்கடிகள் அதிகரித்துள்ளன. இதனால் இம்முறை இலங்கை விவகாரத்தில் அமெரிக்க - இந்திய அரசுகள் முன்வைக்கும் தீர்மானத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளும் நிலைமை உண்டு. ஆகவே ரணில் விக்கிரமசிங்க நினைப்பது போன்று இந்தியாவைக் கடந்து அமெரிக்கா - சீனா மற்றும் ஜப்பான் என்ற முத்தரப்பு உதவிகளோடு இலங்கையின் பொருளாதார நலன்களை அடைவது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல. நிதியுதவிகைளத் தொடர்ந்து வழங்க முடியாதென இந்தியா அறிவித்தாலும், ஈழத்தமிழர் விவகாரத்தில் இலங்கையின் விருப்பங்களை நிறைவேற்றும் திட்டங்களையும் இந்தியா, ஜெனிவாவில் முன்னெடுக்கின்றது. 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமெனக் கோருவது சிங்கள ஆட்சியாளர்களுக்குப் பிடிக்காத ஒன்று என்பதை புதுடில்லி அறியாமலில்லை. அதேபோன்று 13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டுமென இந்தியா சம்பிரதாயபூர்வமாகவே கோருகின்றது என்பதைச் சிங்கள



## புவிசார் அரசியல் பின்னணியில் பலஸ்தீனத்துக்கான அங்கீகார மறுப்பும், தமிழர்களுக்குரிய சர்வதேச நீதி மறுப்பும்

ஆட்சியாளர்களும் புரிந்துவைத்திருக்கிறார்கள். 13 ஆவது திருத்தம் தமிழர்களுக்குப் பிடிக்காது என்று தெரிந்தாலும், அமெரிக்கா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சமாளிக்கும் நோக்கிலேயே அரசியல் தீர்வாக 13 ஐ இந்தியா, ஜெனிவாவில் முன்வைக்கின்றது என்பதும் கண்கூடு.

ஏனெனில் போர்க்குற்ற விசாரணைக்குச் சர்வதேச சிறப்பு விசாரணைக்குழு அல்லது சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திடம் இலங்கையைப் பாரப்படுத்தினால், அது இந்தியாவுக்கும் ஆபத்தாக இருக்கும் என்ற கருத்து புதுடில்லியிடம் 2009 இல் இருந்தே உண்டு. அதன் காரணமாகவே 13 ஐ அரசியல் தீர்வாகக் காண்பித்து அதற்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளையும் இணங்கவைத்தால், போர்க்குற்ற விசாரணை மற்றும் சில புலம்பெயர் அமைப்புகள் கோருகின்ற இன அழிப்புக்கான நீதி விசாரணை போன்றவற்றைத் தடுக்க முடியுமென இந்தியா நம்புகின்றது. இதனாலேயே 13 ஆவது திருத்தச் சட்டத்தை 2009 க்குப் பின்னரான சூழலில் , குறிப்பாக 2012 ஆம் ஆண்டில் இருந்து ஜெனிவாவில் இந்தியா வற்புறுத்தி வருகின்றது. அமெரிக்காவுக்கும் இந்த நிலைப்பாட்டை இந்தியா சொல்லி வைத்துள்ளது.

ஆனால் இங்கே சிங்கள ஆட்சியாளர்கள் '13' பற்றி எந்த விதமான அக்கறையும் இல்லாமல் இருப்பதுதான் இந்தியாவுக்குக் கவலை. இந்தப் பின்னணியில்தான் அதிகளவு நிதியுதவிகள் இலங்கைக்கு வழங்கப்பட்டன. பின்னர் அந்த உதவிகளை நிறுத்துவதாக அச்சுறுத்தும் அறிவிப்புக்களையும் இந்தியா கனகச்சதிமாகக் கையாண்டு வருகின்றது.

இந்த ஒரு நிலையிலேதான் ஜெனிவாவில் - மனித உரிமைகள் பேரவையில் - சமர்ப்பிக்கப்படவுள்ள இலங்கை தொடர்பான தீர்மானத்தில், இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புச் சட்டதிட்டங்களின் படி சர்வதேச தரத்திலான விசாரணைக்கு ஏற்றவாறு உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகளை வலுப்படுத்துமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன. இந்திய ஒத்துழைப்புடன் அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்டு வரும் தீர்மானத்தின் பிரதிகள், தற்போது இலங்கை விவகாரம் தொடர்பான கருக்குழு நாடுகளிடம் கையளிக்கப்பட்டுப் பரிசீலிக்கப்படுகின்றன. விசாரணையின்போது சர்வதேசத் தொழில்நுட்ப உதவிகளுக்குரிய ஒத்துழைப்புகளைப் பெற வேண்டுமெனவும் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கின்றது. ஆறு பக்கங்களில் குறித்த தீர்மானம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திடம் (International Criminal CourtICC) இலங்கையைப் பாரப்படுத்த வேண்டுமெனத் தமிழ்த்தேசியக் கட்சிகள் கோரியிருந்தன.

ஆனால், ஈழத்தமிழர்களுக்கு நடந்தது இன அழிப்பு என்றும், இன அழிப்புத் தொடர்பாக சர்வதேச சிறப்பு நீதிமன்றம் ஒன்றை அமைத்து விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் வடக்கு - கிழக்குத் தமிழ்த்தரப்புகளும் சில புலம்பெயர் அமைப்புகளும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தன. இந்த நிலையில் இலங்கை அரசாங்கத்துக்கும், அமெரிக்க - இந்திய அரசுகளுக்கும் விசுவாசமாகச் செயற்பட்டு வரும் தமிழ்த்தேசியக் கட்சிகள் கோரியுள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்ற விசாரணையைக்கூட மனித உரிமைகள் பேரவை பரிந்துரைக்கத் தவறியுள்ளது.

2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற அமர்வில் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் வெளியிட்ட ஆரம்ப அறிக்கையில் இலங்கையைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த வேண்டுமென உறுப்பு நாடுகளிடம் கேட்டிருந்தார். ஆகவே இந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறுகின்ற அமர்வில் உள்ளக விசாரணைப் பொறிமுறைக்குரிய பரிந்துரைகள் விடுக்கப்பட்டுள்ளதாக வெளிவரும் தகவல்கள் மூலம், இலங்கை தொடர்பான வல்லரசு நாடுகளின் புவிசார் அரசியல் போட்டித் தன்மைகள் வெளிப்படுகின்றன. ராஜபக்சவின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை மையமாகக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் அமெரிக்க - இந்திய அரசுகள் மூலமாக ஜெனிவாவில் காலஅவகாசத்தைக் கோரியிருந்ததாகவும், இதனாலேயே 2024 ஆம் ஆண்டுவரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அறிய முடிகின்றது.

ஆகவே, புவிசார் அரசியல் நோக்கில் எழுபது ஆண்டுகளுக்கும் மேலான வடக்கு- கிழக்குத் தமிழர்களின் அரசியல் விடுதலையும் , இனஅழிப்பு - போர்க்குற்றத்துக்கான சர்வதேச நீதியும் மறுதலிக்கப்பட்டுக் கொண்டே வருகின்றன. ஐக்கிய நாடுகள் சபையில் 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தித் தனி நாடு என்ற அங்கீகாரத்தைப் பலஸ்தீன மக்களுக்கு வழங்க மறுக்கும் நீதியும், ஈழத் தமிழர்களுக்கு மறுக்கப்படும் சர்வதேச நீதியும் ஒரே தராசில் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டிய தருணம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனித்தேசப் பயணியின் கறுப்புக்காலம்

O கோகுலராகவன்

மத்தியூ அலெக்சாண்டர் ஹென்ஸன் (Matthew Alexander Henson ) ஒரு அமெரிக்க கறுப்பினத்தவர். 1886 இல் அமெரிக்க மேரிலாண்ட் மாகாணத்தில் பிறந்தவர். ஹென்ஸனைப் பற்றி வாசிக்கக் கிடைத்தபோது ஆச்சரியம் அதிகரித்தது. தான் செய்த அளப்பரிய சாதனைக்காக பரிசு பெற அவர் முப்பது வருடங்களாக காத்திருந்த துரதிர்ஷ்டசாலி. கறுப்பராகப் பிறந்தது தான் அவர் செய்த பாவம்.

ஹென்ஸன் நாடுகாண் பயணங்களை விரும்பிய ஒருவர்.

ஆனால் , அதற்கு வசதியற்ற ஏழை விவசாயியின் மகன். ஆறாம் வகுப்பு மட்டுமே கல்வி கற்றார். இதை வைத்து என்ன பண்ண முடியும் ? விடுதியில் பாத்திரம் கழுவும் வேலையே கிடைத்தது. அதுவும் நின்றுபோக கப்பல் ஒன்றில் வேலை. கப்பல் தலைவன் கடும் போக்கானவன். அதையும் விட்டு விட்டுத் திரும்பி வந்து ஆடைத்தொழிற்சாலையில் களஞ்சியப் பொறுப்பாளராக வேலை பார்த்தார்.

அங்கு தொப்பி வாங்க வந்த அட்மிரல் றொபேட் எட்வின் பியரி எனும் கப்பல் தலைவர் ஹென்சனின் திடகாத்திரமான உடல் நிலையைக் கண்டு தன் கப்பலில் உதவிக்காக அவரை இணைத்துக் கொள்கிறார். பியரியுடன் ஹென்சன் பதினெட்டு ஆண்டுகள் இணைந்து செயற்பட்டார்.

இந்தக் கட்டம் ஹென்சன் எதிர்பார்த்த நாடுகாண் பயணத்தின் தொடக்கமாக அமைந்தது.




அடுத்ததாக, நிக்குரக்குவாவுக்கு நில அளவைக்காக பியரி கப்பலில் போய் வந்தார். இதன்போது ஹென்சனின் திறமையையும் ஆர்வத்தையும் பியரி மதிப்பிட்டுக்கொண்டார். இதன் பின்னர் பியரி வடதுருவத்தை அடையும் சாதனைப்பயணத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டார். பியரியே வடதுருவத்தை அடைந்த முதல் நாடுகாண் பயணி.

(இதில் சில மறுப்புக்களும் இருக்கின்றன. பயணத்தை முழுமை செய்யாமல் அவர் இடையிலேயே திரும்பினார் என்றும் சொல்கிறார்கள்.)

இந்தப் பயணத்தில் ஹென்சனையும் பியரி வருமாறு அழைத்தபோது, எவ்வித மறுப்பின்றி "சம்பளம் தந்தாலும் தராவிட்டாலும் பரவாயில்லை" என்று அவருடன் கூடவே பயணித்தார் ஹென்சன்.

இதுவே ஹென்சனை உலகப்புகழ் அடைய வைத்த நிகழ்வு.

◎ ◎ ◎ ◎

1908 மார்ச் முதலாம் திகதி வடதுருவத்தை நோக்கிய இவர்கள் பயணம் கிறீன்லாந்திலிருந்து தொடங்கியது. பியரி, ஹென்சன், மருத்துவர் மக்மில்லன் உட்பட ஆறு பேரும், நாற்பத்தியொரு எஸ்கிமோவரும், 246 நாய்களும் சறுக்கு வண்டிகளுமாக அந்தப் பயணம் தொடங்கியது.

அந்தக்காலத்தில், வடதுருவத்தை நோக்கிய பயணம் என்பது உயிரைப் பணயம் வைப்பது. அல்லது தற்கொலைக்கு சமமானது.

சிலநாள்களில் றோஸ் மார்வின் என்பவர் பனிக்குழியில் விழுந்துவிட்டார். அவர் திரும்பி மேலே வரவேயில்லை. அவரது 'கோட்' மட்டும் மிதந்தது. மேலும் இரண்டு பேர் காயப்பட்டுத் திரும்பிவிட்டனர். ஒருவர் நோய்வாய்ப்பட்டு முகாமுக்கு திரும்பினார். இப்படியாக ஒவ்வொருவராக பயணத்திலிருந்து விலக இறுதியில் எஞ்சியது பியரியும், ஹென்சனும், நான்கு எஸ்கிமோக்களும் மட்டுமே.

ஹென்சனை திருப்பி அனுப்பினால் பியரி பயணத்தைத் தொடரவே முடியாது. ஏனெனில் ஹென்சனின் துணிவு வேறு யாருக்கும் இல்லை. 1909 ஏப்ரல் ஆறாம் திகதி தமது அணி வடதுருவத்தின் எல்லையை அடைந்ததாகப் பியரி பதிவு செய்கிறார்.

அன்றைய தினமே அமெரிக்கக் கொடியை வடதுருவத்தில் பியரியும், ஹென்சனும் இணைந்து ஏற்றுகிறார்கள். அங்கே பியரி கண்ணாடிக் குடுவையில் ஒரு சாதனைக் கடிதத்தையும் எழுதி வைக்கிறார். அதில் ஹென்சனின் பெயரும் இணைக்கப்பட்டு இருந்தது.

அமெரிக்கா திரும்பிய பின் பியரி தங்க விருது கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். ஆனால் ஹென்சன் யாராலும் கவனிக்கப்படவேயில்லை. காரணம், அவர் கறுப்பினத்தவர். ஆபிரகாம் லிங்கன் நிறப் பாகுபாட்டை நிறுத்தியபோதும் அது தொடர்ந்து கொண்டேயிருந்தது. அபியரிக்கு வழங்கப்பட்ட அதேயளவு கௌரவம் ஹென்சனுக்கும் வழங்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் வழங்கப்படவில்லை. பியரி அமெரிக்காவின் நாயகனாக மாற, ஹென்சன் 'சைக்கிள் பார்க்' காவல்காரனாகவும், எழுதுவினைஞராகவும் சாதாரணமாகவே வாழமுடிந்தது. பியரி தன் அனுபவப் பகிர்வை விற்றே பெரும் பணக்காரனாகி விட்டார்.

ஆனால் ஹென்சனின் நண்பர்களின் விடாமுயற்சியால் கிட்டத்தட்ட முப்பது வருடங்களின் பின் 1937 இல் அவரது பெயர் தேசிய புவியியல் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இதன் பின்னரே ஹென்சனின் புகழ் அமெரிக்காவில் பரவத்தொடங்கியது.

அவரது வறுமையும் விலகியது. 1954 இல் வெள்ளை மாளிகைக்கு விருந்தினராக அழைக்கப்பட்டார். அதைவிட கிட்டத்தட்ட இருபதுக்கும் மேற்பட்ட விருதுகள் அவருக்குக் கிடைத்தன, இதற்காக ஹென்சன் 30,40 வருடங்கள் வறுமையிலும், வெறுமையிலும் காத்திருக்க வேண்டியிருந்தது என்பது வெள்ளைத்தோலின் துவேசமே.

1955 இல் ஹென்சன் காலமாகிவிட 1961 இல் மேரிலாண்டில் அவரது வீடு நினைவிடமாக மாற்றப்பட்டது. அங்கே பித்தளையில் "வடதுருவ இணைப் பயணி" என பதிக்கப்பட்ட நினைவுச்சின்னம் பொருத்தப்பட்டிருக்கிறது. ஹென்சன் வரலாற்றின் துணிவு. அமெரிக்க கறுப்பினத்தவர்களின் நாயகன்.

(இன்னும் கதைப்பம்)

O இராகவன்




57

அப்ப வீட்டில நான்தான் சின்னப்பெடியன். கறண்ட் அடிக்கிறதெண்டால் எப்படியிருக்குமெண்ட அனுபவமில்லாத வயது. அதுக்குள்ள நான் ஒரு நிமிசமும் சும்மாயிருக்கமாட்டன். அதைத் தொட்டு இதை இழுத்து ஏதாவது தறுதுறும்பு வேலை செய்து கொண்டேயிருப்பன் எண்டது இளையண்ணாவுக்கு நல்லாத் தெரியும். அதுதான் கறண்ட் லைனை என்ரை கைக்கெட்டாத தூரத்தில செற் பண்ணியிருக்கிறான். இதுக்குள்ள அவன் எனக்குக் கறண்ட் அடிக்கிறதெண்டால் எப்படியிருக்கும்? எண்டு காட்டிறதுக்கு இன்னொரு வேலையும் செய்தான்.

வீட்டில முக்காப்பனை உயரத்துக்கு ஒரு கொக்கத்தடியை அம்மா கட்டி வைச்சிருந்தா. அதோட முழங்கையளவு நீளத்தில ஒரு சின்ன அலவாங்கும் வீட்டில இருந்தது. அந்த அலவாங்கை எடுத்து வீட்டுக்கு வெளியால தாயறை யன்னலுக்கு நேர்வளமா நிலத்தில தாட்டுப் போட்டுக் கறண்ட் லைனில ஒரு கம்பியை ஜொயின்ற் பண்ணிக் கொண்டந்து அலவாங்கில சுத்திவிட்டான். எனக்கது என்னத்துக்கெண்டு விளங்கேல்லை. "என்னடா அண்ணா உது?" எண்டு அவனிட்டக் கேட்டன். "உதுதான் ஏர்த்" எண்டான். "உது என்னத்து?" எண்டு கேட்டன். "கொஞ்சம் பொறு என்னத்துக்கெண்டு காட்டிறன்" எண்டு சொல்லிப்போட்டுக் கொக்கத்தடியிலயிருந்து பக்குவமாய்ச் சத்தகத்தைக் கழட்டிப் போட்டு அதைத் தோளில தூக்கி வைச்சு கொண்டு டாக்குத்தற்றை காணிக்குள்ள போனான். நானும் பின்னால போனன்.

அங்க முதலே செற்பண்ணி வைச்சிருந்த இரண்டு லைன் வயறையும் எடுத்துக் கொக்கத்தடியின்ர நுனியில வெள்ளிக்கம்பியால செய்து ஜொயின்ற் பண்ணியிருந்த கொழுக்கியள ஒண்டுமேல ஒண்டு கொஞ்சங் கீழை வாற மாதிரிச் செருகிப்போட்டு.கொக்கத்தடியைப் பக்குவமா மேலுக்கு உயர்த்தி மெயின் லைன் கம்பியளில அதே செற்றப்பில நுட்பமா அந்தக் கொழுக்கி இரண்டையும் கொழுவினான். பிறகு "டேய்! ஓடிப்போய் வெளிவிறாந்தையில தொங்கிற 'பல்ப்' எரியுதோ எண்டு பாத்துக்கொண்டு வா" எண்டான். நான் உடனை குதிரைப் பாய்ச்சல்ல வீட்டை வந்து பாத்தன். விறாந்தையில தொங்கின பல்ப் எரிஞ்சு கொண்டிருந்திச்சுது. உடன அதேவீச்சில ஓடிப்போய் "எரியுது எரியுது" எண்டு அவனிட்டச் சொன்னன. போர்க்களத்தில வெற்றிவாகை சூடின படைத்தளபதியின்ர பெருமிதத்தோட கொக்கத்தடியைத் தோளில வைச்சுக் கொண்டு அவன் வீட்டை வந்தான். பிறகு போய் எரியிற 'பல்ப்' பைப் பாத்தான். கையோட தகரவாளியில தண்ணியெடுத்துக்கொண்டு வீட்டுக்குப் பிறகால போனான். நானும் புதினம் பாக்க அவனுக்குப் பிறகால போனன். அவன் அந்த வாளித் தண்ணியை ஏர்த் எண்டு சொன்ன அலவாங்குக்குத் தள்ளி நிண்டு ஊத்திக்கொண்டு "டேய் ஒருக்காய் போய் இப்ப பல்ப் என்னமாதிரி எரியுதெண்டு ஒருக்கால் பார்" எண்டான். நானும் போய்ப் பாத்தான்.

முதல்ல எரிஞ்சதைவிட இப்ப நல்ல பவறாய் எரிஞ்சமாதிரிக் கிடந்திச்சு. "இப்ப நல்ல பவறாயிருக்கு" எண்டு அதில நிண்டே கத்தினன். "ஓகே! ஓகே! இப்ப விளங்கிச்சுதே ஏர்த் என்னத்துக்கெண்டு?" எண்டு சொல்லிக்கொண்டே அவன் வந்தான். "அப்ப லைற் பவர் குறைஞ்சால் எர்த்துக்குத் தண்ணியூத்த வேணுமாக்கும்" எண்டு நினைச்சன். பிறகு அவன் சுவிச்சை ஓஃவ் பண்ணிப்போட்டு "எல்லாஞ்சரி இனி இரவுக்குப் போடுவம்" எண்டு சொல்லிப்போட்டுத் தன்ரை சோலியப் பாக்கப் போட்டான். பின்னேரம் போல நான் ஊர்ப்புதினத்தின்ர தொடக்கத்தில உங்களுக்கு அறிமுகப்படுத்தின சிவனருள் என்கிற சிவா வீட்டை என்னோட விளையாடுறதுக்கு வந்தான். அப்ப வீட்டில நான் தான் தனிய நிண்டனான். அந்த நேரத்தில சிவாவுக்கு என்ர வீரதீரத்தைக் காட்டுவம் எண்டு நினைச்சு அவனைக் கூட்டிக் கொண்டு போய் விறாந்தையில நிப்பாட்டிச் சுவிச்சைப் போட்டன். லைற் எரிஞ்சுது.

"நீ உதிலை நில்! நான் உனக்கொரு மஜிக் காட்டிறன்" எண்டு சொல்லிப் போட்டு வாளியில தண்ணியை எடுத்துக் கொண்டு போய் வீட்டுக்குப் பிறகாலயிருந்த ஏர்த்துக்கு ஊத்தினன். ஆரோ வாளியைப் பிடிச்சு இழுத்த மாதிரியிருந்தது. அப்பிடியே போட்டுட்டு ஓடியந்திட்டன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரழியவில்லை கிளிநொச்சி

## அதிகாரிகள் தரும் விளக்கம்

கடந்த வாரம் (04.09.2022) சஞ்சீவி வார இதழில்; "அதிகரிக்கும் சிறுமிகளின் கர்ப்பவீதம் சிதைந்து செல்கிறதா கிளிநொச்சியின் சமூக கட்டமைப்பு? அதிர்ச்சி ரிப்போர்ட்" எனும் தலைப்பில் பதின்ம வயது சிறுமிகள் கர்ப்பம் தரிப்பது அதிகரித்துச்செல்கின்றது என்பதாக வெளிவந்த கட்டுரை தொடர்பாக சுகாதாரத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் அனுப்பி வைத்த சில விளக்கங்கள் பொதுநலன் கருதி 'சஞ்சீவியில்' பிரசுரிக்கப்படுகின்றது.

**1. சுகாதாரத்துறையை இனவழிப்புக்கு பயன்படுத்தல்**

2014 இல் கிளிநொச்சியில் இராணுவத்தின் உதவியுடன் ஒரு தூரக்கிராமத்தில் பெண்களுக்கு வலுக்கட்டாயமாக கருத்தடை உட்செலுத்திகள் (Jadel) வைக்கப்பட்டன. 'பெண்கள் கருத்தடை உட்செலுத்திக்ளை பெற்றுக் கொள்ளச் சம்மதிக்காவிட்டால் திரிபோஷா தரமாட்டோம். அதன்பின் மருத்துவமனைக்கு ஒரு போதும் சிகிச்சை எதற்கும் அவர்கள் வரமுடியாது. பிள்ளைகளுக்கு எதிர்காலத்தில் தடுப்பூசிகள் வழங்க முடியாது' எனப்பலவாறாக அச்சுறுத்தி இந்த அப்பட்டமான இனவழிப்பு கொழும்பின் வழிகாட்டுதலில் செய்யப்பட்டது. அது மட்டுமல்லாது கட்டாயப்படுத்தல் மூலம் தவறுதலாக கர்ப்பவதி ஒருவருக்கு கருத்தடை உட்செலுத்தி வைக்கப்பட்டதால் அவர் மரணித்த துர்நிகழ்வும் இடம்பெற்றது.
அதிர்ஷ்டவசமாக தமிழ்த் தேசிய ஊடகங்கள் இந்த இனவழிப்பு சதியை வெளிப்படுத்தின. இந்தச் சம்பவத்துக்கு பொறுப்பான அதிகாரிகளால், வடக்கின் உயரதிகாரிகளுக்கு "கிளிநொச்சியில் இளவயதுக் கர்ப்பமும் திருமணத்திற்கப்பாலான முறைகேடான கர்ப்பங்களும் அதிகம் என்பதால் தான் நாங்கள் கட்டாயக் கருத்தடையைச் செய்தோம்" என முதலில் விளக்கம் கூறப்பட்டது. ஆனால் இன்று முன்னர் இளவயதுக் கர்ப்பங்களின் எண்ணிக்கை குறைவு எனக் கட்டுரை கூறுகின்றது.
பின்னர் நிலைமை தீவிரமடைந்தபோது விசாரணைக்குழுக்களின் முன்பாக பாதிக்கப்பட்ட பெண்கள் பிரசன்னமாக முடியாதவாறு இராணுவம் மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு அனைத்தும் மூடிமறைக்கப்பட்டன. ஆனாலும் ஊடகங்களின் புத்திசாலித்தனத்தால் இந்த நேரடியான இனவழிப்பு முயற்சிக்கு அத்துடன் முடிவு காணப்பட்டது. அதன் பின்னர் குறிப்பாக 2018 முதல் இன்றுவரை இவ்வாறான இனவழிப்பு நிகழ்வு ஏதும் கிளிநொச்சியில் இதுவரை நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்த பாரதூரமான நிகழ்வு கட்டுரையாளரின் கவனத்தை ஏன் பெறவில்லை ?

**2. அதீத குடும்பக் கட்டுப்பாட்டு வேலைத்திட்டம்**

வடக்கின் எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு 2018 க்கு முன்னர் கிளிநொச்சியில் குடும்பக் கட்டுப்பாட்டு வேலைத் திட்டங்கள் அதீத சிரத்தையுடன் செய்யப்பட்டதை சுகாதாரத் துறையினர் அறிவர். கிளிநொச்சியில் குடும்பக் கட்டுப்பாட்டு வீதம், உட்செலுத்திகள் மூலம் குடும்பக் கட்டுப்பாட்டை பெற்றவர்கள் வீதம், நிரந்தரக் குடும்பக் கட்டுப்பாட்டு சத்திர சிகிச்சை செய்பவர்கள் வீதங்கள் மிக அதிகம். இவற்றை கட்டாயக் கருத்தடை முகாம்களை நடத்தியமையுடன் இணைத்துப் பார்க்கவேண்டும்.

**3. புறக்கணிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்கள்**

வடக்கில் 5 மாவட்டங்களிலும் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான பாதுகாப்பு இல்லம் கிளிநொச்சியிலேயே உள்ளது. அங்கேயே பாதுகாப்பற்ற பெண்கள், பாதுகாப்புத் தேவையான பதின்ம வயதுக் கர்ப்பவதிகள், ஏனைய கர்ப்பவதிகள் பாதுகாக்கப்படுகின்றனர். 2018 க்கு முன்னர் இவர்களது தரவுகள் எங்கும் உள்ளடக்கப்படுவதில்லை.
முன்னர் இவர்களுக்கு உரிய பராமரிப்பு வழங்கப்படுவதில்லை. 2018 இலிருந்து இவர்களுக்கும் தரமான தாய் - சேய் நலப் பராமரிப்பு வழங்க ஆவன செய்யப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதற்காக இவர்களும் கர்ப்பவதிகளுக்கான பதிவுகளினுள் உள்வாங்கப்பட்டனர். அவ்வெண்ணிக்கையும் கிளிநொச்சியின் எண்ணிக்கைக்குள் உள்ளடங்குகின்றது. அவ்வாறு 2018 இல் இருந்து உள்ளடக்கப்படுவதால், கர்ப்பவதிகளின் எண்ணிக்கை. குறிப்பாக பதின்ம வயதுக்குட்பட்ட கர்ப்பிணிகளின் எண்ணிக்கை கிளிநொச்சியில் உயர்ந்துள்ளதாக மேலோட்டமாகத் தோன்றக்கூடும்.




மேற்கூறிய மூன்று பின்னணிகளிலேயே மேற்படி கட்டுரையை அணுக வேண்டும். இளவயதுக் கர்ப்பவதிகள் என்ற பதத்திலும் தெளிவாக பதின்ம வயதுக் கர்ப்பங்கள் என்பதே சரியான பதமாகும். பதின்ம வயதுக் கர்ப்பவதிகள் என்போர் 16 வயதிலும் குறைந்தவர்கள், 17-18 வயதானவர்கள் 18-19 வயதானவர்கள் எனப் பிரிக்கப்படுவர். இதில் 18 வயதுக்குக் குறைந்தவர்கள் சிறுமிகள். ஆனால் அனைவரும் குழந்தை பெற உடற்தகுதி இல்லாதவர்கள் என மருத்துவம் கூறுகின்றது. கிளிநொச்சியில் அதிகரித்துள்ளதாகக் கூறப்படும் 'இளவயதுக் கர்ப்பவதிகள்' 18 வயதுக்கு மேலான - திருமணம் செய்வதற்கான சட்ட உரித்துடையவர்கள்- கர்ப்பம் தரித்தலையே. முன்னரிலும்விட தற்போது பதிவு செய்தல் அதிக கவனமாகச் செய்யப்படுவதாலேயே, பதின்ம வயதுக் கர்ப்பவதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

**மாதாந்த பொதுச்சுகாதார கலந்துரையாடல்கள்....**

வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும், யாழ்ப்பாணம் உட்பட, பொதுச் சுகாதார கலந்துரையாடல்கள் மாதாந்தம் நடைபெறுகின்றன. இந்நடைமுறையே பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையாகும். சஞ்சீவியில் வெளியாகியுள்ள குறிப்பிட்ட கட்டுரையில் உள்ளதுபோல் மூன்று மாதத்துக்கு ஒரு தடவை அல்ல. 2018க்கு முன்னர் மட்டுமல்லாது, 2018, 2019 களிலும் கிளிநொச்சி மரவட்டத்தில் பொதுச் சுகாதார கலந்துரையாடல்கள் மாதா மாதம் தவறாது நடைபெற்று வந்தன. அவ்வாறான கலந்துரையாடல்கள் 2018 இன் பின்னர் குடும்ப நல உத்தியோகத்தர்களை கடிந்து கொள்வதற்கான சந்திப்பு என்ற நிலையில் இருந்து, தரவுகளின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தல், விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள், பிரச்சினைகளை அடையாளங் காணல், தீர்வுகளைக் கண்டறிதலும் அவற்றை நடைமுறைப்படுத்தலும், கூட்டுச் செயற்பாடு என அறிவார்ந்த நிலைக்கு தரமுயர்த்தப்பட்டன. இவ்வாறான ஒரு மாதாந்தக் கலந்துரையாடலின்போதுதான் ஒரு 15 வயதுச்சிறுமியின் திருமணமும் கர்ப்பமும் சாதாரணமாகக் கடந்து செல்லப்பட்டமையும் வெளிவந்தது. அதுதொடர்பான ஆய்வின்போது கூறப்பட்ட ஒரு விடயம் பாரதூரமானது. குறிப்பிட்ட சிறுமியின் பிரதேசத்தில் அவ்வாறு நடைபெறுவது சர்வசாதாரணம் என்றும் அதனைப் பெரிய விடயமாக கிளிநொச்சியில் எவரும் கருதுவதில்லை எனவும் உத்தியோகத்தர்களால் கூறப்பட்டது. அதன்பின்னர் அப்போது கடமையேற்றிருந்த புதிய நிர்வாகம் மாவட்டச் செயலருடன் இணைந்து உரிய சட்ட நடவடிக்கைகளை எடுத்ததுடன் அந்தப்பிரதேசத்தில் தொடர்ச்சியான விழிப்புணர்வு நிகழ்வுகளும் சுகாதாரத் துறையினரால் நடத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**கிளினிக்குகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டதா?**

இதேபோல், சுகாதார மருத்துவ அதிகாரிகள், குடும்ப நல உத்தியோகத்தர்கள் இன்றி நடைபெற்று வந்த கிளினிக்குகள் உட்பட அனைத்துக் கிளினிக்குகளும் 2018 இல் இருந்து ஒழுங்காக்கப்பட்டதுடன் எப்போதும் மருத்துவர் ஒருவரது சேவையுடனேயே அவை நடைபெறும் வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டன.
இதே போல் கிளிநொச்சி நகருக்கு அண்மையான ஒரு பிரதேசத்தில் கட்டப்பட்டு அனைவராலும் மறக்கப்பட்டு கைவிடப்பட்டிருந்த ஒரு கிராமிய சுகாதார நிலையமும் 2018 இன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வும் குறிப்பிடத்தக்கது.
ஒரு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒரு கிளினிக்கின் எண்ணிக்கையை குறைப்பது இலகுவான விடயம் அல்ல. விரிவான ஆய்வுகளின் அடிப்படையிலே அதற்கான முடிவு எடுக்கப்படமுடியும் என்பதுடன் அதற்கான முடிவு அரிதாகவே உயரதிகாரிகளின் அனுமதியுடன் மட்டுமே எடுக்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தில் கிளினிக்குகள் மூடப்பட்டன என்பதும் அங்கு தனியார் கிளினிக்குகள் இருப்பதாலும் பணக்காரர்கள் இருப்பதாலும் பெரும்பாலான கர்ப்பவதிகள் தனியார் கிளினிக்குகளுக்கு மட்டுமே செல்வார்கள் என்பதும் தவறான கருத்துகளாகும். தனியார் கிளினிக்குக்கு போகும் பணம் படைத்த கர்ப்பவதிகள் தாய்மார், பாலகர்கள் என்றாலும்கூட சுகாதார மருத்துவ அதி காரிகளின் கிளினிக்குகளுக்கு கிரமமாக வரவேண்டியது அனைத்து மாவட்டங்களிலும் கட்டாயமாகும்.
எந்த மருத்துவமனை என்றாலும் ஒரு தாய் பிரசவத்துக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்படும்போது, கிளினிக் அட்டையைக் கொண்டுசெல்ல வேண்டியது கட்டாயமாகும். ஐந்து மாவட்டங்களையும் ஒப்பிடும்போது, கர்ப்பவதிகள் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் தாய் சேய் நலக் கிளினிக்குக்கு வருவது யாழ்ப்பாணத்திலேயே அதிகமாகவுள்ளது.

**குடும்ப நல உத்தியோகத்தர்களின் வெற்றிடமும் பதில் நியமனங்களும்**

சஞ்சீவியில் வெளியான கட்டுரையில் 'மிஸ்ஸிகள்' எனக் கூறுவது குடும்ப நல உத்தியோகத்தர்களையே. வடமாகாணத்தில், யாழ்ப்பா ணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் எப்போதும் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் அதிகமாகவே காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலும் வடக்கின் மிகப்பெரிய மாவட்டமான முல்லைத்தீவிலும் வெற்றிடமாக உள்ள குடும்பநல உத்தியோகத்தர்களின் பிரிவுகளுக்கு இன்னொரு பிரிவின் குடும்ப நல உத்தியோகத்தர்தான் பதில் கடமையாற்றி வருகின்றார்கள். 2014 இலிருந்து அவர்களுக்கான பதிற்கடமை கொடுப்பனவும் , மருத்துவர் ப. சத்தியலிங்கம் வடக்கின் சுகாதார அமைச்சராக இருந்தபோது. அப்போதைய யாழ்ப்பாணத்தின் தாய் - சேய் நல மருத்துவர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக வழங்கப்பட்டு வருகின்றது. ஆயினும் கிளிநொச்சி மாவட்டத்தில் அவ்வாறு பதில் கடமையாற்றும் ஒழுங்குகள் பெரும்பாலான வெற்றிடங்களுக்கு மேற்கொள்ளப்படாத அதேவேளை பதிற்கடமையாற்றிய ஒரு சில குடும்பநல உத்தியோகத்தர்களுக்குக் கூட பதிற்கடமைக் கொடுப்பனவும் வழங்கப்படும் வழக்கம் இருக்கவில்லை. அதற்கான சுற்றிக்கை வந்தும் 'சிலரால்' மறைக்கப்பட்டிருந்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் குடும்ப நல உத்தியோகத்தர்கள் இல்லாத பிரிவுகளுக்கு, குறிப்பாக வறுமைப்பட்ட மக்கள் வாழுகின்ற தூரப்பிரதேசங்களிலுள்ள பிரிவுகளுக்கு குடும்ப நல உத்தியோகத்தர்களின் கடமைகளைச் செய்வதற்காக முன்னர் பயிற்சி பெறாத சிற்றூழியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களை மேற்பார்வை செய்வதற்குக் கூட குடும்ப நல உத்தியோகத்தர்கள் எவரும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை. ஆயினும் இவ்வாறு நியமிக்கப்பட்டிருந்த சிற்றூழியர்கள் தமது ஆற்றலுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வந்தது உண்மையே. குறிப்பாக போர்க்காலத்தில் இவர்களின் பணி போற்றுதற்குரியது. ஆனால் இவர்களால் ஒரு குடும்ப நல உத்தியோகத்தருக்குரிய தரத்துடன் தாய் - சேய் நலச் சேவையை வழங்க முடியவில்லை. குறிப்பாக கர்ப்பவதிகளுக்கான குருதி அமுக்கத்தை அளக்க முடியாமை உட்பட பல இடைவெளிகள் இருந்தன. 2018 இல் முதன்முறையாக இந்தச் சிற்றூழியர்களுக்கும் மேலதிகமாக ஒரு குடும்ப நல உத்தியோகத்தர் பதிற் கடமைக்காக நியமிக்கப்பட்டனர். அவ்வாறு நியமிக்கப்பட்ட வர்களுக்கும் ஏற்கனவே பதிற்கடமையாற்றி மேலதிக கொடுப்பனவைப் பெறாதவர்களுக்கும் வடக்கின் ஏனைய மாவட்டங்களில் 2014 முதல் வழங்கப்பட்டு வந்த பதிற் கடமைக் கொடுப்பனவை வழங்கவும் முதல் முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.
அதேவேளை 2018 க்கு முன்னர், கிளிநொச்சியில் நிலவிய குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் தொடர்பாக கொழும்பிலுள்ள மேல் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வருவது திட்டமிட்டு தவிர்க்கப்பட்டு வந்திருந்தமை அவதானிக்கப்பட்டதுடன், 2018 இன் பின்னர் உண்மையான வெற்றிடங்கள் காட்டப்பட்டதால் புதிதாக பல குடும்பநல உத்தியோகத்தர்கள் படிப்படியாக கிளி நொச்சிக்கு நியமிக்கப்பட்டு வருகின்றனர்.
புதிதாக குடும்ப நல உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்ட பின்னர் மட்டுமே பதிற் கடமையாற்றி வந்த சிற்றூழியர்கள் அவர்களுக்கு உரிய பதவிகளுக்கு விடுவிக்கப்பட்டனர். அவர்களுள்ளும் சிலர் மீள மருத்துவமனைகளுக்கு போவதை கௌரவக் குறைவாகப் பார்த்து வருத்தமடைந்தபோது, அத்தனை காலமும் அவர்கள் ஆற்றிய சேவைகளைக் கருத்திற் கொண்டு அவர்கள் சுகாதார மருத்துவ அதிகாரிகள் அலுவலகத்திலேயே தொடர்ந்து இணைக்கப்பட்டனர்.

(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

18 செப்ரெம்பர் 2022

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# கோத்தா நாட்டுக்குள்...



சனை செய்யவேண்டிய தருணம் இது. அதைவிடுத்து சர்வதேச நாணய நிதியத்திடமோ அல்லது உலகவங்கியிடமோ போய் , கடனை வாங்குவதென்பது எங்களை மேலும் சுமையாளிகளாகத்தான் மாற்றப்போகின்றது.

அதேபோன்று அவர்களுடைய நிபந்தனைகள் அனைத்தும் எங்களுக்கு சாதகமாகவும் இருக்காது. பலர் தமது பணியை இழக்கவேண்டி வரலாம். பல நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தவேண்டி வரலாம். இவற்றால் குறுங்காலத்தில் எங்களால் தாக்குபிடிக்கமுடியாத ஒரு சூழல் நிலை ஏற்படும். இலங்கையைப் பொறுத்தவரை அடுத்தது 30 ஆண்டுகளுக்கான ஒரு திட்டமும், நீண்டகால கொள்கையுடைய தலைமைத்துவமும், சுயநல மற்ற - அரசியலற்ற- பொருளாதாரப் பார்வை கொண்டு நாட்டு மக்களின் நலன் கருதிய, இன மதபேதங்களை வைத்து பிரிவினைவாத அரசியலைச் செய்யாத , ஒரு பொறிமுறை மாற்றமும் அவசியம். அதை விடுத்து 'இன்று எங்களுக்கு பெற்றோல், டீசலும் கிடைக்கின்றது. அதனால் போராட்டத்தைக் கைவிடலாம்' என்பன போன்ற தற்காலிகக் கனவுகளை நம்புவதென்பது நாட்டில் மாற்றத்தைக் கொண்டு வராது. மீண்டும் ஒருமுறை இதே சிக்கலுக்குள் மாட்டிக்கொள்வோம். மீண்டும் கடன்களுக்குள் விழுந்து நிலங்களை விற்று வீதியில் நிற்போம். எனவே குறுகியகால நலன்களைக் கண்டு அத்தோடு கொள்கையையும், போராட்டத்தையும் நிறுத்தாமல் தொலைநோக்குப் பார்வையோடு செயற்படுவதே நாட்டுக்கு நன்மை பயக்கும்.

**கே:** *அரகலய போராட்டத்தில் அமைதியாகப் போரடிய ஆயிரக்கணக்கானோர் தொடர்ச்சியாக கைது செய்யப்படுகின்றார்கள். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய இணைப்பாளர் உள்ளிட்ட மூவர் மீதும் பயங்கரவாத தடைச்சட்டம் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. இவை தொடர்பில் , என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறீர்கள்?*

**ப:** ஜெனிவாவுக்கு எங்களுடைய கைது தொடர்பான சகல விடயங்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன. எங்கள் சார்பான கருத்துக்கள் அங்கு தெரிவிக்கப்படும். இங்கிருக்கின்ற சர்வதேச நிறுவனங்கள், வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்திக்கின்றபோது எங்களுடைய கைதுகள், அடக்குமுறை தொடர்பாக அனைத்து விடயங்களையும் முன்வைத்துள்ளோம். என்னுடைய தனிப்பட்ட கைது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளோம். ஜெனிவா கூட்டத்தொடரில் இது தொடர்பில் நிச்சயம் பேசப்படும். பேசப்பட்டும் இருக்கின்றது.

**கே:** *கைது செய்யப்படுபவர்கள் கடுமையாகச் சித்திரவதை செய்யப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. நீங்களும் கைது செய்யப்பட்டிருக்கின்றீர்கள். உங்கள் மீதும் சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டதா?*

**ப:** ஆம். அவர்கள் எம்மைக் கைதுசெய்த முறையே தவறு. எம்மைக் கைது செய்கின்ற போதே தாக்குதல்களை மேற்கொண்டார்கள். எனக்கும் சிறிய காயம் ஏற்பட்டது. எங்களை எங்கு கொண்டு போகிறார்கள் என்று தெரியாதவகையில். ஒரு இரகசிய இடத்துக்குக் கொண்டு சென்றார்கள். அங்கிருந்து வெளியுலகத்தோடு தொடர்புகளை மேற்கொள்ள அனுமதி இருக்கவில்லை. பிறகு ஒருவழியில் தொடர்பை ஏற்படுத்தியிருந்தோம். அதன்பின்னர்தான் எங்களுடைய சட்டத்தரணிகள் அங்கு வரக்கூடியதாக இருந்தது. இருவர் இருக்கக்கூடிய சிறை அறையிலே எட்டுப்பேரை அடைத்தார்கள். நாள் முழுவதும் நித்திரை கொள்ளமுடியாத சூழ்நிலையை ஏற்படுத்தினர். மனரீதியாக எங்களை பின்நோக்கித் தள்ளுவதும், போராட்டத்தைக் கைவிடச் செய்யும் செயற்பாடாகவுமே இதனை நான் நோக்குகின்றேன். உளரீதியாக எங்களை நலிவடையச் செய்து, மீண்டும் போராடும் மனநிலையே வரக்கூடாது என்பதே அவர்கள் எம்மைக் கைது செய்ததன் நோக்கம். அந்த அனுபவம் மிகக் கொடுமையானது. ஆனால் அந்தக் கொடுமைகளுக்கு பயந்து நாங்கள் இந்தப் போராட்டத்தினை நிறுத்தப்போவதில்லை. ஏனெனில் எமது போராட்டம் நீண்டகால நலன்கருதியது. அடக்குமுறைக்கு எதிரானது. அந்த வகையிலே தொடர்ந்தும் போராட்டத்தின் போது முன்னணியில் எப்போதும் நிற்போம். உண்மையிலே கைதுகள், சித்திரவதைகள் தான்.

**கே:** *நீங்கள் பிணையில் விடுவிக்கப்பட்டாலும், உங்களுடைய நடமாட்டங்கள் கண்காணிக்கப்படக்கூடுமல்லவா?*

**ப:** எங்களுடைய நடவடிக்கைகள் நிச்சயமாகக் கண்காணிக்கப்படுகின்றன. போராட்டத்தின் போது, பிரதானமாகச் செயற்பட்டவர்களுக்கு பின்னால் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அங்குமிங்குமாகத் திரிவதை நாங்கள் அவதானித்து இருக்கின்றோம். பிரதானமாகச் செயற்பட்ட அனைவருக்கும் இந்த அனுபவம் இருக்கின்றது. குறிப்பாக நான் கைது செய்யப்பட்ட பின்னர் , நள்ளிரவு 12.30 மணிக்கு திருகோணமலையில் இருக்கும் என்னுடைய அம்மாவின் வீட்டுக்குச் சென்று கதவினை தட்டி, நள்ளிரவிலே அவரிடம் கடும் விசாரணை ஒன்று நடத்தப்பட்டது. அவ்வாறான அச்சுறுத்தல்கள் அனைவருக்கும் ஏற்படுகின்றன. அவை இப்போதுவரை, தொடரவும் செய்கின்றன.

**கே:** *ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இளைஞர்களின் கோரிக்கைக்கு அமைவாக மாற்றம் ஒன்றுக்குத் தயாராக இருப்பதாக கூறுகின்றார். அதே வேளை வன்முறை ரீதியான போராட்டத்தை முழுமையாக எதிர்ப்பதாகவும் தெரிவிக்கின்றார். அவரின் இந்தக் கூற்று ஒன்றுக்கொன்று மாறுபட்டதல்லவா?*

## போராட்டக்காரர்களை கைது செய்து, சித்திரவதை செய்கிறார்கள்

**ப:** ரணில் விக்கிரமசிங்க ஆரம்பம் முதலே பேசுவது ஒன்றும் செய்வது வேறொன்றாகவுமே உள்ளது. அவர் ராஜபக்சக்களின் குடும்பங்களை காப்பாற்ற வந்தவர் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை. எனவேதான் நாங்கள் விடப்பிடியாக 'இந்தப் பதவியில் இருந்து அவர் அகலவேண்டும். பிரதமர் பதவியைக் கூட வகிக்கக்கூடாது' என்று குறிப்பிட்டிருந்தோம். மே 9 ஆம் திகதி எமது போராட்டத்தின் மீது தாக்குதலினை தொடுத்தவர்கள் அரச ஆதரவு பெற்ற காடையர்கள் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. போராட்டக்காரர்கள் 75 நாள்களாக எந்தவன்முறையையும், எங்குமே பிரயோகிக்கவில்லை. 75 நாட்களாக அமைதியாக இருந்து ' கோத்தா கோஹோம்' என்ற கோரிக்கையினை முன்வைத்து தொடர்ச்சியாகப் போராடினோம். பின்னர் மக்கள் திரண்டு வந்து எங்களுக்கு ஓர் ஆதரவைத் தந்தனர். மக்கள் எவ்வித தூண்டலுமின்றி, தன்னெழுச்சியாகவே ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் போன்றவற்றுக்குள் நுழைந்தார்கள் என்பது அங்கிருந்த அனைவருக்கும் தெரியும். அவற்றை நான் திட்டமிட்ட வன்முறையாகப் பார்க்கவில்லை. நாங்கள் யார் மீதும் வன்முறையைப் பிரயோகிக்கவில்லை. அரசியல்வாதிகளின் வீடுகள் எரிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் இன்னுமே முழுமையான விசாரணைகள் இடம்பெறவில்லை. அந்த வீடுகள் எரிக்கப்பட்டமைக்கும், எங்களுடைய போராட்டக்காரர்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. அப்படியான முனைப்பு யாருக்குமே இருந்ததும் கிடையாது. அதனைச் செய்ய நாங்கள் யாரும் தூண்டியதும் கிடையாது. எனவே அது தொடர்பாக முழுமையான விசாரணைகள் முடிவுறும் வரை அவர்கள் எங்கள் மீது குற்றம் சுமத்த முடியாது. நாங்கள் வன்முறையில் ஈடுபடவில்லை என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

**கே:** *அப்படியானால் அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு தீ வைத்தல் போன்ற வன்முறையில் ஈடுபட்டவர்களை கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்பதில் உங்களுக்கும் உடன்பாடா?*

**ப:** ஆம். அதில் எங்களுக்கு சிக்கல் இல்லை. அவ்வாறு வன்முறையில் ஈடுபட்டோர் மீது நிச்சயம் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனென்றால் நாங்கள் வன்முறைக்கு முற்றுமுழுதாக எதிரானவர்கள். விரோதமானவர்கள். நாங்கள் வன்முறைகளை ஆதரிப்பவர்கள் இல்லை. எங்களுடன் இருந்தவர்கள் , எங்களுடன் தொடர்ந்து செயற்பட்டவர்கள் யாருமே அந்த வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட வாய்ப்பில்லை என எனக்கு நன்கு தெரியும்.

**கே:** *அண்மையில் இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தை நாடாளுமன்றில் முன்வைக்கும் போது எதிர்கட்சிகள் கூட அதனை எதிர்க்கவில்லை. வெறும் 5 நாடாளுமன்ற உறுப்பினர்களே எதிர்த்தார்கள். ஆகவே அரசியலமைப்பின் படி இந்த அரசை ஏற்றுக்கொள்வதில் உங்களுக்கு என்ன சிக்கல்?*

**ப:** ஒன்றை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். தற்போதைய அரசாங்கமும், ரணில் விக்கிரமசிங்க என்ற ஜனாதிபதியும் முற்றுமுழுதாக இந்த போராட்டக்களத்தின் ஊடாக ஏற்பட்ட மாற்றத்தின் இடைவெளியைப் பாவித்து வந்தவர்களே. இப்படியான ஜனநாயகப் போராட்டத்தை இலங்கை தன் வரலாற்றில் இதுவரை கண்டதில்லை. இலங்கை வரலாற்றில் எந்வொரு ஜனாதிபதியும் தன்னுடைய பதவிக்காலம் முடியமுன்னர் இடையில் பதவியை துறந்து நாட்டை விட்டு ஓடியது கிடையாது. அந்தளவுக்கு இந்தப் போராட்டத்தை முழுமனதுடன் - சில உயிர்களைத் தியாகம் செய்து - போராட்டக்காரர்கள் செய்திருந்தார்கள். அவர்களுக்கு பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. அவர்கள் அனைவரும் அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தார்கள். எங்களுக்கும் எதிர்பார்ப்பு இருந்தது. ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு முறையும் - அடிக்கடி- ஒரே விடயத்துக்காகப் போராட்டத்தை செய்யமுடியாது. எல்லோருக்கும் வாழ்க்கை இருக்கின்றது. ஆகவே இம்முறை கிடைத்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாங்கள் எதிர்பார்க்கின்ற பொறிமுறை மாற்றத்தை உருவாக்க நினைக்கின்றோம். இந்த நாட்டில் அரசியலமைப்பு முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும். இந்த நாட்டின் தேசியக் கொடி மறுசீரமைக்கப்படவேண்டும். தமிழ் மக்கள் நீண்ட காலமாக எதிர்பார்க்கின்ற இனப்பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்படவேண்டும். தமிழ் மக்களுக்கு நீண்டகாலமாக வழங்கப்படாமல் இருக்கின்ற நீதி விடயங்கள், பொறுப்புக்கூறல் நடவடிக்கைகள் இப்படி பல விடயங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். இவையே எமது எதிர்பார்ப்பாகவும் இருந்தன. இவை அனைத்தும் பொறிமுறை மாற்றத்தின் ஊடாகத்தான் ஓரளவேனும் சாத்தியப்படும் என்பது வடக்கு-கிழக்கில் இருந்து வந்த தமிழன் என்ற ரீதியில் நான் நன்கு உணர்ந்திருந்தேன். எனவே தான் பொறிமுறை மாற்றத்துக்கு முழுமையான ஆதரவை நான் வழங்கி இருந்தேன். அதைத்தான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். எனவே நாட்டின் பழைய அரசியலமைப்புக்குள், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைக்குள், பழைய நாடாளுமன்ற முறைக்குள்ளேயே தொடர்ந்தும் நாடு இயங்குவதால், நெருக்கடி நிலை அதிகரிக்குமே தவிர அபிவிருத்தி ஒருபோதும் ஏற்படாது. எல்லாமே ஆரம்பித்த புள்ளியில் தான் திரும்பத் திரும்ப வந்து நிற்கும் . அவ்வாறான அபத்தநிலை உருவாகிவிடுமோ என்பதே எங்கள்பயம். எனவேதான் அதை மாற்றியமைத்து, புதியதொரு பொறிமுறைக்கூடாக நாடு எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு, அபிவிருத்திப் பாதையில் பயணிக்க வேண்டுமென விரும்புகின்றோம்.

**கே:** *அரகலய போராட்டக்காரர்கள் மீது அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை பிரயோகித்துள்ளது. தற்போது அந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராகவும் போராடுகிறீர்கள். இதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்று நினைக்கின்றீர்களா?*

**ப:** பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக இரண்டு வாரத்துக்கும் மேலாக மிகதீவிரமாகப் போராடி வருகின்றோம். தூதுவர்களை சந்தித்து பேசிவருகின்றோம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்ற உறுதியோடு நாம் செயற்பட்டுவருகின்றோம். அது போன்று மகஸின் சிறைச்சாலைக்கு முன்பாகவும் போராட்டமொன்றை நடத்தி இருந்தோம். அந்தச் சிறையில், எங்களுடைய 12 அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருக்கின்றார்கள்., அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருக்கிறோம். வெகுவிரைவில் பயங்கரவாதத் தடைச்சட்டம் இல்லாமல் போகுமென நான் நம்புகின்றேன்.

**கே:** *அரகலய போராட்டத்தின் மூலம் மஹிந்தவை பிரதமர் பதவியில் இருந்தும், கோத்தாபயவை ஜனாதிபதி பதவியில் இருந்தும் அகற்றிய போதும், இப்போதும் பொதுஜன பெரமுன தான் நாடாளுமன்றில் பெரும்பான்மையைக் கொண்ட கட்சி. அந்தக் கட்சியூடாக , பெரமுன வசமிருக்கும் பெரும்பான்மை மூலம், தமது முன்னைய அதே அரசியலை ராஜபக்சக்கள் எந்தத் தடையுமில்லாமல் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் கோத்தாபயவை பதவி விலகச் செய்ய முன்னர், நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை வைக்குமாறு கோரியிருக்கலாம் என இப்போது நினைக்கிறீர்களா?*

**ப:** அப்படியல்ல. நாங்கள் நாடாளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் ஆரம்பத்தில் பேசியிருந்தோம். அப்போது, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் பெரும் பொருட் செலவில் மீண்டும் ஒரு தேர்தல் நடத்த வேண்டி வரும். எனவே அந்தத் தேர்தலில் மீண்டும் இப்போதிருப்பவர்களே வரக்கூடிய வாய்ப்பிருந்தது.

இலங்கையில் இருக்கும் மிகப்பெரிய பிரச்சினை , நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையே. எனவே அதை முதலில் இல்லாதாக்கவே நாம் கடுமையாகப் போராடினோம். இந்த அரசியல்வாதிகள் செய்த தவறுகளை, மோசடிகளை மக்களுக்கு நாம் இனம் காட்ட வேண்டும். அத்தோடு சர்வகட்சியினரையும் இணைத்தை இடைக்கால அரசாங்கத்தையும், எங்களால் அமைக்கப்படும் மக்கள் சபையையும் இணைத்து இந்த நாட்டில் பொருளாதார, சமூக, அரசியல் நடவடிக்கைகளை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதன் மூலம் முன்னையவர்கள் எவற்றையெல்லாம் செய்யத் தவறியிருந்தனர் என்பதையும் வெளிப்படுத்த முடியும். எனவே அரசியல்வாதிகளின் உண்மைமுகத்தை தோலுரித்துக் காட்டுவதற்காகவே, நாம் நாடாளுமன்றத்தை அப்போதே கலைத்து தேர்தலுக்குச் செல்லுமாறு விடாப்பிடியாக நிற்கவில்லை.

மிகச்சிறப்பான ஓர் எதிர்காலத்தினை நோக்கி நகரவேண்டும் என்பதற்காக, தற்போது இருக்கும் நாடாளுமன்றத்தின் சிறந்த அரசியல்வாதிகளுடன் இணைந்து நாங்களும் ஒரு மக்கள் சபையை அமைத்து இரண்டும் இணைந்தவழியில் பயணிப்பதே எங்கள் கோரிக்கையாக இருந்தது. அதனையே எமது ஆறு அம்சக் கோரிக்கையில் முன்வைத்திருந்தோம்.

**கே:** *ஜனநாயக ரீதியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மக்கள் பிரதிநிதிகள்தான் . அப்படியானால், நீங்கள் கூறும் மக்கள்சபைக்கு எந்தளவு தூரம் மக்களின் ஆதரவு இருக்கும்?*

**ப:** அப்படியல்ல. மக்களின் ஆதரவு அரசியல்வாதிகளுக்கு எந்தளவு இருக்கின்றது என்பதை நீங்கள் முதலில் உணர்ந்துகொள்ளவேண்டும். அரசியல்வாதிகளுக்கு மக்களின் ஆதரவு அந்தந்தத் தேர்தல்களின் போது இருந்தாலும் கூட, பின்னர் மக்கள் அவர்கள் மீது வெறுப்புணர்வையே கொண்டிருக்கின்றார்கள். ஏனென்றால் அவர்கள் கடமைகளைச் சரியாக நிறைவேற்றுவதில்லை. நாங்கள் தற்போதும் மக்கள் சபைகளை மேற்கொண்டே வருகின்றோம். அதற்கான செயற்திட்டங்கள் ஒவ்வொரு வாரமும் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. மக்கள் சபைகள் இனி உங்கள் கண் முன்னே வரும். நிறைய மக்கள் சபைகள் இங்கு உருவாகும்.

(07 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04



# எனது ஊரிலும்தான்...

சி.கதிர்காமநாதன்

எனக்கு வேலையில் மனம் ஓடவில்லை. மாலை முதலாளியின் மகனிடம் பணம் வாங்கிக் கொண்டு கிளாக்கர் ஐயாவுடன் திரும்பிக் கொண்டிருந்தேன். பிரதான வீதியின் சந்தியிலே இராணுவச் சோதனை நடந்து கொண்டிருந்தது. அவர்களுக்கிடையே தெரிந்த எம்மவர்கள் சிலர் கைது செய்வதில் மும்முரமாக உதவிக் கொண்டிருந்தனர். அன்று அகப்பட்ட இருபது பேரில் நானும் ஒருவனாக இருந்தேன். கிளாக்கர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவர்கள் கேட்பதாக இல்லை. எல்லோரையும் உள்ளே அடைத்துவிட்டார்கள். அன்றிரவு நான் வாங்கிய அடிகள் வாழ்நாளில் நான் அனுபவித்திராதவை. முதலாளியின் மகன் கொடுத்த பணத்துடன் மனநிம்மதியையும் நான் பறிகொடுக்க வேண்டியதாயிற்று.

மறுநாட்காலை எம்மை விடுவித்தபோது இந்தியாவுக்குச் சென்று விடுவதென்றே நான் தீர்மானித்துவிட்டேன்.

◊◊◊◊◊◊◊

குளிர்ந்த காற்று முகத்தில் அடித்தது.

வாகனங்கள் எங்களைக் கடந்து போய்க் கொண்டு இருந்தன. நேரம் பத்து மணிக்கு மேல் இருக்கும். ஓட்டோ வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

"எப்படி இருக்குது தமிழ்நாடு?" முதலாளியின் மகன் என்னைப் பார்த்து கேட்டார்.

நான் என்ன சொல்வது? கொடுத்து வைத்த சனங்கள். இந்த ஆர்ப்பாட்டங்கள், அமளிகள் எங்களுக்கு எப்போது வரும்?

சின்னக் குழந்தைபோல வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தேன். இந்த நேரத்தில் எங்கள் ஊர்ப்பக்கம் எல்லோரும் நித்திரையில் இருப்பார்கள். எங்கோ துப்பாக்கி வேட்டுக்கள் கேட்கும். நாய்கள் இடைவிடாமற் குரைக்கும். நித்திரை கலைந்து போகும்.

ஓட்டோ எங்கெங்கோ சுற்றிவிட்டு ஒரு குறிப்பிட்ட இடத்தில் நின்றது. மூன்று மாடிக் கட்டடம் நான்கு தடுப்புச் சுவர்களுக்கு மத்தியில் அடங்கிக் கிடந்தது. விளக்கு வெளிச்சத்திலே 'சாந்தி அப்பார்ட்மெண்ட்' என்ற ஆங்கில எழுத்து பிரகாசித்தது. கொண்டு வந்த பையைத் தூக்கிக் கொண்டு வாசலை அண்மித்தபோது உட்கார்ந்தபடி அரைத்தூக்கத்தில் இருந்த இரவுக்காவலாளி சட்டென்று எழுந்தார். "வாங்க சார். ஊர்ல இருந்து இப்பதான் வர்றீங்களா?" என்றபடி முதலாளியின் மகனின் பையைத் தூக்கிக் கொண்டு படியேறி வந்தார்.

A பிரிவில் 4 ஆம் இலக்கம் பொறிக்கப்பட்ட கதவினைத் திறந்து உள்ளே போனோம். முதலாளியின் மகன் அறைவிளக்கைப் போட்டார். சிலந்தி வலையோடு தூசு படிந்து கிடந்தது. இரவுக்காவலாளி போய்விட்டார்.

அறையைக் கூட்டிவிட்டுப் படுக்கத் தீர்மானித்த போது ஒரு பெண்மணி உள்ளே வந்தாள்.

"என்ன இப்பதான் வர்றீங்களா?"

"இப்பதான் வந்தனாங்கள். செட்டியார் இல்லையோ?. பச்சை தண்ணி செம்பிலை தாங்கோ..."

அந்தப்பெண் தண்ணீர் தந்துவிட்டு எதிர்வீட்டுக்குப் போவது தெரிந்தது.

"இவதான் எங்கட பஸ் பார்ட்னர். செட்டியாரின் மனுசி. எதிர்வீடுதான். உமக்குப் பிரச்சினை இல்லை"

காலையிலே கூட்டிப் பெருக்கி, குளித்துவிட்டு வெளியே வந்தபோது முதலாளிக்குத் தெரிந்தவர்கள் சுகம் விசாரித்தார்கள்.

"என்ன சார் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை?"

"உங்களுக்கெல்லாம் பிராப்ளம் இல்லையோ?"

"இங்க வந்தப்புறம் உங்களுக்கு 'சேப்ரி' தானே?"

முதலாளியின் மகன் சாமர்த்தியமாக' முதலாளித்துவமாகப்' பதிலளித்தார்.

நான் ஒன்றும் பேசவில்லை.

'சரவணபவன்' ஹொட்டலுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு வந்தோம்.

"இப்படிச் சாப்பாடு அங்க கிடைக்குமோ?" முதலாளியின் மகன் கேட்டார்.

உண்மைதான்.

அடுத்த சில நாட்கள் செட்டியாரின் காரிலே 'எக்மோரில்' அமைந்துள்ள பஸ் கொம்பனிக்கு அடிக்கடி போய்வந்தோம். சில தெருக்கள் எனக்கு நன்கு பரிச்சயமாகத் தொடங்கின. ஒருநாள் இப்படிக் காரிலே போகும்போது முதலாளியின் மகன் சொன்னார்.

"செட்டியார்! இவர் இங்கதான் இருக்கப் போறார். இவரிடம் பஸ் கணக்குகளைக் கொடுத்துவிடுங்கோ"

செட்டியாரும் தலையாட்டினார்.

இராணுவச் சோதனை நடந்து கொண்டிருந்தது. அவர்களுக்கிடையே தெரிந்த எம்மவர்கள் சிலர் கைது செய்வதில் மும்முரமாக உதவிக் கொண்டிருந்தனர். அன்று அகப்பட்ட இருபது பேரில் நானும் ஒருவனாக இருந்தேன். எல்லோரையும் உள்ளே அடைத்து விட்டார்கள். அன்றிரவு நான் வாங்கிய அடிகள் வாழ்நாளில் நான் அனுபவித்திராதவை.

செட்டியார் இல்லாதபோது இதையும் இடையிடையே சொல்வதுண்டு.

"செட்டியார் சுத்திறதிலை வலுவிண்ணன். கொஞ்சம் ஓடியாடித்தான் கணக்கு வாங்கவேணும்"

இடையிலே ஓரிரண்டு படங்கள் பார்த்தோம்.

வாழ்க்கை இப்படி இருக்கும்போது எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. காலையிலே புறப்பட்டுப் போனால் 'என்ன ஆனார்களோ?' என்று மற்றவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

"பிடிச்சுக்கொண்டு போறாங்கள்"

"வழியிலை சுட்டுப் போட்டாங்கள்"

"குண்டு போட்டு நாலுபேர் சரி. வீடு தரைமட்டம்"

"ஆமி வெளிக்கிட்டாங்கள். சண்டை நடக்குது. பெடியள் கண்ணிவெடி வைச்சிட்டாங்களாம்"

"ஹெலியிலை இருந்து சுடுகிறாங்கள்"

இவ்வாறான செய்திகள் ஒவ்வொரு நாளும் பரவும் அவலவாழ்க்கை இல்லை. எங்களின் நிம்மதிக்காக ஓடிவருவதற்கென்று ஒரு நாடு பக்கத்தில் இருப்பதே போதும்.

முதலாளியின் மகன் ஊருக்குப் போய்விட்டார். அவருக்கு வந்த வேலை முடிந்துவிட்டது. நான் அடிக்கடி எக்மோர் போவதனால் மாம்பலம் புகையிரத நிலையத்திலி ருந்து மின்சார வண்டியிற் தான் பயணம். செட்டியாரிடம் பஸ்கணக்குகளை வாங்க முடிந்தது. காலையில் நாகர்கோவிலிருந்து பஸ் வந்துவிடும். அன்றாடம் நடக்கும் திருத்தவேலைகள் முடித்து கழுவித் துடைத்து. பின்னேரம் 3 மணிக்கு மேல் எங்கள் அலுவலகத்தின் முன் நிறுத்தவேண்டும். சனங்கள் வந்து பஸ் நிரம்பியதும் நாலுமணிக்குக் கிளம்பிப் போய்விடும். அதனோடு அன்றைய வேலையும் முடிந்துவிடும்.

பின்னேரங்களில வாசலில் நின்ற நாகலிங்கமரத்தடியிலே போயிருப்பது வழக்கமாகிவிட்டது. எங்கள் இடத்திலே குடியிருப்போர் என்னைப் பார்த்தும் பாராதது போலச் சென்றுவிடுவார்கள். யாரும் நெருங்கிப் பழக முன்வரவில்லை.

"என்ன காரணம்?"

முதலாளியின் மகன் இருந்தபோது ஒரு இடமும் சுற்றிப்பார்க்க முடியவில்லை. நான் குடியிருக்கும் இடத்தின் முன்னே நீண்டுபோகும் தெரு எங்கே போகிறது? அது கூட இன்னமும் தெரியாது.

இரவு பத்து மணிக்கு மேலேதான் வெளிச்சத்தம் நின்றது. ஒரே நிசப்தம். குழாயிலே தண்ணீர் அடித்துக் கொண்டிருந்தவர், வேலை முடிந்ததும் என்னிடம் வந்தார்.

"பேசறதுக்கு ஒருத்தரும் இல்லைப்போல" என்றார். நான் மெல்லச் சிரித்தேன். அவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். பெயர் ஸ்ரீராம். டெல்லியில் வேலை பார்க்கிறாராம். அவரது பேச்சு வித்தியாசமாகத் தெரிந்தது. எங்கள் நிலையை நன்கு புரிந்தவர் போலத் தென்பட்டார்.

(தொடரும்)

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கோத்தா நாட்டுக்குள்...

ஒரு விடயத்தை நாங்கள் மறந்துவிடக்கூடாது. ஒரு நாட்டின் முழுமையான இறைமை என்பது மக்களிடம்தான் இருக்கின்றது. அரசியல் பலம் என்பதும் மக்களின் கைகளில்தான் இருக்கின்றது. அதை நாங்கள் வலுவாகப் பிரயோகிக்கமுடியாமல் தனித்தனியே இருக்கின்றோம் என்பதுதான் பிரச்சினை. எனவே இவ்வாறான மக்கள் நலன் சார்ந்தோரை ஒருங்கிணைக்கும் சபையாக மக்கள் சபை இருக்கும். நாங்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்ட மக்கள் சபை, போராட்டக்காரர்களை உள்ளடக்கிய சபை தான். அது நாடாளுமன்றில் தொழிற்படாது விட்டாலும் . வெளியில் இருந்து நாடாளுமன்றத்துக்கு அழுத்தம் கொடுக்கும் குழுவாகவும் , நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கும் சந்தித்து பேசி மக்கள் பிரச்சினைய அவர்களுக்கு சொல்கின்ற ஒரு குழுவாகவும், நாட்டை சரியான பாதைக்கு கொண்டு செல்வதை உறுதிப்படுத்தும் ஒரு அமைப்பாகவும் இருக்கும். இந்த மாற்றத்தை போராடி பெற்றவர்கள் என்ற அடிப்படையில் போராட்டக்காரர்கள் அப்படியான ஒரு கோரிக்கையை முன்வைத்திருந்தார்கள்.

**கே:** *நாட்டின் இன்றைய நிலைக்கு அனைத்து கட்சிகளும் பொறுப்பு. இந்தநிலையில், அரகலய போராட்டக்காரர்கள் நேரடி அரசியலில் புதுக்கட்சியாக செயற்பட போகின்றனர் என வெளிவரும் தகவல்கள் பற்றி..?*

**ப:** இது நீண்டகாலமாக கேட்கப்படும் கேள்விதான். ஆனால் பொறி முறை மாற்றம் ஒன்று ஏற்படாமல், நாங்கள் இதே இடத்தில் கட்சியாகவோ, தனிப்பட்ட ரீதியிலோ அரசியல்வாதிகளாக மாற்றம்பெறுவோமானால் எவ்வித நன்மையும் இல்லை. இங்கிருக்கின்ற அரசியல்வாதிகள் தங்களுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாமல்தான் இருப்பார்கள். அல்லது பொய்வாக்குறுதிகளை வழங்கிக் கொண்டிருப்பார்கள்.

நாட்டின் பொறிமுறை மாற்றத்தின் ஊடாகத்தான் பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். பொருளாதார முன்னேற்றம் ஏற்படாமல் அரசியல்வாதிகளாக மாறி பயனில்லை. அப்படி மாறினால் மக்களை நாமும் ஏமாற்றும் நிலையே ஏற்படும். ஆகவே உண்மையில் மக்களுக்காக போராடியவன் என்ற ரீதியில் ஒரு அழுத்தக்குழுவாகச் செயற்படுவதே எங்கள் நிலைப்பாடு.

ஆனால் காலத்தின் கட்டாயத்தால், தனிப்பட்ட ரீதியில் யாரும் அரசியலுக்கு செல்லலாம்.

ஆனால் தற்போது வெளியில் இருந்து அழுத்தம்கொடுக்கும் குழுவாக மக்களின் பலமாக மக்களுடன் இணைந்து பயணப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.தற்போது நாடாளுமன்றம் செல்வதோ அல்லது கட்சியாக மாறும் நோக்கமோ நம்மிடமில்லை.

**கே:** *அரகலய போராட்டத்தால் , நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவியையே உதறிவிட்டு ஓடிப்போன கோத்தாபய, மீண்டும் நாட்டுக்கு வந்துவிட்டாரே?*

பதில் கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதி என்ற பதவியில் இருந்து விலகவே கூறினோம். நாட்டை விட்டு ஓடுமாறு நாம் கூறவில்லை. மாறாக அவர் நாட்டைவிட்டு ஓடியதை எதிர்த்தோம். முடிந்தவரை ஓடியதைத் தடுத்தோம். அவர் நாட்டில் இருக்கவேண்டும். அப்போதுதான் அவர் ஜனாதிபதிப் பதவியில் இருந்து மேற்கொண்ட தவறுகளுக்காக பல வழக்குகளை அவர் மேல் தாக்கல் செய்ய முடியும். எதிர்காலத்தில் பல வழக்குகளை அவர் சந்திப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 101



அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ...............................

..............................................................

கையொப்பம்:..............................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1.'வெகு சிறப்பு' என்பதைக் குறிக்கும் சொல். 4. ஒருவகைத் தானியம் 6. நிற்பாட்டு 7. ஒருவகை மீன் 8. வல்லமை 11. சிரசு 12. திறன்மிக்க தன்மை 14. தொண்டையிலிருந்து எழுவது 15. இருபால் இணைவில் உருவாவது 16. தீயைத் தொட்டால் 17. மனைவி 18. வேள்வி 19. முக்கனிகளுள் ஒன்று 20. யானைக்கு மட்டும் உண்டு 21. ஒட்டுவது இதனால்

## மேலிருந்து கீழ்

1. நைவேத்தியம் செய்தது 2. பெண்கள் 3. வறுமைத்தன்மை 4. பூச்சாகப் படிவது 5. ஓர் அளவீடு 7. பண்பற்ற தன்மை 9. பர்வதம் 10.திறன் 13. மாமரத்தில் ஒட்டி வளர்வது 14. தலையில் முடிவது 16. நலம் 17. கிணற்றில் நீர் அள்ளுவதற்கு உதவுவது 18. ஏது 19. நட்பு அல்ல.

### சொற்சிலம்பம் போட்டி 100 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சுதந்திரம் 6. வாகு 7. கவி 8. தண் 9. சதிபதி 11. கரடி 12. மாரி 13. முடவன் 15. உன் 16. அருணன் 17. காடு 18. நாகம் 19. சிலம்பு 21. தின் 22.வலம்புரி

**மேலிருந்து கீழ்**

1. சுவாசம் 2. தகுதி 3. திகதி 4. ரவி 5. பண்டிதன் 10. பட்டணம் 11. கரி 12. மான் 13. முருகன் 14. வன் 15. உடும்பு 16. அநாதி 17. காலம் 19. சில 20. புரி

**சொற்சிலம்பம் போட்டி இல.101**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**23.09.2022** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

**ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=**

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 100 இல் வெற்றி பெற்றோர் விவரம்

**1 ஆம் பரிசு**

**கலைவாணி,**
49/2 பெரேரா வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு

**2 ஆம் பரிசு**

**இரா.சந்திரசேகரன்**
ஏழாலை, யாழ்ப்பாணம்

**3 ஆம் பரிசு**

**இ.குலசிங்கம்**
5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு

**4 ஆம் பரிசு**

**சு.மறின் அபிஷாயினி**
பாண்டியன்தாழ்வு

**5 ஆம் பரிசு**

**[illegible]**
முள்ளியவளை
முல்லைத்தீவு

# யாழ்ப்பாண வரலாறு

1505–1948 வரை

ந.பரமேஸ்வரன்

அந்தச் சாமியாரின் பிரசங்கத் தின் சாராம்சம் பின்வருமாறு 'கிறிஸ்தவக் கடவுள் எல்லாம் அறிந்தவர் அல்லர். அவருக்கு உலகத்தைப் படைப்பதற்கு ஆறு நாள் எடுத்தது. ஜெகோவா சர்வவல்லமையுள்ளவர் அல்லர். ஆதாமையும் ஏவாளையும் ஏடன் தோட்டத்தில் படைத்தார். அவருக்குத்தெரியும். அவர்கள் பாவம் செய்வார்கள் என்று. ஆனால் அவர்களை பாவத்தில் இருந்து பாதுகாக்க அவரால் முடியவில்லை. அவர் பலம் வாய்ந்தவரல்லர். கிறிஸ்தவத்தில் சாத்தானே கடவுளை விடப் பலம் வாய்ந்தவன். சலனப்படுவதற்கும் பாவம் செய்வதற்கும் சொர்க்கம் தான் இடம். கடவுள் நல்லவரல்லர். அவர் கிறிஸ்தவர்களை மட்டுமே பாதுகாப்பார். உலகில் சமாதானத்தை உருவாக்கும் பொருட்டே கிறிஸ்து பிறந்தார் . ஆனால் அவரால் ஏரோது மன்னனால் கொல்லப்பட்ட சிறுவர்களைக் காப்பாற்ற முடியவில்லை. அவர் எகிப்தில் போய் ஒளித்து விட்டார்'

சாமியாருடைய கடைசிப்பிரசங்கம் சனிக்கிழமை இடம்பெற்றது. அடுத்த நாள் எமது அறநெறிப் பாடசாலை மாணவர்கள் அவர் கூறிய கருத்துகளைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர். வகுப்பு முடிந்ததும் அரை மணி நேரம் கேள்வி கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்கினோம். ஒவ்வொருவராக கேள்வி கேட்டார்கள். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பூரண விளக்கத்தை நாங்கள் வழங்கினோம். ஆனைக்கோட்டை, நவாலி அறநெறிப் பாட



சாலைகளிலும் சாமியாரின் கருத்துகள் எதிரொலித்தன. நாங்கள் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தினோம் . இந்த அறநெறிப் பாடசாலைகளில் 40,45 உயர்சாதி மாணவர்கள் பயின்று வருகின்றனர். இவர்கள் மிகவும் குழப்பமான நிலையில் காணப்பட்டனர்.

நாங்கள் அவர்களுக்கு தெளிவூட்டினோம். அடுத்த சில தினங்கள் நாங்கள் எமது பெரிய பாடசாலைகளில் சாமியாரின் கருத்துகள் பற்றிய வினாக்களுக்கு ஒவ்வொருவராக விளக்கமளித்தோம்.

'உங்கள் மனதில் இரண்டு சக்திகள் காணப்படுகின்றன ஒன்று சுயநலம், மற்றது சுயநலமின்மை. சைவசமயத்தில் சுயநலமின்மை காணப்படுகிறதா?' என நாங்கள் அவர்களிடம் கேட்டோம். கிறிஸ்தவ சபைகள் உங்களது உண்மையான நண்பர்கள் அல்ல. அவர்கள் உங்களைப்பற்றி அக்கறைப்பட மாட்டார்கள் என்றெல்லாம் சாமியார் பிரசங்கம் செய்து வருகிறார்.

மானிப்பாய் மக்களுக்குத் தெரியும் , நாங்கள் அவர்களை விரும்புகிறோம் என்று. இந்த



தங்கமுத்து

மக்களின் மனங்களை வெல்வதற்கு கடவுள் ஆசீர்வதித்துள்ளார். நாங்கள் யாழ்ப்பாணத்தின் மத்திய பகுதியில் சைவர்களுடன் பகிரங்க விவாதங்களை நடத்தினோம்.

**மானிப்பாய் . ஏப்ரல் 28, 1882.**

ஒரு கடவுள் விக்கிரகத்துக்குப் புக்கை பொங்கிப்படைப்பதை எங்காவது கண்டிருக்கிறீர்களா? நாங்கள் இலங்கையில் இதைத்தான் தினமும் காண்கிறோம். எமது மானிப்பாய் இல்லத்திலிருந்து வீதியைக் கடந்தவுடன் பிள்ளையார் கோயில் ஒன்று உள்ளது. இந்த பிள்ளை யர் விக்கிரகம் யானைத் தலையுடன் காணப்படுகிறது. இவர் அறிவை வழங்கும் கடவுளாகக் கருதப்படுகிறார். தாய்மார் பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்துச்செல்லும் போது பிள்ளையாரை வணங்கி விட்டே செல்கின்றனர். பிள்ளையாரை வணங்கினால் தங்களது பிள்ளைகள் சிறந்த அறிவாளிகளாக வருவார்கள் என்பது இவர்களின் நம்பிக்கை .

இவர் தான் முழுமுதற்கடவுள் என சிறுவர்களுக்கு போதிக்கப்படுகிறது. இவர்களுக்குத் தெரியாது யேசு சிறுவர்களுடன் எவ்வளவு தூரம் நட்பாக இருந்தார் என்று.

இந்தக்கோயிலில் பண்டாரம் என்று ஒருவர் இருக்கிறார்.

தினமும் கருங்கல் விக்கிரகத்தை யும் பித்தளை விக்கிரகத்தையும் பால், இளநீர், தண்ணீர், பன்னீர் என்பவற்றால் அபிடேகம் செய்வதுதான் அவருடைய வேலை. கடவுளுக்கு வழங்கப்படும் காணிக்கைகளையும் இவர் பெற்றுக்கொள்கிறார்.

இவருக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவளது பெயர் தங்கமுத்து. தங்கம் என சுருக்கமாகக் கூப்பிடுவார்கள். தங்கமுத்து என்றால் 'Gold Pearl' என்று அர்த்தம். எமது பாடசாலையில் உள்ள அறுபது மாணவிகளுள் முதல் மாணவியாக அவள் திகழ்ந்தாள். எமது அறநெறி பாடசாலை மாணவிகளுள் அவள் பைபிள் வாசகங்களை தங்குதடையின்றி உச்சரிக்கப் பழகி விட்டாள்.

அவள் பாடசாலைக்கு வரத்தொடங்கிய ஆரம்ப நாட்களில் நெற்றியில் விபூதி பூசிக் கொண்டு தான் வருவாள். இப்போது அவள் மத்தியூவின் பைபிள் வாசகங்களை ஒப்புவிக்கப் பழகிவிட்டாள். நாங்கள் இம்முறை நத்தாருக்கு தமிழ் புதிய ஏற்பாடு ஒன்றை அவளுக்கு பரிசாக அளித்தோம்.

தங்கத்தின் பாடசாலைக்குப் பொறுப்பான உள்ளூர் கிறிஸ்தவ ஆசிரியை ,தங்கத்தின் மீது விசேட அக்கறை எடுத்து கவனித்து வந்தார்.

தங்கம் சில வேளைகளில் பெற்றோருக்கு தெரியாமல் வீட்டுக்கு அழைத்து சென்று தனக்காக பிரார்த்தனை செய்யுமாறு கேட்பாள். யாழ்ப்பாணத்தவர்கள் கல்வி கற்க விரும்புகின்றனர். ஆனால் கிறிஸ்த வத்தை தழுவ விரும்பவில்லை. அவர்கள் கிறிஸ்தவத்தை வெறுக்கின்றனர்.

கிறிஸ்தவர்கள் குறைந்த சாதிக்காரரை தேவாலயத்தின் உள்ளே அனுமதிப்பதே இதற்குக்காரணம். குறைந்த சாதிக்காரர்களைத் தொட்டால் அழுக்கு என இவர்கள் நினைக்கின்றனர்.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org